விலை ரூபா 2-00 16 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 28 மாசி 25 ஐ. ஆகி 27 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (9—3—86) இதழ் 26

## இலங்கை இனப் பிரச்னை: ஜெனீவா மாநாட்டில் பல நாடுகளின் குரல்!

(ஜெனீவா)

ஜெனீவாவில் நடைபெறும் மனித உரிமைகளுக்கான ஐ. நா, சபையின் கமிட்டிக் கூட்டத்தில் இலங்கையின் இனப்பிரச்னை சம்பந்தமான விவாதங்களே முக்கியமாக (13ம் பக்கம்பார்க்க)

திக்கம் கடல் பகுதியில்—

## ராணுவப்படகுமீது தாக்குதல் சிலர்பலி பலரை காணவில்லை?

### பருத்தித்துறை முகாமிலிருந்து தொடர்ந்த பீரங்கிச் சூட்டினல் மீனவர் படகுகள் சேதம்!

[வல்வெட்டித்துறை]

திக்கம் கடல்பகுதியில் இயந்திரப்படகில் சென்றுகொண்டிருந்த இராணுவத்தினர்மீது போராளிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் சிலர் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் பலர் காயமைடந்திருக்கலாமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் மாலை ஐந்தரை மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றது.

வல்வெட்டித்துறை முகாமிலிருந்து பருத்தித்துறைமுகாமிற்கு இராணுவத்தினர் சென்றுகொண்டிருந்த இயந்திரப்படகை நோக்கி போராளிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இத்தாக்குதல் சம்பவத்தின் பின்னர், இக்கடல் பகுதியில் கடற்படையினரும், ஆகாயப்படையினரும் நேற்று முழுநாளும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்

இவர்கள் இராணுவத்தினர் சென்றபடகிலிருந்து காணுமல்போனவர்களைத் [13ம் பக்கம் பார்க்க)

● 'ஹெலிகொப்டர் வசதி' வழங்கியும்

# நாட்டைவிட்டு வெளியேறும் தோட்டத் துரைமார்கள்!

## தோட்ட நிர்வாகங்கள் ஸ்தம்பிக்கும் அபாயம்

(ஏ. வி. மாணிக்கம்)

மலைநாட்டுப் பகுதியின் தேயிலைத்தோட்ட உரிமையாளர்கள் பலரும் தோட்டத்துரைமார்களும் அண்மையில் இப்பகுதியில் இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்களை அடுத்து இங்கிருந்து வெளியேற ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களில் பலர் நாட்டைவிட்டு வெளியேறிச் சென்று வேறுநாடுகளில் குடியிருப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருவதாகவும் அறியப்படுகிறது. (13ம் பக்கம் பார்க்க)

## 'சென்ரி' சிப்பாய் ஸ்தலத்திலே பலி!

[வல்வெட்டித்துறை]

தொண்டமனறு இராணுவமுகாமுக்கு அண்மையில் நேற்றுக்காலை 'சென்ரி'க்கு நின்ற இராணுவச் சிப்பாய் மீது போராளிகள் தரப்பிலிருந்து துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதில் அந்த இராணுவச் சிப்பாய் ஸ்தலத்திலேயே பலியானதாகத் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## அவருக்கு லண்டனிலிருந்து குண்டு துளைக்காத கார்!

[கொழும்பு]

''ஜனாதிபதிக்காக 'பென்ஸ் - 500' ரகத்தைச் சேர்ந்த கார் ஒன்று விசேஷமாக இறக்குமதி செய்யப்பட்டது. அத்துடன் அந்தக்கார் குண்டுகள் துளைக்காதவண்ணம் அமைப்பதற்காகவும், சற்று அகலத்தைப் பெருப்பிப்பதற்காகவும், லண்டனுக்கு அனுப்பப்பட்டுள்ளது'' என்று கலவானத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சரத் முத்தெட்டுவேகம பாராளுமன்றத்தில் கூறினர். (ய-பி)

கடல்வலயச் சட்டத்தை எதிர்த்து—

## கடற்றொழிலாளர் 19ம் திகதி ஆர்ப்பாட்ட ஊர்வலம்!

[யாழ்ப்பாணம்]

கடல்வலயச் சட்டத்தை எதிர்த்து இம்மாதம் 19-ம் திகதி யாழ் நகரில் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடத்துவதென்று நேற்று யாழ்ப்பாணத்தில் கூடிய 16 கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

யாழ்.பேராலயத்திற்குச் சமீபத்திலுள்ள நிலையத்தில் நடந்த கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

யாழ். நகருக்கு வரமுடியாத சங்கங்கள் அந்தந்தப்பகுதியில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடாத்த உதவக்கோரி அந்தந்தப்பகுதி உதவி அரசாங்க அதிபரிடம் மகஜர் சமர்ப்பிப்பதென்று தீர்மானிக்சப்பட் [13ம் பக்கம் பார்க்க]

## வட இந்தியாவில் 200சிங்கள இளைஞருக்கு பயிற்சியாம்!

(கொழும்பு)

சுமார் 200 சிங்கள இளைஞர்கள், தமிழ்த் தீவிரவாதிகளுடன் சேர்ந்து வடஇந்தியாவில் பயிற்சிபெறுவதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் அரசாங்கத்துக்கு தெரியவந்துள்ளதாம்.

தமிழ்த் தீவிரவாதிகளுடன் (13ம் பக்கம் பார்க்க)

## பலாலியில் ஹெலிகொப்டர் தாக்குதல்!

[யாழ்ப்பாணம்]

பலாலி வீதியில் சென்றுகொண்டிருந்த வான் ஒன்றின் மீது, ஹெலிகொப்டரிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதில் ஒருநபர் பலியானர்.

நேற்றுக் காலை 9 மணியளவில் அச்செழுப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

பலாலி வீதியில் சென்றுகொண்டிருந்த வான் ஒன்றை (13ம் பக்சம் பார்க்க)

## கருணாநிதி விரைவில் எதிர்க்கட்சித் தலைவராவார்

(சென்னை)

தி. மு க. தலைவர் திரு மு. கருணாநிதி, விரைவில் மேல்சபையின் எதிர்க்கட்சித் தலைவராவார். அண்மையில், நடைபெற்ற தேர்தல்களினல், இவ்வாய்ப்பு தி மு கவுக்கு கிடைத்துள்ளது, இத்தேர்தல்களின் வெற்றி வேட்பாளர்களே மேல்சபையில் காலியாகவுள்ள இருபத்தொரு அங்கத்தவர்களை தெரிவுசெய்யவுள்ளனர். இதனல் மேல்சபையின் தி. மு, க. வலு அதிகரிக்கும். கருணாநிதி இப்போது ஒரு உறுப்பினர் மட்டுமே. (கெ)

## மட்டுநகரில் சமாதானவலயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதி சமாதான வலயமாகப் பிரகடனம் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக் (13-ம் பக்கம் பார்க்க)

# மீண்டும் பேச்சுவார்த்தையாம் போர்நிறுத்தமாம்

(புதுடில்லி)

இலங்கையின் இனப்பிரச்னையின தீர்வு சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் மீண்டும் இந்தியாவில் ஆரம்பமாகலாம் என இந்திய அரசு வட்டாரங்களில் பேசப்படுவதாகதெரியவருகிறது

இனப்பிரச்னையின் தீர்வு சம்பந்தமாக திம்புவில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் தோல்வியில்முடிவடைந்ததும், அதன் பின்னர் மறைமுகப் பேச்சுவார்த்தைகள் புதுடில்லியில் நடைபெற்று அதுவும் இப்போது முட்டுக்கட்டைநிலை அடைந்திருப்பதும் தெரிந்ததே!

தற்சமயம் இலங்கையில் [13ம் பக்கம் பார்க்க]

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

தென்னம் தும்பு அடிக்கும் மெசின் ஆறு செற் மிகவும் உன்னதமான நிலையில் விற்பனைக்குள்ளது. 68, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
C 1111

National Two in One-250 W. Set-washing Machine கலர் 17'' T.V, குளிர்சாதனப்பெட்டி மற்றும் பல பொருட்கள் விற்பனைக்குண்டு. S T L. வீடியோ கிளப், No. 3 நவீன சந்தை மேல்மாடி. திருநெல்வேலி.
C 1114

திருநெல்வேலி யாழ் வளாகத்துக்கு அருகாமையில் பாலாலி ரோட்டு முகப்புடன் வைத்தியசாலைக்கும், போசன சாலைக்கும் உகந்த நல்ல சுற்றாடலில் ஒருபரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 118, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
[C1052]

மண்கும்பான் மேற்கு 5ம் வட்டாரத்தில் பாடசாலைக் கருகில நன்னீர் கிணற்றுடன் வீடுகட்ட தோட்டம் செய்யக் கூடிய 13½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: ந. ஆனந்தராசா, மண்கும்பான் மேற்கு, வேலணை.
[C1103]

மண்கும்பான் மேற்கு பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக 20 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: ந. ஆனந்தராசா, மண்கும்பான் மேற்கு, வேலணை.
[C1104]

அல்ஷேஸன் நாய் குட்டிகள் விற்பனைக்குண்டு தொடர்பு: டானியல் பொனிபஸ், மவுண்காமல் ரோட், 16/1 வடக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம் [கமலா ஸ்ரோர்ஸ்க்கு பின்பக்கம்]
[C1105]

2 பரப்பு வீடுகட்டக் கூடிய காணி யாழ்ப்பாணம் புதிய அத்தியடி வீதியில் விற்பனைக்குண்டு. தொடர்பு: 10/1, சிவன்கோவில் வீதி, திருநெல்வேலி.
[C1120]

நல் இன [Fantail] பான்டெயில் ஆட்டப்புறு விற்பனைக்குண்டு. வெள்ளைப் புறுவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: ந வரதராசா 'பேவ்மென்ற்' வியாபாரம், சீமாட்டி பிடவைகடைமுன், யாழ்ப்பாணம். அல்லது ந. வரதராசா, மட்டுவில் தெற்கு சாவகச்சேரி.
[C1121]

Morris Minor EL சீரிஸ் நல்ல நிலையில் கார் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சிற்றி ஸொப், 18/2, விதானையார் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
[C1135]

வீட்டுத்தளபாடங்கள், அலுமாரிகள், மேசைகள், கட்டில் மெத்தைகள், Dressing Table, ஹோல் செற்றி, A,50 கார், பெல்சியம் சாப்பெற், தையல் மெஷின், Show case, கதிரைகள், மற்றும் மின் உபகரணங்கள், துணிவகைகள், புத்தக அல்மாரி, Belling Cooker, Pyrex கிளாஸ் வகைகள் உடன் விற்பனைக்குண்டு. பத்மநாதன், ஆடியபாதம் ரோட், திருநெல்வேலி வடக்கு, மருத்துவக் கல்லூரிக்கும் திருநெல்வேலி சந்திக்கிடையில்.
C-1100

## விற்பனைக்கு

கொழும்புத்துறையில் சுவாமியார் வீதியில் வீடுகட்டக் கூடிய 1½ பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு தொடர்பு: 442 காங்கேசன் துறைவீதி, வண்ணார்பண்ணை.
C—1129

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ். 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(C-1130

## தேவை

கதிரைகளுக்குக் குஷன் தைக்கக்கூடியவர்கள் தேவை. எண்ணிக்கை அடிப்படையில் அல்லது நாட் சம்பள அடிப்படையில் வேலை வழங்கப்படும். ஆண்/பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம். M 35 மே/பா Dyn ads, 476, பிரதான வீதி, சுண்டுக்குளி.
[A 330]

கோழிப்பண்ணை, விவசாயப் பண்ணை ஆகியவற்றில் நன்கு அனுபவமுள்ள இளைப்பாறிய அரசாங்க ஊழியர் தேவை. நற்சாட்சிப்பத்திரத்துடன் நேரில் வரவும்: சீமாட்டி 12°, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
C 1093

பொறியியல் வேலைத்தளத்தில் உதவியாளராகச் சேர விரும்புவோர் விண்ணப்பிக்கவும். முன் அனுபவம் அவசியமில்லை யாழ் நகருக்கு அண்மையில்வசிப்பவர்களாக இருத்தல் வேண்டும். விளம்பர இல. A 333 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம்.
A 333

ஐஸ்கிறீம் தயாரிக்கும் மெஷின் தேவை. விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும் விளம்பர இல. A 332 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம்.
A 332

வட மாகாணத்தில் பிரபல்யம் அடைந்துவரும் [Tangamm Tea] தேயிலைக்கு அனுபவமுள்ள, ஆர்வமுள்ள விற்பனைப் பிரதிநிதி தேவை. எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும் மெடிக்கல் ஹோல், இல: 224, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
[C1107]

யாழ். நகரிலுள்ள ஒரு பிரபல ஸ்ருடியோவின் நாளாந்த நிர்வாகத்தைப் பொறுப்பேற்று நடாத்தக்கூடிய பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. யாழ் நகருக்கு அண்மையில் வசிப்பவர்களாக இருத்தல்வேண்டும். ஆங்கிலத்தட்டெழுத்து/Book-keeping துறைகளில் ஆற்றலுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் பூரண விபரங்களோடு Referees இருவரையும் குறிப்பிட்டு 14ம் தேதிக்குமுன் விண்ணப்பிக்கவும்: விளம்பரதாரர் M 37, dyn ads, 476, பிரதான வீதி, சுண்டிக்குளி.
[A347]

## தவறிவிட்டது

த. மகேந்திரராஜா, 324, மணிக்கூட்டுக் கோபுரவீதி யாழ்ப்பாணம். என்பவருடைய திறப்புக் கோர்வை 7-3-86 அன்று மணிக்கூட்டுக் வீதியில் தவறி விட்டது கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
(C 1134)

## கல்வி

பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளதா. உங்கள் பிள்ளைகள் இந்தியாவிலுள்ள எங்கள் விடுதியிலருந்துஉயர்கல்வி அல்லது தொழிற்கல்வி பயில்வதற்கு வேண்டியஎல்லாஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும விபரங்களுக்குத் தொடர்பு: விளம்பர இல.C 1131 C/o, ஈழநாடு யாழ்ப்பாணம். [C1131]

## வாடகைக்கு

பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் சகல வசதிகளுடனும் கூடிய ஒரு அறை, பல்கலைக் கழக மருத்துவபீட/விஞ்ஞான பீட முதலாம் / இரண்டாம் வருட இரண்டு மாணவ, மாணவிகளுக்கு கொடுக்கப்படும். 97, பிறவுண்வீதி, கொக்குவில்.
[C 1108]

## மணப்பந்தல்

கனடாவில் தொழில் புரியும் நற்பண்படைய 30 வயது மகனுக்கு தற்சமயம் கனடாவில் வசிக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குடும்பத்தில் மணமகள் தேடுகிறார்கள் விண்ணப்பிக்கவும்: Dr. V. S Ahamparam, Kokuvil West Kokuvil.
[C 1081]

### MATRIMONIAL

30 year old engineer with Ph. D in U. S. A. having mars in the eigth house seeks professionally qualified beautiful girl from a Hindu Vellala family as marriage partner. Contact immediately with horoscope and photograph Correspondence Treated Confidentially Advt No: C 1078, C/o Eelanadu, Jaffna
(C 1078)

## காணவில்லை

காங்கேசன்துறையில் கணேசன் என்பவருடைய வீட்டில் வேலைக்கு நின்ற 12 வயதுள்ள மாதவி என்ற சிறுமியை நாலு மாதங்களாகக் காணவில்லை. உயரம் 3', பொது நிறமுடையவர். தலைமயிர் கட்டையாக வெட்டியுள்ளார். இவரின் விபரங்கள் தெரிந்தவர்கள் கீழ்க் குறிப்பிட்டுள்ள விலாசத்திற்கு அறிவிக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். எஸ். கணேசன், ''கிருஷ்ணபவான்'' யாழ். வீதி, காங்கேசன்துறை,
[C 1112]

### SERVICE

Typewriters, Adding Machines, Repairs and Service Undertake: Fudo Enterprises. 39/17, Power House Rd 3rd Lane, [Jaffna Bus Stand], Jaffna.
[C 1054]

## சேவை

மாணவ மணிகளே! நுரைவளம் கூடிய மில்க்வைற்சலவைப் பவுடர் உங்கள் சீருடைகளை அதி வெண்மையாகச் சலவை செய்கின்றது. 56 கிராம் மில்க்வைற் சலவைப்பவுடர் பைக்கற் ரூ 2-00 மட்டுமே. 5 மேலுறைகளை அனுப்பி அழகிய திருக்குறள் ஸ்ரிக்கர் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள். மில்க்வைற், யாழ்ப்பாணம.
[A342]

## வகுப்புகள்

தொலைக்காட்சி பயிற்சி வகுப்புகள் ஆரம்பம் 1-4-1986 பயிற்சிக் காலம் - 6 மாதம் கிழமை நாட்களில் இரு தினங்கள், விண்ணப்ப முடிவு திகதி 20-3-1986. கட்டணம் மாதமொன்றிற்கு ரூபா 150/- மேலதிக விபரங்கட்கு தொடர்பு கொள்ளவும் திரு S. குணளன். ரெலிகோணர் சாவகச்சேரி.
(C 1095]

1986 [G. A. Q.] இந்து நாகரீகம் மீட்டல் வகுப்பு G C E (O.L) English, Spoken English with Grammer, ஆங்கில, தமிழ், தட்டெழுத்து சுருக்கெழுத்து. சனி, ஞாயிறு வார, காலை, மாலை வகுப்புகள் நடைபெறுகின்றன. S Sivasakthy, B. A., Siva Institute, 5, Aiyanar kovil Road, Vannarpannai, Jaffna,
[C1125]

மோட்டார் நீவயின்டிங்பயிற்சி முதல்வகுப்பு ஆரம்பம்: 10-3-86. முழுப்பயிற்சிக்கும் கட்டணம் 450 ரூபா. காலம் 3 மாதம். [2] வயறிங் பயிற்சி முதல்வகுப்புஆரம்பம்: 14-3-86. முழுப்பயிற்சிக்கும் கட்டணம் 200 ரூபா. காலம் 1½ மாதம். ஓமேகா, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். [ஈழநாட்டிற்கு எதிரில்]
[C1126]

## விற்பனைக்கு

வீட்டுத்தளபாடங்கள், Antiques அல்மாரி, பெட்டகம், Ohaman, சாப்பாட்டு மேசைகள், Baby Cot, Table Fan, Imported Bed Spread, Imported Liquor Glasses, Libby Glasswares, Pyrexwares, Plastic Mat, Electronic Irons, மற்றும்பலஉடன் விற்பனைக்குண்டு. 79: Main Street சென்ற்ஜேம்ஸ் சேர்ச் முன்பாக
(C 1128)

**A/L 86**

**நீர் நிலையியல்**

**ஆரம்பம்: 10-3-86**

**சனி, ஞாயிறு தவிர்ந்த நாட்கள்**

காலை 7-30 இல் இருந்து 8-45 வரை

ஆசிரியர்:
**ரவிமோகன்**
யாழ்ப்பாணம்.
C-1094

## முதலாம் வருட நினைவஞ்சலி



**திரு. மதியாபரணம் மதிவதனன்**

தாயின் மடியில்: 17-02-1951
இறைவனடியில்: 19-02-1985

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்
அன்பு மனைவி, பிள்ளைகள், தாய், சகோதரிகள், மாமா, மாமி மைத்துனர், மைத்துனி, சுற்றத்தார்.

சந்நிதி வீதி,
மொட்டைப்புளியடி,
உடுப்பிட்டி.
[C 1 16]

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

ஜீவியத்தில் என்னை நேசித்தவர்களே, மரணத்திலும் என்னை மறவாதீர்.



**பாக்கியநாதர் அன்ரனி செபஸ்தியாம்பிள்ளை (அன்ரன்)**

மலர்வு: 06-10-1954
உதிர்வு: 09.03-1985

செபிப்போம்
வாழ்வின் மாற்றத்தால் நிலையான நிறை வாழ்வை வழங்கும் வல்லப தந்தாய்- மரணத்தில் மாற்றம் கண்ட இனமலர் அன்ரனியின் குறைகளை மறந்து அவரும், நாமும் வேண்டி நிற்கும் மோட்ச வாழ்வை அவருக்கு அருளகிருபை செய்யும். நம்பிக்கையோடு உம்மிடம் வருகின்றோம் தந்தாய், ஆமேன்.

அன்புப் பெற்றோர்,
சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்.
'பிலோமின்',
பண்டத்தரிப்பு.
(C 1127)

# ஜம்முவில் கவர்னர் ஆட்சி மாநில அரசு கலைக்கப்பட்டது

(ஸ்ரீநகர்)

ஜம்மு - காஷ்மீர் மாநிலம் கவர்னர் ஆட்சியின் கீழ்க் கொண்டுவரப்பட்டு திரு. ஜி. எம். ஷாவின் அமைச்சரவை நீக்கப்பட்டுள்ளது.

கவர்னர் நேற்றுமாலை ஜம்முவில் இதற்கான பிரகடனம் ஒன்றை வெளியிட்டார். மாநில அரசின் அலுவல்களை கவர்னர் தமது பொறுப்பில் மேற்கொண்டுள்ளார்.

மாநில சட்டப் பேரவை நிறுத்திவைக்கப்பட்ட ஒரு நிலையில் தொடர்ந்து இருந்து வரும்.

ஜம்மு-காஷ்மீரில் கவர்னர் ஆட்சிக்கான முடிவை நேற்று முன்தினம் மத்திய மந்திரி சபை பரிசீலனை செய்தது. அதன் பின்னர் ராஷ்டிரபதியின் ஒப்புதல் கவர்னரிடம் தெரிவிக்கப்பட்டது.

### கவர்னர் கருத்து

கவர்னர் பத்திரிகையாளரிடம் பேசுகையில், மாநில மக்களின் முறையீடுகள் கவனிக்கப்படுமென்றும், மாநிலத்தில் வகுப்பு ஒற்றுமை மற்றும் அமைதியைப் பேணிப் பாதுகாப்பதுதான் இந்தத் தருணத்தில் அதிமுக்கியமான பணியாகவிருக்குமென்றும் கூறினார்.

### பாருக் அப்துல்லா வேண்டுகோள்

டாக்டர் பாருக் அப்துல்லா ஸ்ரீநகரில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில், மாநிலத்தில் ஒற்றுமையையும், அமைதியையும் பேணிப் பாதுகாப்பதில் கவர்னருடன் ஒத்துழைக்குமாறு மக்களைக் கேட்டுக்கொண்டார்.

ஜம்மு - காஷ்மீரில் இந்திரா காங்கிரஸ் கட்சியின் ஆதரவுடன் 1984ம் ஆண்டு திரு ஜி. எம். ஷா தலைமையிலான அமைச்சரவை பதவியேற்றது. கடந்த வியாழக்கிழமை திரு ஜி எம். ஷாவின் அமைச்சரவைக்கான தனது ஆதரவை விலக்கிக்கொள்வதாக இந்திரா காங்கிரஸ் முடிவுசெய்தது.

இதேவேளை ஜம்மு - காஷ்மீரில் கவர்னர் ஆட்சி அமுல் செய்யப்பட்டமை எல்லோராலும் வரவேற்கப்பட்டுள்ளது. [து]

## உலகச் செய்திகள்

# ரீகன் மகளின் நாவல் கிளப்பியுள்ள 'பூகம்பம்'

[நியூயோர்க்]

'வீட்டு நிலவரம்' என்ற தலைப்பில் அமெரிக்க ஜனாதிபதி திரு. றெனல்ட் ரீகனின் 33 வயது மகளான பற்றி டேவிஸ் எழுதியுள்ள நாவல் அமெரிக்க ஆளும் வட்டாரங்களில் மட்டுமன்றி, திரு. ரீகனின் குடும்ப வட்டாரங்களிலும் கசப்பையும், கலவரத்தையும்உண்டு பண்ணியுள்ளதாகத் தெரியவருகிறது.

சுயசரிதை ரீதியில் எழுதப்பட்டுள்ள மேற்படி நாவல், திரு. ரீகனினதும், திருமதி நான்ஸி ரீகனினதும் மனதைப் புண்டுபடுத்துவதாக அமைந்துள்ளது என 'நியூஸ் வீக்' சஞ்சிகை கருத்து வெளியிட்டுள்ளது.

''நிஜத்தில் திரு. ரீகன் தம்பதிகளின் மனத்தை இந்நாவல் மிகவும் புண்படுத்தவே செய்துள்ளது. ஆனாலும், அவர்கள் வாய்மூடி மௌனியாகவே இருக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்'' என ஜனாதிபதி ரீகனின் பிரதம ஆலோசகர் ஒருவர் தெரிவித்துள்ளதாகவும் 'நியூஸ் வீக்' சஞ்சிகை மேலும் கூறுகிறது. [ஷ-ரா]

# கடத்தப்பட்ட சடலம் ஆஸ்பத்திரியில் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரியில் இனந்தெரியாதவர்களினால் கடத்திச் செல்லப்பட்டு தந்தையிடம் ஒப்படைக்கப்பட்ட சடலம் மறுநாள் இறந்தவரின் தந்தையினால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

கோப்பாயைச்சேர்ந்த மு. சுந்தரலிங்கம் [25 வயது] என்பவரின் மரணவிசாரணையில் மேற்கூறிய விபரம் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மரணவிசாரணை அதிகாரி க. கேசவன் மரணவிசாரணை நடத்தினார்.

இறந்தவர் மதுப்பழக்கமுடையவராக இருந்ததினால் சிறியதந்தை வீட்டைவிட்டு போகுமாறு கூறியதாகவும், இதனால் மனமுடைந்த அவர், நச்சுத்திராவகம் அருந்தியதாகவும் அயலவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதித்து அங்குமரணமானாரென்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது,விசாரணை முடிவில் தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (க)

# அக்கினோ 'கொலை நாடகம்' அரங்கேறுகிறது!

[மணிலா]

பிலிப்பைன்ஸின் இன்றைய ஜனாதிபதி திருமதி கோறியின் கணவர் அமெரிக்க 'அஞ்ஞாதவாசத்'திற்குப் பின்னர் தாய் நாட்டு மண்ணில் காலடி எடுத்துவைத்தபோது மணிலா விமான நிலையத்தில் படுகொலை செய்யப்பட்ட நிகழ்ச்சியைச் சித்திரிக்கும் திரைப் படத்தைக் கண்டு 'குமுறும்' வாய்ப்பு பிலிப்பைன்ஸ் மக்களுக்குக் கிட்டியுள்ளது.

திரு. மார்க்கோஸ் ஆட்சியதிகாரத்தில் இருந்தபோது மேற்படி திரைப்படம் தடை செய்யப்பட்டிருந்தது.

திரு. பெங்கினோ அக்கினோவைக் கொலைசெய்ததாகக் கூறப்படும் றெனல்ட் கல்மன்னின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டே மேற்படி திரைப் படத்தின் கதை அமைந்துள்ளது.

திரு. அக்கினோவை 1983 ஆகஸ்ட் 21 அன்று மணிலா விமானநிலையத்தில் சுட்டுக் கொன்றவர் றெனல்ட் கல்மன் என அழைக்கப்படும் ஒரு கம்யூனிஸ்ட் தீவிரவாதியே என மார்க்கோஸ் அரசின் ராணுவத்துறை தகவல் வெளியிட்டிருந்த பொழுதிலும், திரு. அக்கினோவைக் கொன்றவர்கள் மார்க்கோஸின் அரச ராணுவத்தினரே எனக் கடந்த டிசம்பரில் மணிலா உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தது தெரிந்ததே. [ஷ-ரா]

# இணைப்பதிகாரிக்கு கோரிக்கை

[மாவிட்டபுரம்]

மகாசிவராத்திரி தினத்தன்று அமைதி காத்து பக்தர்கள் விரதமிருந்து புண்ணிய தலங்களில் தீர்த்தயாட வழி வகுக்குமாறு பலாலி- வீமன்காமம் பிரஜைகள்குழு வடபகுதி இராணுவ இணைப்பதிகாரியிடம் கோரியுள்ளது.

வலி- வடக்கு பிரஜைகள் இணைப்புக்குழு ஊடாக விடுக்கப்பட்டுள்ள இக்கோரிக்கை தொடர்பான தீர்மானம் வீமன்காமம் மகாவித்தியாலயத்தில் திரு மு. சின்னத்துரை தலைமையில் நடைபெற்ற பிரஜைகள் குழுவின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

# வவுனியாவில் இருவர் கடத்தல்

[வவுனியா]

வவுனியா மக்கள் வங்கியில் கடமையாற்றிய பியோன் நாகராஜா கடத்தப்பட்டார் இவர் மரக்காரம்பளை என்ற இடத்தைச்சேர்ந்தவர் இவருடன் விஜயகம் என்பவரும் கடத்தப்பட்டதாகத் தெரியவருகிறது.

மேற்படி இருவரும் அவர் அவர் வீடுகளில் வைத்தே கடத்திச் செல்லப்பட்டனர்.


# மக்கள் வங்கி நகை அடைவு மீளப்பெறுதல்

கீழ்க் கண்ட மக்கள் வங்கி கிளைகளில் அடைவு வைத்து, மீளப்பெறுவதற்கு ஏற்கெனவே கிளைகளில் பணம் கட்டிய வாடிக்கையாளர்கள் பொருட்களை மீளப்பெறுவதற்கு குறிப்பிட்ட திகதிகளில் காலை 9-00மணியிலிருந்து பிற்பகல் 1-00 மணிவரை குறிப்பிட்ட வங்கிக் காரியாலயத்தில் சமுகம் அளிக்கும்படி வேண்டிக்கொள்கிறோம். இது சம்பந்தமாக, அடைவு வைத்த கிளைகளில் தொடர்புகொள்ளவும்.

| அடைவு வைத்த கிளை | மீளப்பெறும் கிளை | சமுகமளிக்கவேண்டிய திகதி |
|---|---|---|
| 1. மன்னார் | யூனியன் பிளேஸ் கிளை கொழும்பு - 2. | 22-03-1986<br>23-03-1986 |
| 2. வவுனியா | டியூக் வீதி கிளை கொழும்பு - 1. | 22-03-1986<br>23-03-1986 |
| 3. சாவகச்சேரி<br>4. சுன்னாகம்<br>5. நவீன சந்தை, யாழ்ப்பாணம் | மக்கள் வங்கி ஸ்டோர்ஸ் விஜயவர்த்தன மாவத்தை, மக்கலம் றோட், கொழும்பு - 2. | 22-03-1986 |
| 6. ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்<br>7. பிரதான வீதி யாழ்ப்பாணம்<br>8. கன்னாதிட்டி யாழ்ப்பாணம் | மக்கள் வங்கி ஸ்ரோஸ் விஜயவர்த்தன மாவத்தை, மக்கலம் றோட், கொழும்பு - 2. | 23-03-1986 |
| 9. ஊர்காவற்றுறை<br>10. காங்கேசன்துறை<br>11. கிளிநொச்சி<br>12. பரந்தன் | மக்கள் வங்கி ஸ்ரோஸ் விஜயவர்த்தன மாவத்தை, மக்கலம் றோட், கொழும்பு - 2. | 24-03-1986 |
| 13. முல்லைத்தீவு<br>14. பருத்தித்துறை<br>15. வல்வெட்டித்துறை | மக்கள் வங்கி ஸ்ரோஸ் விஜயவர்த்தன மாவத்தை, மக்கலம் றோட், கொழும்பு - 2. | 25-03-1986 |

எம். கணேசசுந்தரம்,
பிரதேச முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிரதேசத் தலைமை அலுவலகம்.
யாழ்ப்பாணம்.

A 343

பண்டாரிக்குப் பின் பதவியேற்கும்

# இந்தியாவின் புதிய வெளியுறவுச் செயலர்



வெங்கடேஸ்வரன்

33 ஆண்டுகால இடைவெளியின் பின்னர் தென் இந்தியாவைச் சேர்ந்த ஒருவர் கௌரவமிக்க இந்திய வெளியுறவுச் செயலரின் பதவிக்கு நியமிக்கப்படவுள்ளார் இதற்கு முன்னர் சுதந்திர இந்தியாவின் முதலாவது வெளியுறவுச் செயலராகத் தென்னிந்தியாவைச் சேர்ந்த திரு. கே. பி எஸ். மேனனை பண்டிதர் நேரு நியமித்தார். அதன் பின்னர் கடந்த மூன்று தசாப்தங்களாக இந்தப் பதவியை இன்றுவரை இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் வந்த 11 பிரமுகர்கள் அலங்கரித்துள்ளனர்.

### தகுதியானவர்

திரு ஏ. பி. வெங்கடேஸ்வரனின் தேர்வு, இந்திய வெளியுறவு அமைச்சின் அதிகாரிகளால் மட்டுமன்றி இந்தியாவிலுள்ள வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகளினாலும் வரவேற்கப்பட்டுள்ளது. ஏனெனில் அவர் இந்தப் பதவிக்கு முற்றிலும் தகுதியானவரே அவரது ஆற்றலையும், விநயமான போக்கையும் தவிர, தனக்குக் கீழுள்ளவர்களின் நம்பிக்கையைப் பெறும் ஆற்றலோடு நாட்டின் வெளியுறவுச் சேவைக்குத் தேவையான மனிதாபிமானப் பண்புடையவராயிருப்பதும் இவரிடமுள்ள சிறப்பம்சமாகும்.

இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் கண்டிப்பானவராக விளங்கும் திரு. வெங்கடேஸ்வரன், ஏதாவதொரு காரியம் தவறுக நடந்துவிட்டால் அதற்காக இன்னொருவர்மீது பழியைப் போடாமல் தானே ஏற்றுக்கொள்வார். அத்துடன் தானே எதிர்த் தரப்பினரிடம் சொல்லவேண்டியதை நகைச்சுவையாகச் சொல்லிக் காரியத்தைச் சாதித்துவிடுவார் என்ற புகழையும் பெற்றிருக்கிறார்.

வெளிநாட்டு ராஜதந்திரிகளுடனான பேச்சுகளில் இவர் சிறு சிறு நன்மைகளை அடைவதில் நம்பிக்கை வைப்பதில்லை என்பது இவருடன் பழகியவர்களின் கண்டுபிடிப்பு.

எதிர் தரப்பு ராஜதந்திரிகளைக் கண்டிக்கவேண்டிய சந்தர்ப்பங்களிலோ அல்லது அவர்களின் அரசாங்கங்களைக் கண்டிக்கவேண்டிய சமயங்களிலோ அவற்றை நாசூக்காக, புத்திசாதுரியத்துடன் கூறி விஷயத்தை முடித்துவிடும் இயல்பும் இவரிடம் அவதானிக்கப்பட்டிருக்கிறது.

### சீன அமைச்சருடன்....

இதற்கு நல்லதொரு உதாரணமாக இச்சம்பவத்தைக் கூறலாம்.

கம்பூச்சியாவின் ஹெங்சமரின் ஆட்சிக்கு எதிராக ஐ. நா. வில் பெரும்பாலான நாடுகள் வாக்களித்தபோது அதனை ஆதரித்த சில நாடுகளில் இந்தியாவும் ஒன்று. அப்போதைய சீன வெளியுறவு அமைச்சர் திரு. ஆ சுவேகியான் முதன்முறையாகத் திரு வெங்கடேஸ்வரனைச் சந்தித்தபோது; ''132 நாடுகளும் தவறிழைத்திருக்க முடியும் என்று நினைக்கிறீர்களா?'' என்று கேட்டார் புன்முறுவல் பூத்த வெங்கடேஸ்வரன், சற்று நிறுத்தி, ''மிகப்பெரும்பான்மையினரும் சில சமயம் தவறிழைக்கவே செய்கிறார்கள்'' என்றார். சீன மந்திரி திகைத்தார். இருபது வருடங்களுக்கு மேலாக வருடாவருடம் இதே போன்ற பெரும்பான்மையான நாடுகள் ஐ நா. வில் சீனக் குடியரசு அங்கத்துவம் பெறுவதை மறுத்து வந்ததையும், 1962ம் ஆண்டு எல்லைப் பிரச்னைக்குப் பிறகும் இந்தியா சீனாவை ஆதரித்து வந்துள்ளதையும் திரு. வெங்கடேஸ்வரன் அவருக்குப் புரியவைக்கத் தவறவில்லை.

வாயடைத்துப்போன அமைச்சர் கதையை மாற்றி சீன - இந்திய உறவுகளின் மேம்பாடுபற்றிக் கதைக்க ஆரம்பித்தாராம்.

திரு. வெங்கடேஸ்வரன் உலகின் பல நாடுகளில் கடமையாற்றியபோது பல பிரசித்திபெற்ற ராஜதந்திரிகளுடன் சந்திப்பு நேர்ந்தபோது இந்தியக் கொள்கைகளை மிகவும் கண்டிப்பாக வலியுறுத்திவந்தார். அவரது இந்தத் திறமைதான் அவரை இந்திய வெளியுறவுச் சேவையின் உச்சிக்குக்கொண்டு சென்றுள்ளது நற்பண்புகள் நிறைந்த திரு. வெங்கடேஸ்வரன் மற்றைய நாடுகளின் கருத்துக்களை தவறுகப் புரிந்துகொண்டதாகவோ அல்லது தனக்குக்கீழுள்ள ஊழியர்களை அவமானப்படுத்தியதாகவோ ஒரு சந்தர்ப்பம் கூட ஏற்பட்டதில்லை.

திரு. வெங்கடேஸ்வரனின் தந்தை ஏ எஸ். பி. ஐயர் ஆவார். அவர் இந்திய சிவில் சேவையில் சிறப்பாக பணியாற்றி பின்னர் நீதித்துறையிலும் பணியாற்றி இறுதியில் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்து இளைப்பாறினார்.

திரு வெங்கடேஸ்வரனையும், திரு. மேனனையும் இந்திய அரசியல் துறையில் ஈடுபட பிரிட்டிஷார் அழைத்தனராயினும் தனது நண்பர்களின் ஆச்சரியத்துக்கு மத்தியில் திரு. வெங்கடேஸ்வரன் இவ்வழைப்பை மறுத்துவிட்டார். அப்போது சென்னை ஜனாதிபதிக் கல்லூரியில் தனது எம். ஏ. பட்டப்படிப்பை முடித்திருந்த இளைஞரான வெங்கடேஸ்வரன் இந்திய வெளியுறவுச் சேவையில் சேர்ந்தார்.

அப்போது அவர் இந்தியாவின் வெளியுறவுச் செயலராகும் வாய்ப்பு தமக்குவரும் என கனவிலும் நினைத்திருக்கமாட்டார்.

## புதிய புத்தகம்

### அமிர்தகங்கை

ஈழத்து இலக்கியத் துறையில் பல சாதனைகள் படைத்துள்ள நாடறிந்த எழுத்தாளரான 'செம்பியன் செல்வன்' அவர்களை ஆசிரியராகக் கொண்டு 'அமிர்த கங்கை' என்னும் மாத சஞ்சிகை வெளிவந்துள்ளது.

முதலாவது சஞ்சிகையிலே சாதனை படைத்த 'அமிர்த கங்கை'யின் இரண்டாவது இதழ் இப்பொழுது வெளியாகியுள்ளது.

குழந்தையொன்றின் புகைப் படத்தினை அட்டைப் படமாகக் கொண்டு வெளி வந்திருக்கும் மாசி மாத 'அமிர்த கங்கை' 64 பக்கங்களைக் கொண்டது. இதனுடைய விலை 5 ரூபாவாகும்.

கனதியான இலக்கிய விடயங்களைத் தாங்கி வந்திருக்கும் 'அமிர்த கங்கை' ஈழத்து இலக்கியப்பரப்பில் தாக்கத்தை உண்டுபண்ணும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

சாமகாலப் பிரச்னைகளை எழுதத்திராணியற்று இருக்கும் சிலரின் மத்தியிலே அமிர்த கங்கை தனது பங்குப் பணியை எப்படிச் செய்யப் போகிறது என்று கேள்வி எழுப்புவர்களுக்கு மாசி மாத ஆசிரியர் தலையங்கம் நல்ல பதிலாக அமைந்துள்ளது

மாகஸிச தத்துவங்களின டியாக 'யதார்த்தப் படைப்புகள்' சிலவற்றை கதை, கவிதை, கட்டுரை - படைத்து யாவும் கற்பனையே என்று முடித்துத் தம்மானிட நேசிப்பினை விளம்பரம் செய்து 'இலக்கிய அந்தஸ்து,வை இலகுவாகத் தேடிக் கொண்டவர்கள், எழுதிய பிரச்னைகளே 'உயிரும் உடலுமாக' வந்தபோத எழுது கோல்களைத் தூரவைத்து விட்டார்கள் என்று சமகாலப்பிரச்னைகளிலிருந்து ஒதுங்கும் எழுத்தாளர்களைச்சாடுகிறது 'அமிர்த கங்கை' எரியும் பிரச்னையிலிருந்து எவரும் தப்பி விடமுடியாது நிச்சயமாகப் பேனா பிடித்தவர்கள் தப்பி விடமுடியாது என்று கூறிக்கொண்டு விடுதலைக்காகப் போராடுகின்றவர்களுக்கு இலக்கியம் மூலம் உற்சாகம் அளிக்கின்ற வகையில் அமிர்த கங்கை முன்னேக்கிச்செல்வது வரவேற்க வேண்டிய ஒன்றே.

ஈழத்தில் வெளியாகும் சஞ்சிகைகள், பத்திரிகைகள அமிர்த கங்கையை இந்த வழியில் பின்பற்ற வேண்டும்

'மண் ஆசை', 'நியாயங்கள் சிறையிடப்படுகின்றன' 'நாளை வரும் ஒரு நண்பனின் சரித்திரம்; நிறமிழக்கும் கனவுகள்' சிறு கதைகளுடன் கதைகள் ஜெயகாந்தன் பேட்டி என்பன யாவரும் விரும்பிப் படிக்கக்கூடிய வகையில் அமைந்துள்ளன.

என். கே. துரைசிங்கம்

## பேராசிரியர் சின்னத்தம்பி

ஆங்கில வைத்தியத்தில் ஆள்மகப் பேற்றுளன்
பாங்குடனே அத்துறைநூல் பல்படைத்த-
பொங்குரையோன்
பேரிருமைக் கலாநிதி பெற்றசின்னத் தம்பியர்
பாரிருட் பற்றகன்றுன் பார்த்து.

தாய்த்தமிழில் ஆங்கிலத்தின் ஆளும் மருத்துவநூல்
ஆய்வாய் அரும்நூலாய் ஆக்கினய் அவ்-ஆய்வாக்க
நீள்வினை நின்றதம்மா இஃதெண்ண நின்தமிழ்
நெஞ்சு
ஆள் உலகில் ஆர்எடுப்பார் ஆய்.

நீர்கொழும்பு நின்ற சிவாயம் நிலத்தமிழர்
பேர்இட்ட தாய்மொழிபேண் கல்விச்சீர்-ஆர்
அளிப்பார்
என்றே அலைநீர்போல் நின்றுர்க் கமைபுணைபோல்
நன்பள்ளி நல்கியவன் நாடு.

புலவர் நா. சிவபாதசுந்தரனுர்

முதலியார் மகேசனுக்கு அஞ்சலி

## சுவர்க்கம் இதோ போறன்

சத்தமே செய்யாத — தவத்
தத்துவ விளைவே இவன்!
புத்தம் புதுமலரின் — அந்த
சுத்தம் இவன் சித்தம்!

முத்து விளைவாகும் — மோனச்
சிப்பி! மொத்தத்தில்
இத்தரை கண்ட சுவைச்
சித்திரம் இவன் வாழ்க்கை!

''தெய்வம் உலாவந்த — கோயிற்
திருத்தேர் இவன்'' என்றல்
பொய்யுரை ஆகாது! இவரைப்
புரிந்தவன் நான் சாட்சி!

'செய்கை நலம்' காத்தான்! வாழ்வில்
'சிகரநிலை' யாத்தான்!
கொய்தமலர் ஆனன் — ஈற்றில்
சுவர்க்கம் இதோ போறன்!

— சகோ. பிர. பாலகிருஷ்ணன்

கடந்தவருடம் புதுடில்லியிலுள்ள வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர்களில் ஒருவராக நியமிக்கப்படுமுன்னர் அவர் நியுயோர்க், வாஷிங்டன், ஜெனிவா, பொண்ட், மாஸ்கோ, பீஜிங் (சீன) அடிஸ் அபாபா, (எதியோபியா] டமாஸ்கஸ் (சிரியா) பராமுவே, பிஜித்தீவுகளில் பணியாற்றியதுடன் அமெரிக்க ஹர்வார்ச் பல்கலைக்கழகத்தில் கழித்த ஒரு கல்வியாண்டும் அவருக்கு ராஜதந்திர அலுவல்களில் நிறைந்த அனுபவத்தைக் கொடுத்தது.

தொகுப்பு: செந்தில்

## அப்பர் சுவாமிகள் திருப்பவனி

(யாழ்ப்பாணம்)

அப்பர் சுவாமிகளின் திருவுருவச்சிலையின் ஊர்வலம் நாளை வண்ணார்பண்ணைவைத்தீஸ்வர வித்தியாலயஇந்து மாணவர் மன்றத் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஊர்வலம் சாந்தையர்மடம் கற்பகப்பிள்ளையார் கோவிலிருந்து ஆரம்பமாகி காங்கேசன்துறை வீதி வழியாக வண்ணைசிவன் கோவில் அடைந்து கிழக்குவீதி, தெற்குவீதி, மேற்குவீதி, (மானிப்பாய்வீதி) வழியாக வலம்வந்து வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தை வந்தடையும்.

## புதிய அகதி முகாம்

(சித்தன்கேணி)

வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பொன்னாலையில் புதிதாக அகதி முகாம் ஒன்று வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இம் முகாமில் திருமலையில் இருந்து வந்த பத்து குடும்பங்களைச் சேர்ந்த சுமார் எண்பது பேர் தங்கியிருகின்றனர் இவர்களுக்கான சகல உதவிகளையும் உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் கவனித்து வருகின்றார்.

## திருவிழா

(இளவாலை)

இளவாலை புனித அன்னம்மாள் ஆலயத்தில் நாளை திங்கட்கிழமை இன்னல் தீர்க்கும் வியாகுல அன்னையின் திரிதின ஆராதனை, மறையுரைகளுடன் ஆரம்பமாகிறது. 21ம் திகதி வெள்ளிக்கிழமை விழாத் திருப்பலியும் திருச்சிலுவை வழிபாடுகளும் இடம் பெறும்.

அப்பாவிமக்களைக் கொலை செய்யும்

## விமானக் குண்டு வீச்சை உடன் நிறுத்துக!

[யாழ்ப்பணம்]

போர் விமானங்களிலிருந்து குண்டு வீசி அப்பாவிப் பொது மக்களைக் கொண்றெழிப்பதுடன், அவர்களின் சொத்துக்களையும் நாசம் செய்யும் நடவடிக்கைகளை உடன் நிறுத்துமாறு கோரும் தீர்மானம் ஒன்றை அச்சுவேலி பத்தைமேனி இடைக்காடு பிரஜைகள் குழு நிறைவேற்றியுள்ளது

பிரஜைகள் குழுததலைவர் திரு ஆ ந இராமசந்திரன் தலைமையில் இக்கூட்டம்நடை பெற்றது.

இக்கூட்டத்தில் மேலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு அடிப்படை மனித உரிமையை மறுக்கும் கடல் தடைச் சட்டத்தை உடனடியாக நீக்கி பல்லாயிரக்கணக்கான மீனவர் பட்டினியால் சாகும நிலையைத் தடுக்க வேண்டும் ஐந்து அங்கத்தவருக்கு மேற்படாத தொகையை கொண்ட குடும்பங்களுக்கு மதாந்தம் ரூபாய் 1500 க்கு குறையாத பெறுமதியும் அதற்கு மேற்படும் அங்கத்தவர் ஒவ்வொருவருக்கும் ரூபா 250க்கு குறையாத உதவியும் வழங்கப் படவேண்டும்

செல்வச்சந்நிதி கோவிலில் அண்மையில் தொண்டமானுறுஇராணுவ முகாம்அமைந்திருப்பதாலும் அடிக்சடி அங்கிருந்து பீரங்கி வேட்டுக்களும், துப்பாக்கிச் சூடுகளும் தீர்க்கப்படுவதாலும் இந்துக்கள் தமது சமயக் கடமைகளை கடந்த இருவருடங்களாக நிறைவேற்ற முடியாதவர்களாக உள்ளனர். எனவே இந்துக்களின் மதசுதந்திரத்தைப் பாதிக்கும் இந்த இராணுவ முகாமை உடனடியாக அவ்விடத்திலிருந்து அகற்றுமாறுவேண்டுகின்றேம் (மா)

ஈழநாடு வாரமலர்
EELANADU VARA MALAR

# பாரதி தீர்க்கதரிசனம்

தேசிய ஒருமைப்பாடு பற்றி இப்போது நிறையப் பேசப்படுகின்றது. இன்னுஞ் சொன்ஞல், உலக நாடுகளிடையேயும் ஒருமைப்பாடு கண்டு, போரைத் தவிர்த்து சமாதானங்காணவும் உலகத் தலைவர்கள் அடிக்கடி சந்தித்து முயல்கின்றனர்.

இலங்கையிலே பெரும்பான்மையினரான சிங்களவர் சிறுபான்மையினரான தமிழரை ஒடுக்கி வருகின்றனர். இலங்கையின் ஒருமைப்பாட்டு வலையத்திற்குட்பட்டு சிறுபான்மையினரான தமிழர் வாழும் ஈழப் பிரதேசத்திற்குச் சுயாட்சி கோரப்படுகின்றது. ஆனுல் பெரும்பான்மையினர் சார்பில் ஆட்சியைக் கையில் வைத்திருக்கும் அதிபர் ஜெயவர்த்தன சிங்கள இராணுவத்தை ஈழப்பகுதயில் நிறுத்தி வைத்துத் தமிழரைப் பழி வாங்குகின்ருர். தமிழரை நிராயுதபாணிகளாக வைத்து சிங்களவரை ஆயுதபாணிகளாக்குகின்ருர். ஈழத்துக்குச் சுயாட்சி அந்தஸ்த்சத் தர சிங்களவரின் இசைவைப் பெற வேண்டுமாம்! அகற்காக 'வாக்கெடுப்பு' நடத்தப் போகிருராம்.

இப்படி ஒரு அவலநிலை இலங்கைத் தமிழருக்கு ஏற்படலாம் என்று எதிர்பாத்வர் போல ''சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்; சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்'' என்று பாரதியார் பாடிவைத்துப் போயுள்ளார்.

## பாரதியாரின் கனவு

அவர் காலத்திலேயே ''சிங்களத் தீவு'' என்று அவர் சொன்ன இலங்கையின் ஒரு பகுதியான யாழ்ப்பாணத்தக்கும் இந்தியத் தமிழகத்துக்கும் இடையில் பாலம் போட்டிருந்தால், சேதுவை மேடுறுத்தி வீதி அமைத்திருந்தால், இன்று இலங்கை அரசை நல்வழிப்படுத்தும் வசதியும், வாய்ப்பும் இந்திய அரசுக்கு இருந்திருக்கும். குறைந்த பட்சமாக வங்க தேசத்தார் சுதந்திரத்திற்காகப் புரட்சி நடத்திய போது, ஒரு கோடி வங்காளியர் இந்தியாவுக்கு வந்தார்களே அதுபோல இலங்கைத் தமிழர்கள் அவ்வளவுபேரும் இந்தியத் தமிழகத்துக்கு வந்திருக்கமுடியும்.

நான் இங்கு அரசியல் பேச விரும்பி இதைக் கூறவில்லை. நம்முடையமுன்ஞேர்கள் எதிர்காலப் பிரச்னைகளையும் தங்களுக்கிருந்தமெய்ஞ்ஞானஉணர்வால் தெள்ளத் தெளிய அறிந்து வைத்திருந்தார்கள் என்பதையும் உங்களுக்குஎடுத்துக்காட்டத்தான் இந்திய-இலங்கை அரசியலை உவமை கூறினேன்.

மகாகவிகள் - எந்த மொழியினராயினும்-மனித சமுதாயம் முழுவதையும் ஓரினமாகத்தான் கண்டனர். அதற்குத்தேவைப்படும் மனிதாபிமானம் அவர்களிடம் நிறைய இருந்தது.

[சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சிவஞானம் எழுதிய ''இலச்கியங்களில் இன சமயக் கலப்பு' என்ற நூலிலிருந்து.]

# தமிழரின் தனிப் பெருந்தலைவன்

பரமேஸ்வரக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற தமிழ்ப் பெருவிழாவில் பேராசிரியர் சேதுப்பிள்ளை தலைமையில் சபையோர் பரசவப்பட்ட நிலையில் பேசியவர் தனிநாயகஅடிகள்.

பேச்சின் மத்தியில் அவர் பாடிய பாட்டு அரசன் அப்பர் சுவாமிகளை நீற்றறையிலிட்டு துன்புறுத்தியபோது பாடின பாட்டு;

''மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசுவண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே''

எத்தனையோ மொழிகளில் அவ்வம் மொழியின் சுபாவத்திற்கேற்ற வகையில் பேசும், பாடும் திறமையுடைய தனிநாயக அடிகளார் இத் தேவாரத்தை மிக இனிமையாகப் பாடியதும், பல்லாயிரக்சணக்கில் கூடியிருந்த சபையில் என்றும் காணுத நிசப்தம்.

அந்த அமைதி சில நொடிகள் தொடர்கின்றன. ''இந்தப் பாட்டைத் தமிழ் தெரிந்த எவரும் நன்ருய் ரசிக்கலாம்; ஆனுல் தமிழன் ஒருவனைவிட வேறெராலு இப்பாட்டு பாடியிருக்க முடியாது'' என்கிருர் அடிகள்.

பன்மொழிப்புலவரின் தீர்ப்புக்கெழுந்த கரகோஷம் வானைப் பிளந்தது.

நீற்றறையின் வெம்மையை நாவுக்கரசர் தம் மனச் செம்மையால் வென்றதைக் குறிக்கும் இப்பாட்டு அப்பர் அடிகளின் ஆன்மவீரத்தை விளக்குகிறது. ''நாமார்க்கும் குடியல்லோம்'' என்ற திருத்தாண்டகம் தமிழ் இருக்கும் வரைக்கும் இருக்கும். ''பணிவோமல்லோம்' என்ற சபதத்தை நினைவு கூரும் காலம் இது.

இதனை நன்ருக உணர்ந்த யழ். இந்துக்கல்லூரி மாணவர், அப்பரின் திருவுருவத்தை விக்கிரகமாக வடித்துப் பாடல்பெற்ற திருக்கேதீஸ்வர ஆலயத்தில் அதனைப் பிரதிஷ்டை செய்யும் பணியில் ஈடுபட்டிருக்கின்றனர்.

நாவலர் பெருமான் கண்ட கனவில் உதித்த இக் கல்லூரி இக்காலத்துக்கேற்ப, திருநாவுக்கரசர் பெருமையை உலகறியச் செய்யும் கைங்கரியம் பாராட்டுக்குரியது.

# தமிழறிந்த சின்னத்தம்பி

சிலருக்குப் பெயர் அமைந்துவிடுகிறது. பேராசிரியர் சின்னத்தம்பியருக்கும் அந்தப் பெயர் அமைந்துவிட்ட பெயர்தான். உண்மையில் சின்னத் தம்பிதான்.

மருத்துவ மாமேதை சின்னத்தம்பியைப் பற்றிக் கேள்விப்பட்ட ஒருவன், அவரைப் பார்க்கப்போனுல் நிச்சயம் ஏமாந்து போவான். அவர் 'அப்பிடி' இருக்கமாட்டார். கண்டிப்பைவிடக் கனிவு மேலோங்கிய கண்கள்குழந்தையின் குதூகலத்துக்குரிய குமிண் சிரிப்பு. மாருத சுறுசுறுப்பு. வழமையாக டொக்ரர்மார் பேசாதபாசை. ஊர்த் தமிழை உருசித்துச் சொல்லும் சொல் மேலும் ஒரு விஷயம் ஆங்கிலத்தை வலிந்து கலந்து பேசுகிருேம் என்று நினைத்துவிட்டால் பொத்துக்கொண்டு வரும் கெட்டகோபம். தமிழோடு தொடர்புடையோம் என்பதை அறியவரும்பொழுது அந்தத்தமிழை ஆதரிக்க முந்திடும் வள்ளண்மை. அனைத்திலும்மேலாக 'அந்த இடத்தில்' எதிர்பார்க்க முடியாத ஆராத் தமிழ்க் காதல்.

இருபது வருடங்கள் இருக்கலாம். அது ருேயல் கனிஷ்ட பாடசாலை. விடுப்புப் பார்க்கும் எனது கண்ணில் பிடிபடுகிறது ஒருகாட்சி— (சற்றுவிலகிய காட்சி என்பதால்) விறுவிறு என்று ஒரு அப்பா வருகிருர், முதலாம் வகுப்பு 1Jவகுப்பில் தன் மகனைச் சேர்க்கத்தான். 5J வகுப்பில் நின்ற எனக்கு அப்பொழுது ஃப்றீ அதனுல் அவரை அவதானிக்க முடிந்தது.

## எளிமைமிக்க பேராசிரியர்

வழமையாக அழுகையோடு வரும் பிள்ளைகளோடு அம்மாமாரும் அநேகமாக ஆயாமாருமே வருவர் அதற்குமாருக இந்த அப்பா வந்திருந்தார். அந்த அப்பாவும் சற்று முதிர்ச்சியாகத் தோன்றினுர். 'டை' யுடன் வருகின்ற இடத்தில் உடையுடன் முக்கியத்துவம் கலக்காத முறையில் அவர் வந்திருந்தார். வந்தவர் தயக்கமின்றி 1J வகுப்பில் நுழைவதைக் கண்டேன். சற்றுநேரத்தில் ஆசிரியையிடம் அழுத்தமாக ஏதோ விஷயத்தைச் சொல்லியபடி வெளி வந்தார் அவர் ஆர் அந்த அசாதாரண ஆனுல் மிக்க எளிமை மனிதர். அறியும் ஆவலுடன் 1 Jக்குச் சென்றேன். அவர்தான் பேராசிரியர் சின்னத்தம்பி என அறிந்தேன்.


## இரு பெரும் பண்புகள்

பேராசிரியரின் இரண்டு அம்சங்கள் எமது அவதானத்துக்குரியன. ஒன்று அவர் வேற்றவர் முன்னிலையில் தமது தமிழ்ப் பிள்ளைகளைத் தட்டிக் கொடுக்கும் இயல்பினர். அடுத்தது, ஆராத் தமிழ்க் காதல் காரணமாக ஆர் ஆரிடம் தமிழ் இருக்கிறதோ அந்தத் தமிழை வளர்க்க அவரை தன்னுலானவரை ஊக்குவிப்பது. இந்த இரண்டு பண்புகளும் அவரிடம மிகவும் முனைப்பாக இருந்தமைக்குப் பல நிகழ்ச்சிகளைக் காட்டலாம்.

## நூல் வெளியீட்டில்

எனது 'பா' வெளியீட்டு விழாவக்கு வந்து அந்த மேடையை அலங்கரித்தார். பா வெளியீட்டு விழா மிகவும் பணக்காரத் தனமாக நடைபெற்றது. ருேயல் பெற்ருேரும், பிள்ளைகளும் சரஸ்வதி மண்டபத்தை நிறைச்தனர். நாவற்குழியூர் நடராசன் தலைமை கவிப்பெரும் முருகையன் தமிழறிஞர் இ. இரத்தினம், கலாநிதி கைலாசபதி இவர்கள்தான் கருத்துரைகள். எம். ஏ குணசீலநாதன் பாசத்திய சீலனின் இசைப்பாடல்களை மெல்லிசை செய்தல். அறிவிப்பாளரோ அமரர் சரு! கொழும்பிலிருந்த தமிழ்ப் பெருமக்களிற் சிலர் சிறப்புப் பிரதிகளைப் பெற்றுக் கௌரவித்தனர். அவ்விழாவிலே நாவற்குழியூர் நடராசன் சிறப்பாளர் பெயரை அறிவிக்க. திருமதி மகாதேவா (ஸ்பீக்கர் துரைசாமியின் மகள்) பேராசிரியர் சின்னத்தம்பியிடமிருந்து பாநூலைப் பெற்றுக் கொள்ளும் அந்தச் சிறப்பு நிகழ்வைப்படம் பிடித்து வைத்திருந்தோம் நிகழ்ச்சிகளின் இடையே கலாநிதி கைலாசபதி என்னை அழைத்து நிரலில் இல்லாத எத்தனை நிகழ்ச்சி இன்றும் இருக்கிறது என்ருர் சிரித்தபடி. ஒன்றும் இல்லை சேர் என்றேன். இல்லை இருக்கிறது என்று புதிர் போட்டார். அருகே இருந்த முருகையன் முகம் மலர்ந்து சிரித்தார். மேடையில் இருந்த அறிஞர்கள் ஏதோ கூடிக்கதைத்தனர். புறொஃபெசரின் முகம் ஏன் இப்படி மலர்கிறது; வாய் கனக்கிறது! உற்சாகத்துடன் எழுகிருர் ஒலி வாங்கி முன்வந்த பேராசிரியர், பா என்ற நூலை யாத்த பாவலனுக்குப் பாவலன் என்ற பட்டத்தை அளித்துக் கௌரவிக்கிறோம்' என்ருர். பட்டம் அளித்தது மட்டுமன்றி, என்னைப் பின்புகாம் மாதெல்லாம் ஒரு புத்தகத்திலாவது அதைப் போடவேண்டும் என்று வற்புறுத்துவார். அவர் ஆசிப்படி பாட்டு என்ற சிறுவர் நூலை [எழுபதாம் ஆண்டு] பாவலன் என்ற பெயரிலேயே வெளியிட்டு அவர் தமிழ்க்காதலுக்கே அர்ப்பணம் செய்தேன். பாம் இலக்கிய வட்டம் அந்நூலையே சிறந்த சிறுவர் நூலாகத் தெரிவு செய்திருக்கும் அந்தச் நற்செய்தியைப் பேராசிரியருக்குச் செல்லா வேண்டுமென்று ஆசித்தேன். அவர் சுகவீனமுற்றிருக்கும் செய்தியை திருமதி முத்துவேற்பிள்ளை எனக்கு சொல்லியிருந்தாலும் சுகவீனத்தைப் பலவீனம் என்றுதான் எண்ணியிருந்தேன். இதனிடையே, மணிப்பாய் இந்து பவளவிழா மலரையும் முடித்து, அதனையும் கொண்டு சென்று காட்டலாம் என்று திட்டப் போட்டிருந்தும் காலன் முந்திவிட்டான் எனது மனவெழுச்சிக்கழிவுக்கே இக்கதை உதவும் போலும்! இல்லை. பேராசிரியர் சின்னத்தம்பிக்குள்ளே வாழ்ந்திருந்த இன்னெரு சின்னத்தம்பியை அதாவது அவர் தமிழ்க் காதல் வண்ணத்தை அன்போடு அறிக்கை செய்து அவரை அஞ்சலிப்போம்.

- பாவலன் -



பம்பலப்பட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற பாடநூல் வெளியீட்டுவிழாவில் நாவற்குழியூர் நடராசன் பேராசிரியர் அ. சின்னத்தம்பி. கொழும்பு நங்கையர் பணிக்குழுவைச் சேர்ந்த திருமதி மஹாதேவா ஆகியோர் மேடையிற் காணப்படுகின்றனர்.



அண்மையில் தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்திருந்த இந்தியப் பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தி திருவையாறில் தென்பிராந்திய கலாசார மையத்தை திறந்து வைத்தபோது தமிழ்நாடு முதலமைச்சர் தஞ்சாவூர் வீணையொன்றினை அன்பளிப்பு செய்தார். பிரதமர் அவ்வீணையை பெருமகிழ்ச்சியுடன் பெற்றுக்கொள்வதைப்படம் காட்டுகிறது!

# உண்மை ஒளியை உலகிற்குணர்த்திய மேதை

உலக மக்கள் மத்தியிற் காணப்படும் பாகுபாட்டு உணர்ச்சிகளும் துவேஷ சிந்தனைகளும் முற்றாக நீக்கப்பட வேண்டுமென்று சொல்லளவிற் பல தலைவர்களும் ஞானிகளும் சொல்லியிருக்கின்றார்கள். இப்பேருண்மைகளை நடைமுறைப் படுத்துவதற்குச் சிலர் காலத்திற்குக் காலம் தோன்றித் தொண்டு செய்திருக்கிறார்கள். அப்படிப்பட்டோரிலும் பெரும்பாலானோர் தமது இனமத, மொழி தேச வரம்புகளுக்குள் அடங்கிய சிந்தித்துப் போதித்து வாழ்ந்தார்கள். சிலர் தமது மதங்களுக்கூடாகவும் மொழி, இனம் சார்ந்த இலட்சியங்களுக்கூடாகவும் அன்பையுஞ் சகோதரத்துவத்தையும் வளர்க்க முற்பட்டாலும் பல விதமான துவேஷங்களை வளர்ப்பதிலே வெற்றிகண்டிருக்கிறார்கள்.

சகல வரம்புகளுக்கும் மேலாக வளர்ந்து நின்று மனிதர் யாபேரும் அறவழியில் நின்று துவேஷங்களை நீக்கி உலக சமாதானத்தையும் சகோதரத்துவத்தையும் காப்பாற்ற வழி சொன்ன தத்துவ ஞானிகளில் முதன்மையான ஸ்தானத்தைவகித்தவர் தொண்ணூறு வருஷங்கள் வாழ்ந்து அண்மையில் காலம் சென்ற தத்துவஞானி ஜிட்டுக் கிருஷ்ணமூர்த்தியேயாவர்.

ஒரு மனிதன் தன்னிடமுள்ள விலைமதிக்க முடியாத கருவியாகிய மூளையைக் கொண்டு மிகவும் விவேகமாகச் சிந்தித்துத் தன்னையும் மனித வர்க்கத்தையும் காப்பாற்றி உலக சமாதானத்தையும் நிலைநாட்ட வழியுண்டென்று கண்ட இவர் அதை அடைவதற்குச் சிந்தனையிற் புரட்சி வேண்டும், புதுமை வேண்டும் என ஆராய்ந்தாராய்ந்து தனது கருத்துக்களை உலகிற்குக் கொடுத்தார்.

சுமார் முப்பது வருஷங்களுக்கு முன்பு பத்து நாட்களளவில் அவரைப் பார்க்கவும் கேட்கவும் அவருடன் கலந்துரையாடவும் எனக்குச் கிடைத்த சந்தர்ப்பங்கள் என்றும் மறக்க முடியாத இனிய அனுபவங்களாகும்.

கிருஷ்ணமூர்த்தியின்கவர்ச்சியான முகத்தை ஒரு முறை பார்த்தால் மறக்கவே முடியாது. தான் கண்ட வாலிபரின் முகங்களில் ஆகக் கூடிய அழகான முகம் கிருஷ்ணமூர்த்தியின் முகந்தானென்று உலகிலே இரண்டாவது கூடுதலான ஆங்கில நூல்கள் எழுதிய ஷோ டெஸ்மண்ட் [Shaw Desmond] என்பவர் தான் எழுதிய ஆளுமையும் அதிகாரமும் (Personality and Power) என்ற நூலிலே கூறியிருக்கின்றார். மேலும் கிருஷ்ணமூர்த்தி போன்ற சிந்தனையாளனை உலகங்கண்டதுமில்லை; காணப்போவதுமில்லையென்றும் அந்தநூலிலேசொல்லியிருக்கின்றார்.

தான் ஒரு உலகப்பிரசித்தி பெற்ற சிந்தனையாளன் என்றோ அல்லது உலகப்புகழ் பெற்ற அன்னிபெசென்ற் அம்மையார் கருதியபடி தான் ஒரு அவதார புருஷரென்றோ சிறிதேனும் பெருமை அடைந்திருப்பாரென நம்புதற்கிடமில்லை. யாரும் இவரை பெருமைப்படுத்தி அறிமுகப்படுத்தினால் அதை அவர் விரும்பியதேயில்லை சர்வ சாதாரண மனிதனாகவே கணிக்கப்பட விரும்பினார். எல்லோரிடனுஞ் சேர்ந்து கலந்துரையாடி உலகப்பிரச்சினைகளைத் தீர்க்க வழி காணமுடியுமோ என ஆராய்ந்து சிந்திப்பதும் மற்றையோரை சிந்திக்க வைப்பதுமே தனது இலட்சியமாகக் கொண்டார்.

இயற்கை கொடுத்திருக்கும் அபூர்வ கருவியாகிய மூளையைக் கொண்டு விவேகமாகச் சிந்திக்க ஒவ்வொரு மனிதனுக்கும் முடியுமென்பது அவரின் நம்பிக்கை. ஒருவன் தான் சிந்திக்க விரும்பாதிருந்தால், சிந்திக்கும் ஆற்றலை வளர்க்காதிருந்தால், யாரும் சொன்ன கருத்துக்களை ஆராயாமல் உண்மையென நம்பித் துவேஷ உணர்வுகளை வளர்த்தால் அப்படியானவன் ஒரு பெரிய



இளமையில் ஜிட்டு

சோம்பேறி என்பதும் ஒருவன் தனது மூளையை உபயோகிக்காது இன்னொருவனின் கைப்பொம்மையாயிருக்கக் கூடாது என்பதும் கிருஷ்ணமூர்த்தியின் கருத்து.

ஒரு மனிதன் தான் செய்ய வேண்டிய ஒரு தொழிலின் நுட்பத்தை அறிவதற்குக் கற்கும் கல்விக்கு கிருஷ்ணமூர்த்தி ஒரு தடையும் விதிக்கவில்லை. தொழிற்கல்வியில் ஏற்படக்கூடிய போட்டி பொறாமைகளைக் கண்டித்திருக்கிறார்.

''அன்பை, சகோதரத்துவத்தை வளர்க்கும் உண்மைகளை ஒரு மனிதன் தானாகவே உணர்ந்து வளர்க்கவேண்டும். ஒருவன் தனது சிந்தனை சக்தியை ஒரு அரசியல்வாதியின் அல்லது சமயவாதியின் வழிநடத்தலுக்கு அமைய

த. செல்வத்துரை
[சட்டத்தரணி]

வளர்க்கத் தெண்டிப்பானால் ஏமாற்றத்தையும் கூடிய பிரச்னைகளையுமே எதிர்நோக்கவேண்டியிருக்கும். மனித வர்க்கத்தின்பால் உண்மையான அன்பு ஒருவன் உள்ளத்திலே குடிகொண்டுவிட்டால் அவனால் ஒரு வேஷதாரியாகவிருக்கமுடியாது. தான் தன்னை ஒரு இந்துவென்றோ கிறிஸ்தவன் என்றோ அல்லது வேறு சமயத்தைச் சேர்ந்தவன் என்றோ அல்லது ஒரு அரசியற் கட்சியைச் சேர்ந்தவன் என்றோ சிந்தித்து அப்படியான சிந்தனையால் வரக்கூடிய துவேஷத்தை வளர்க்கமாட்டான்.''

கிருஷ்ணமூர்த்தி கொடுத்த இப்பேருண்மை பலருக்கு கசப்பாயிருக்கலாம். எவர் வெறுத்தாலும் தன் உள்ளத்தில் உணர்ந்தவற்றையே சொன்னார். 'உண்மைக்குயிர் வாழும் உத்தமருக்கச்சமில்லை' என்றபடி வாழ்ந்துகாட்டினார்.

''உள்ளத்திலே உண்மையை உணரக்கூடிய பண்பில்லாதவன் சுயநலம் காரணமாகத் தனது வகுப்புவாதத்தை வளர்ப்பதற்குப் பல நியாயங்களைக் கண்டுபிடிப்பான். மனிதவர்க்கத்தின் அன்பையும் பண்பையும் ஒற்றுமையையும் சகோதரத்துவத்தையும் வளர்க்க விரும்புபவன் தனது சிந்தனைசக்தியையும் செயற்திறனையும் வளர்த்துக்கொண்டேயிருப்பான். சாதித் துவேஷத்திற்கோ சமயத் துவேஷத்திற்கோ வகுப்புத்துவேஷத்திற்கோ அடிமையாக மாட்டான். யாரும் அவனை அடிமையாக்கவும் முடியாது'' என்பது அவர் கருத்து.

கிருஷ்ணமூர்த்தி உலக மக்களை ஒரு குடும்பமாக யோசித்தே தனது கருத்துரைகளைச் சொன்னார். பல பிரச்னைகள் உலகை சின்னாபின்னமாக்கிக்கொண்டிருக்கிறபடியால் பிரச்னைகளைக் காய்தல் உவத்தலின்றி கூர்மையாக அவதானித்துத் துவேஷமனப்பான்மையின்றித் தீர்வுகாண வேண்டுமென்று அல்லும் பகலும் பாடுபட்டார். புராதன சமயங்களுக்கும் சமயத் தலைவர்களுக்கும் ஏன் கிருஷ்ணமூர்த்தி மதிப்புக்கொடுக்கவில்லை என்ற கேள்வியைப் பலர் கேட்டிருக்கிறார்கள். சமயத்தலைவர்கள் தம் தம் சமயங்களை வளர்க்கத் தெண்டித்தார்களேயல்லாமல் உலக மக்களை ஒரு குடும்பமென்று கருதி அவர்கள் மத்தியில் அன்பை, பண்பை, ஒற்றுமையை வளர்க்கப் பாடுபடவில்லையென்பதே கிருஷ்ணமூர்த்தியின் கருத்து. ஆனபடியாற்றான் அவரின் கருத்துரைகள் எந்தவொரு சமயத்தைச் சார்ந்ததாயும் இருக்கவில்லை.

தியானம் என்றால் என்ன என்ற வினவுக்குக் கிருஷ்ணமூர்த்தியின் கருத்துக்கள் வருமாறு,

''ஒரு மனிதன் தன்னையும் தனது சிந்தனைகளையும் மிகவும் நுட்பமாக அவதானிக்கக் கூடிய ஆற்றல் உடையவனாக இருத்தலே தியானத்தின் இலட்சணம். ஒருவன் பிள்ளைப் பராயத்திலிருந்தே பல எண்ணங்களை அனுபவங்களை துவேஷங்களைச் சேர்த்துக் கொண்டு வந்திருக்கிறான். இவை எவ்வளவு தூரம் வகுப்புவாதங்களை முரண்பாடுகளை சமூகக் கொந்தளிப்புக்களை வன்செயல்களை வெளிப்படுத்தக் கூடியன என்பனத உணராது வாழ்ந்திருக்கின்றான். தனது விவேகத்தை உபயோகித்துத் தன்னைப் பீடித்திருக்கும் துவேஷங்கள் நிரம்பிய அனுபவங்களினால் ஏற்பட்ட மனநிலையில் இருந்து தன்னை விடுவிக்கக் கூடிய ஆற்றல் பெறுவதே தியானத்தின் முதல் நோக்கமாகும். சமயச் செருக்கோ சாதிச் செருக்கோ அறிவுச் செருக்கோ - இவைகளில் இருந்து விடுதலை பெறவேண்டும். அப்படிப்பட்ட விடுதலை பெற்ற ஒருவனின் உள்ளத்திலேதான் உண்மையான அன்பு, சகோதரத்துவம், சமாதானம் வளரவழியுண்டு.

''அழுக்காறு, அவா, வெகுளி போன்ற குணங்கள் ஒருவனின் உள்ளத்திலே தனக்குத் தெரியாமல் வந்து விழும்பொழுது அவற்றை உணர்ந்து சிந்தித்து அவதானிக்கக் கூடிய ஆற்றல் உடையவனே விவேகமாகச் சிந்திக்கும் இயல்புடையோன். ஞான ஒளி பெறக்கூடிய முதற்படியில் நிற்கின்றான்.''

கிருஷ்ணமூர்த்தி பட்டம் பெறவோ பதவி பெறவோ ஒருதலைமைப்பீடத்தில் அமர்ந்திருந்துஞானோபதேசஞ்செய்ய வேண்டுமென்றோ ஆசைப்படவில்லை.

இரண்டு உலகமகாயுத்தங்களும் அவரை மிகவும் தீவிரமாகவும் ஆழமாகவும் சிந்திக்க வைத்தன. உலகயுத்தம் முதன் முதலாகத் தனிமனிதரின் உள்ளங்களிலே உண்டாகின்றன என்பதும் அப்படி உண்டாக வேண்டிய காரணங்களை ஆழ்ந்து சிந்தித்து அறிந்து அவற்றை உலகமக்கள் உணரும்படி செய்து அவற்றை நீக்க உதவி செய்ய வேண்டுமென்பதுமே அவரின் இலட்சியமாக அமைந்தது. மனிதவர்க்கம் மிருகவர்க்கத்திலும் பார்க்க கேவலமாக வாழ்வதைப்பார்த்து வருந்தினார் மனித வாழ்க்கையின் சுபிட்சத்திற்குக் கண்டுபிடிக்கப்பட்ட விஞ்ஞான, முறைகளைக் கட்டுப்பாடின்றி மனிதவர்க்கத்தின் அழிவுக்கு அரசியற்தலைவர்கள் பயன்படுத்தினதே அவரின் புதுவித புரட்சிகரமான சிந்தனைக்கும் ஆராய்ச்சிக்கும் ஏதுவாயிருந்தது.

## இலக்கியச்சந்தி

✶ யாழ்வாணன்

யாழ். பல்கலைக்கழக இயற்கை விஞ்ஞான மன்றத்தினர் யாழ். பரியோவான் கல்லூரியில் கடந்தமாதம் நடாத்திய அபிவிருத்திக் கண்காட்சியில் ஓரம்சமாக ஈழத்துத்தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் இடம் பெற்றிருந்தன.

பல்கலைக்கழக மாணவர்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட இப்புத்தகக்கண்காட்சி, முழுமையாக ஈழத்துநூல்களை சஞ்சிகைகளை அடக்கியதாகவிருக்கும் என்ற எதிர்பார்ப்புடன் அங்கு சென்றவர்கள் ஏமாற்றத்திற்குள்ளானார்கள்.

புத்தககண்காட்சிப் பகுதியில், கடந்த தசாப்தத்தில் வெளிவந்தநூல்கள் சஞ்சிகைகள் ஆகியவற்றில் சிலவே இடம் பெற்றிருந்தன. இன்றைய பிரச்னை பற்றிய வெளியீடுகள்கூட அரிதாகவே காணப்பட்டன.

போதிய அவகாசம் ஏற்பாடுகள் எதுவுமின்றி இப்பகுதி திடீரென ஒழுங்குசெய்யப்பட்டிருக்கலாம். ஓரிரு எழுத்தாளர்களின் வீட்டு நூலக நூல்கள் சஞ்சிகைகளைக் கொண்டே மேற்படி கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டது என்பதை அனுமானிக்கக் கூடியதாக விருந்தது.

எது எவ்வாறாயிலும் தற்போதைய சூழ்நிலையில் இக்கண்காட்சியை ஒழுங்கு செய்த மாணவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

எதிர்காலத்தில் புத்தகக் கண்காட்சியொன்றினை நடாத்த முற்படும்போது, இலக்கிய அமைப்புக்கள், எழுத்தாளர்கள், பல்கலைக்கழக தமிழ்ப்பகுதியாளர் ஆகியோரின் ஆலோசனைகளையும் ஆதரவையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதை இக்குறைபாடு சுட்டிக்காட்டுவதாயுள்ளது.

### அமெரிக்க நூலகங்களும் நமது நூல்களும்

ஈழத்தில் வெளியாகும் தமிழ்நூல்கள், தமிழர்களினால் வெளியிடப்படும் ஆங்கில நூல்கள் மற்றும் சஞ்சிகைகள் ஆகியனவற்றை ஐக்கிய அமெரிக்க நூலகங்களுக்கு அனுப்பி வைக்கும் பிரதிநிதியாக யாழ். இலக்கியவட்ட உறுப்பினரும் மத்திய கல்லூரி நூலகருமான திரு. கா மாணிக்கவாசகர் கடந்த இரு தசாப்தமாகச் செயல்பட்டு வருகின்றார்.

இதுபற்றி அவர் தகவல் தருகையில் எமது வெளியீட்டின் பிரதியொன்று முதலில் டில்லியிலுள்ள அமெரிக்க நூலகத்திற்கு அனுப்பப்படும் என்றும் அப்பிரதி அவர்களினால் ஏற்றுக் கொள்ளப்பட்டால், அவ்வெளியீடுபற்றிய விபரம் அனைத்துலக நூற்பட்டியலொன்றில் வெளியிடப்பட்டு அனைத்துலக நூலகங்களுக்கு வழங்கப்படுவதுடன் பலவேறு நூலகப் பட்டியல்களிலும் இந்நூல் விபரம் வெளியிடப்படும் என்றும் இதனால் இந்நூலை அமெரிக்காவின் எந்த நூலகத்திலும் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருக்கும் என்றும் நூலின் குறிப்பிட்ட பக்கங்கள் தேவைப்படின் அவற்றின் படப்பிரதியையும் பெற்றுக் கொள்ளலாம் என்றும் பிரதிகள் தேவைப்படும் போது அவர்கள் எம்மிடமிருந்து விலைக்குப் பெற்றுக் கொள்வார்கள் என்றும் தெரிவித்தார்.

எமது எழுத்தாளர்கள், பதிப்பாளர்கள் இத்தகைய நற்பயன் தரும் பணிக்கு ஒத்துழைப்புத்தருவதில்லையென ஆதங்கப்பட்டார்.

எதிர்காலத்திலாவது நமது எழுத்தாளர்கள், பதிப்பகத்தினர், தமது வெளியீடுகள், சஞ்சிகைகள் ஆகியவற்றின் பிரதியொன்றினை திரு. கா. மாணிக்கவாசகருக்குக் கிடைக்கக் கூடியதாகச் செய்வது அவரின் பணிதொடர ஊக்கமும் அளிப்பதுடன், எமது ஆக்கங்கள் அனைத்துலக நூலகங்களிலும் இடம் பெறவழி சமைத்ததாகவுமிருக்கும்.

### 'தாயகம்'

தேசிய கலை இலக்கியப் பேரவையினால் வெளியிடப்படும் 'தாயகம்' பதின்காவது இதழ் வெளிவந்துள்ளது.

இவ்விதழில் ந. சுரேந்திரன், சி. சிவசேகரம், குமுதன் உட்படப் பலரது ஆக்கங்கள் வெளியாகியுள்ளன. 'இன்றைய பிரச்னை'களை மையமாக வைத்து எழுதப்பட்ட சிறுகதைகள், கவிதைகள் பல இடம் பெற்றுள்ளன. 'தாயகம், 15/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

### நாவல் போட்டி

1983-ஆம் ஆண்டுக்குப் பின்னர் சிறுகதை மதிப்பீட்டில் மாத்திரம் ஈடுபட்டு வந்த தமிழ்க் கதைஞர் வட்டம், 1886 ஆம் ஆண்டு முதல் தனது பணியின் எல்லையைச் சிறிது விரிவுடுத்தத் தீர்மானித்துள்ளது இதன் முகற் கட்டமாக, 1982, 1983, 1984, 1985 ஆகிய நான்கு ஆண்டுக் காலத்தில இலங்கை எழுத்தாளர்களினால் எழுதி வெளியிடப்பட்ட தமிழ் நாவல்களை மதிப்பீடு செய்து அவற்றுள் சிறந்த மூன்று நாவல்களுக்குப் பரிசுகள் வழங்கத் முன்வந்துள்ளது.

இப்போட்டியில் பரிசு பெறும் முதல் மூன்று நாவல்களுக்கு ரூ. 1500/- பரிசு வழங்குவதெனவும், நாவல்களின் தரம் நோக்கி முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளின் தொகை நிர்ணயிக்கப்படுமெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நாவல் போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் இலங்கை எழுத்தாளர்கள், தமது படைப்புகளில் ஒரு பிரதியை 'தகவம்' தலைவர் திரு வ. இராசையா அவர்களுக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.


நாவல்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி திரு. வ. இராசையா, தலைவர், 'தகவம்' பழையரோட், கோப்பாய்.

இப்போட்டிக்கான நிபந்தனை, நாவல்கள் ஈழத்து எழுத்தாளர்களது சொந்தப் படைப்பாக இருக்க வேண்டும் என்பதும், இது நூல் உருவில் அச்சிடப்பட்டிருக்க வேண்டும் என்பதுமே.

போட்டிக்கான நாவல்கள் கிடைக்க வேண்டிய கடைசித் திகதி 31 மார்ச் 1986.

## குறுநாவல்

# கரை சேரும் கட்டு மரங்கள்




ஊரப்பாய் சிவம்

ஜானகி போய் ஒருவாரமாகிவிட்டது. கடந்தவார இறுதியில் ஊருக்குப் போய் வருவதாகச் சொல்லிப் போனவளிடமிருந்து எந்தவித தகவலையும் காணவில்லை. அறைத் தோழிகள் மூவருக்கும் வியப்

## 2

பாகவும் கவலையாகவும் இருந்தது. என்ன நடந்ததோ என்ற திகில். கடிதம் எழுதவும் யோசனையாக இருந்தது. வீட்டில் ஏதாவது பிரச்னை நடந்திருந்தால் இவர்களின் கடிதம் இன்னும் விபரீதத்தை ஏற்படுத்தி விடலாம்.

என்ன நடந்திருக்கலாம் என்று விதவிதமான கற்பனைகளைத் தமக்குள்ளேயே வளர்த்துக் கொண்டிருந்தார்கள் இவர்கள்.

ஒருவேளை முகுந்தன் திடீரென வந்திறங்கியிருக்கலாம். அல்லது பெற்றோரின் வற்புறுத்தலால் முரளியுடன் திருமணமே நடந்திருக்கலாம். அல்லது ... ... ஜானகி ஒருவேளை தற்கொலை செய்திருப்பாளோ...? இந்த நினைவுகளே அவர்களது நெஞ்சைக் குடைந்த வண்ணமிருக்க நாட்கள் நத்தையாக நகர்ந்தன.

அடுத்த வாரத்திலும் இரண்டு நாட்கள் கழிந்தன. அன்றுமாலை 'லெக்சர்' முடிந்து நீரஜாவும், சுதாவும், சாந்தியும் அறைக்கு வந்த பொழுது அங்கே ஜானகி அவர்களுக்காகக் காத்திருந்தாள். வியப்பும் ஆர்வமும் பொங்க அவளை நோட்டம் விட்டவர்களுக்கு அவளுடைய பொலிவிழந்த முகம் வருத்தத்தைக் கொடுத்தது.

சோகமே வடிவெடுத்தவளாக எதையோ பறிகொடுத்தவள் போல் - மௌனமாகப் புன்னகைத்த அவளருகில் வந்த நீரஜா அவள் கைகளைப் பற்றினாள். திடீரென ஏதோ நினைத்தவளாக அவளது இடது கையை மேலே தூக்கி விரல்களை நோக்கினாள். 'முரளி என்று சின்னஞ்சிறு அழகிய எழுத்துக்கள் பொறித்த புதிய மோதிரம் மின்னியது.

''கொங்க்ராஜுலேஷன்ஸ் ஜானு'' என்று கலகலப்பாகச் சொல்லி அவள் கையைக் குலுக்கி அவளை மகிழ்விக்க முற்பட்டாள்நீரஜா. மற்றவர்களும் அவளைச்சூழ்ந்து கைகளைப் பற்றித் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். ஆனால், நீரஜாவின் தோள்களில் முகம்புதைத்துக் குலுங்கினாள் ஜானகி.

எவ்வித முடிவையும் சுயமாக அவள் எடுக்க முடியாத நிலையில், முகுந்தன் விஷயத்தில் அவளுக்கு எந்தவிதமான நம்பிக்கையும் ஸ்திரப்பட முடியாத நிலையில் வீட்டுக்காரரின் தவிர்க்க முடியாத நெருக்கடி நிலையில் வேறுவழியின்றி முரளியுடனான திருமண ஒப்பந்தத்தில் அவள் கையொப்பமிட்டாள். மிக எளிமையான முறையில் திருமணப்பதிவு நடந்தது. பரீட்சை முடிந்த மறு மாதத்திலேயே திருமணம் நடத்துவதாகத் தீர்மானித்தனர்.

பழையநினைவுகளைக் களைந்து விட வழி தெரியாமலும், புதிய உணர்வுகளை வேரூன்றச் செய்ய வகையறியாமலும் தத்தளித்தாள் ஜானகி. நெருங்கி வருகிற பரீட்சையும் சூழ்ந்து நிற்கும் படிப்பின் அவசரமும் மெல்ல மெல்ல ஜானகியை மாற்ற முற்பட்டுக் கொண்டிருந்தன.

அவ்வவ்போது முரளி அவளைத் தேடி அங்கு வந்தான். புத்தம் புதிதாகப் பொங்கிப் பிரவகிக்கின்ற அவனது காதல் உணர்விற்கு இவளது சோக வடிவம் தடைபோடப் பார்த்தது ஆனால், முரளி ஒரு மனிதத்துவம் நிறைந்த மனிதனாக பொறுமையோடு அவளை அணுகினான். அவளை அவளுடைய பலத்துடனும் பலவீனத்துடனும் முழுமையாகவே ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவத்தை அவன் பெற்றிருந்தான்.

''முகுந்தனை என்னாலை மறக்க முடியேல்லையே முரளீ'' என்று அவனிடமே சொல்லி அவன் மார்பில் முகம் புதைத்துக் குமுறி அழுகிற அவளை ஆதுரத்தோடு அணைத்துத் தேறுதல் சொல்வான் முரளி. எந்தவிதவான கோபமோ பொறுமையோ இல்லாமல்.

''ஜானு, சந்தர்ப்பம் சூழ்நிலையால் இப்பிடி ஆயிட்டுது. ஒரேயடியாய் அவனைமறந்திடு எண்டு நான் சொல்லேல்லை. அவனை உன்ரை ஒரு பழைய நண்பனாக நினைச்சுக் கொள்ளு. படிப்படியாய் உன்ரை இதயத்திலை எனக்கும் ஒரு கொஞ்ச இடம்தா. போகப் போகச் சரியாயிடும்'' என்று முரளி சொல்லும்போது, தன்னிடம் அவன் யாசிக்கின்ற அந்தப் பரிபூரணமான அன்பை முன்னமே பறிகொடுத்து விட்டதற்காக அவனுடைய பாதங்களில் முழுமையாகச் சரணாகதி யடைய முடியாமல் இருப்பதற்காக மனம் கசிவாள். முதலிலேயே முரளியைச் சந்திக்காதிருந்த தன்னுடைய துரதிர்ஷ்டத்தை எண்ணி வேதனைப்படுவாள்.

முரளியின் இந்த மனிதத் தன்மைக்காகவாவது தான் தன்னை முழுமையாக மாற்றிக் கொள்ள வேண்டும். அந்தப் பழைய பென்சிற் கோடுகளை அழித்துவிட வேண்டுமென்று யோசிப்பாள். ஆனால், முகுந்தன் என்கின்ற அந்த எழில் வடிவம் அழியாத வண்ணச் சித்திரமாகத் தன்னுள் ஒட்டிக் கொண்டிருப்பது ஏன்?

முரளியின் பெருந்தன்மையை நினைத்துப் பூரித்துப் போய் விடுகிற கணங்களில் அவனுடைய விஸ்வரூபத்தின் நிழலையாவது தனது இதயத்தில் புகுத்த வேண்டுமென்று யோசிப்பாள்.

இரண்டுவிதமான மனநிலைகளுக்கிடையில் தத்தளித்தாள் ஜானகி; ஸ்டீவன்ஸனின் இரட்டை மனிதன் நாவலில் வரும் கதாநாயகன் மாதிரி தன்னுள் தான் முரண்பட்டு நின்றாள். மிஸ்டர் ஹைட் விழித்தெழுந்தால் டொக்டர் ஜெகில் மறைந்து விடுகிறார். ஜெகிலாகவே இருக்க வேண்டுமென்றுதான் அவள் நினைக்கிறாள். ஆனால், அடிமனம்...? அடிக்கடி முரளியோடு பேசிப் பழகித் தன் பழைய நிலையை மெல்ல மெல்ல மறக்க முயன்று கொண்டிருந்தாள். முரளியுடன் வெளியே புறப்பட்டு சினிமாவுக்கும் கடைத் தெருவுக்கும் போய் வரத் தொடங்கினாள்.

அறைக்குத் திரும்பியஜானகி திடுக்குற்றாள். அறைவாசலில் அவளுக்காகக் காத்திருந்தவன் ... ... முகுந்தன்! ஒருகணம் திகைத்துப் போய் நின்றுவிட்டாள்.பழைய குறும்புத்தனமான பார்வையும் கொஞ்சும் குறும்புச்சிரிப்புமாக நின்ற அவன் அவள் நடந்து வரும் அழகை விழுங்கிக் கொண்டிருந்தான்.அவன் விழிகள் அவள் உடலெங்கும் தவழ்ந்தன. அருகில் இவள் நெருங்கி வந்ததும் கையை எட்டிப் பிடிக்கப்போனான். இவள் அவசரமாக உள்ளே ஓடிப்போய்ப் படுக்கையில் விழுந்தாள். தலையணையில் முகம் புதைத்துக் குமுறிக் குமுறி அழுதாள். விபரம் புரியாமல் திகைத்து நின்றான் முகுந்தன்.

''என்ன ஜானு! என்ன நடந்தது?'' என்று ஆதரவுடன் கேட்டபடி அருகில் வந்து ஜானகியின் தோள்களில் கை வைத்தான். சரேலென்று கையை விலக்கிச் சற்று எட்ட விலக நின்ற அவளை வியப்புடனும் வேதனையுடனும் பார்த்தபடி

'ஜானகி, நான்தான் வந்திட்டனே' இனிஏன் அழுகை. அழுகையை விட்டிட்டு என்ன பிரச்சினை எண்டு சொல்லு நானும் எனக்கு நடந்த கஷ்டத்தைச் சொல்லிறன்......''

அடிபட்ட வேங்கையைப் போலத் திரும்பிய ஜானகியின் கண்களைக் கண்டு பயந்தான் முகுந்தன். கண்ணீர் மல்கிச் சிவந்து தோன்றிய அந்த விழிகள் அவனைத் துளைத்தெடுத்தன.

''இப்ப ஏன் இஞ்சை வந்தியள்?''

''என்ன ஜானகிஇது? நான் என்ரை ஜானகியை விட்டிட்டு வேறை எங்கை போவன்?''

ஓ! எத்தனை சங்கடமான நிலை இது எனக்கு மட்டுமல்லாமல் இவனுக்குக் கூட எத்தனையோ ஏமாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது இந்த நிலைமை. ''நான்என்ரைஜானகியை விட்டிட்டு வேறை எங்கை போவன்?'' என்று கேட்கிறானே இவன். எனது காதலில் இவனுக்கு எவ்வளவு நம்பிக்கை! இவனுடைய நம்பிக்கைக்கு நான் துரோகமல்லவா செய்து விட்டேன்...— பாவம் இவன் எப்பிடி இதனைத் தாங்கப் போகிறான்?

முகத்தைக் கைகளால் மூடிக் கொண்டு கண்ணீர் உகுந்தாள் ஜானகி. முகத்தின் மேல் மூடியிருந்த அந்தக் கைகளில் அந்த விரலில்... ஓ அது என்ன? 'முரளி' என்ற எழுத்துக்களுடன் மின்னிய அந்த மோதிரம்......

''ஜானகி!'' என்று மறுபடி அழைத்தான் முகுந்தன்.அவன் குரலில் ஏமாற்றம், வேதனை, விரக்தி யாவும் குமிழியிட்டன.

''என்னை ஏமாத்தி இந்த நிலைக்குத் தள்ளிப்போட்டு, இப்ப வந்து ஏன் என்னைச் சாகடிக்கிறீங்கள் முகுந்தன்?''

''இல்லை ஜானகி நான் ஏமாத்தேல்லை. ஏமாந்திட்டன். நீதான் என்னை ஏமாத்திட்டாய். திடீரென்று வந்து உன்னைத்திகைக்க வைக்க வேணுமெண்டு கடிதம் கூடப் போடாமல் ரண்டரை மாசத்துக்கு முன்னமே வெளிக்கிட்டனான். இடையிலை கப்பல் பழுது பட்டு எங்கெங்கையோ அலைஞ்சு இஞ்சை வந்திறங்கிய உடனேயே உன்னட்டை ஓடியந்தன் ஜானு. நீ... நீ... இப்பிடி என்னை மோசம் பண்ணீட்டாய். .'' முகுந்தனும் கண்கலங்கினான். இங்கு நடந்ததை — எதுவுமே செய்ய இயலாத நிலையில் தான் சிக்கி வேதனைப்படுவதையெல்லாம் சொன்னாள் ஜானகி.

அறைக்குத் திரும்பி வந்த தோழிகள் மூவரும் முகுந்தனைக் கண்டு திகைத்தனர். என்ன நடக்கப் போகிறதோ என்று பயந்தவாறு மெல்ல நழுவிவிட்டனர்.

தன் இதயத்தை எண்ணி அவள் பயந்தாள். ஜானகி மிகவும் பயந்தாள். இனி என்னசெய்வது! அழிந்து கொண்டிருந்த வண்ணச் சித்திரம் மீண்டும் புதுப்பிக்கப் படுகிறது. இறந்து கொண்டிருந்த மிஸ்டர் ஹைட் மீண்டும் உயிர் பெற்றுக்கொண்டிருக்கிறானே?

முகுந்தன் போய்விட்டான். அவன் போன நேரம் தொடக்கம் மௌனத்தையேஅரணாக்கி மறுகிக் கொண்டிருந்தாள் ஜானகி. வாழ்க்கையே சூனியமாகி விட்டதாகக் கலங்கித் தவித்தாள்.

மனத் தராசு நிறுத்தப்படுகிறது. ஒருதட்டில் முகுந்தன். மறுதட்டிலே முரளி. தட்டு சீரோ ஆடுகிறது. முள் துடிக்கிறது. ஜானகியின் இதயம் வலிக்கிறது. நெஞ்சைப் பிடித்துக் கொள்கிறாள். இவனா, அவனா? இதயம் கவர்ந்தவன் இவன். கரம்பற்றியவன்அவன். உள்ளமா? உடலா? கைவிரலில் மோதிரம் உறுத்தியது. காரணமில்லாம அதனை உறுத்துப் பார்த்தாள். முரளி.. முணுமுணுக்கின்ற உதடுகளைத் தடுக்க முடியவில்லை. அவனது ஆளுமை அவளைக் கவிந்து கொள்கிறது. தன்முன்னே நின்று புன்னகைக்கும் அந்த மென்மையான முகம்...... கண்ணாடியினூடாக நோகாமல் நோக்கும் அந்தக்கருணை விழிகள்.. அவள் பார்த்து கொண்டிருக்கும் போதே மெல்ல மெல்ல வளர்ந்து கொண்டே போகும் அவனது விஸ்வரூபம்... ஓ! அன்று பஹவான் கிருஷ்ணன் அர்ச்சுனனுக்குக் காட்டிய விஸ்வரூப தர்சனம் என்பது இதுதானோ? மேலே உயர்ந்து கொண்டிருக்கும் அவனது தோற்றம்... அவள் விழிகளும் மேலே படிப்படியாக உயர்ந்து கலங்கித் துளும்பி... பார்வையை நீர்த்திரை மறைத்த போது அந்த நீர்த்திரையில் ஒளிரும் அந்தச் சின்னஞ் சிறிய வண்ணச் சித்திரம்...அதில் தெரியும் குறும்புச் சிரிப்பு. நளினமான அந்த விழிகள்......முகுந்தனின் அந்த உருவம் எத்தனை இலகுவாக அவளது இதயத்துள் நுழைந்து விடுகிறது. நாடி நரம்புகளில் ஊடுருவி, உணர்வுகளுள் பரவி உற்சாகமூட்டும் அந்த அன்பு கிறங்கவைக்கும்அந்த நேசமும் நெருக்கமும்...

ஆண்டவனே! எனக்கேன் இந்தச் சோதனை? உள்ளம் முழுவதும் முகுந்தனை நாடினாலும், உடல் இந்த முரளிக்குத் தானே சொந்தம்.

அவன் இன்னும்இந்த உடலை ஆளத் தொடங்க வில்லைத் தானே? உடலையும் முகுந்தனுக்கே சொந்தமாக்கி விட்டால்?

அதெப்படி முடியும்? கைவிரல்களைப் பற்றிஅந்த மோதிரத்தை அணிவித்த கணத்திலிருந்து அவள் அவனுக்குரியவள் தானே. உள்ளத்தைப் பற்றி உலகம்என்ன கவனிக்கப் போகிறதா? சட்டம் சொல்வதைத்தான் உலகம் கேட்கும். சட்டம் உடலைப்பற்றித் தானே சொல்லும். அப்படியானால்

கதவு தட்டும் ஓசையில் திடுக்கிட்டுச் சுய நினைவு கொண்ட ஜானகி கதவைத் திறந்தாள். அறைத்தோழிகள் மூவரும் வாசலில் பதற்றத்துடன் நுழைந்தனர். அவர்களது வெளிறிய முகங்களைப் பார்த்து இவள் திடுக்கிட்டாள். இவளுடைய வெறித்த பார்வையை அவர்கள்வேதனை

(10-ம் பக்கம் பார்க்க)

# இழுவலும் கொழுவலும்

அடுத்த வீட்டு அப்புமுத்தன்
அடாத்தாகக் கொழுவுகிறான்
ஆண்டாண்டு காலம் நான்
ஆட்சி செய்த காணியுள்ளே
வேண்டாத வாதம் செய்து
வேலியையும் போடுகிறான்?

ஊர்க் கோடு என்றும் .
உயர்நீதி மன்றென்றும்
ஊரெல்லாம் ஓடி ஓடி
உள்ள படி ஏறி விட்டான்
பொய்யும் புரட்டும்
பொழுதுக்கொரு பேச்சும்
ஐயோ...... அப்புவுக்கு
அறுபதுக்குமேல் மூச்சு

ஆயுள் பரியந்தம்
ஆட்சி செய்த இந்நிலத்துள்
ஓயாத தொல்லை
ஒன்றிரண்டா? அவனாலே.
சண்டித்தனத்தால்
சாதிக்க அப்புமுத்தன்
முண்டி யெழுந்தாலும்
முடிந்திடுமோ பிரச்சனைகள்?
இந்த வழக்கும்
இழுவல்தான்... இப்போது
எந்த முடிவும் கிட்டாதாம்...
கொழுவல்தான்!

-- நெடுந்தீவு லக்ஸ்மன்

# கவிதை

என்னிடம் உள்ள கவித்துவத்தைப் பற்றியோ, தமிழறிவு பற்றியோ ஒன்றுமே எனக்குத் தாழ்வு மனப்பான்மை கிடையாது. நான் எழுதுவது கவிதை என்று நான் தான் தீர்மானிக்கின்றேனே தவிர- அதைத் தீர்மானிக்க எந்தப் புலவனின் அங்கீகாரமும் எனக்குத் தேவையில்லை என்று நினைப்பவன் நான். ஏனெனில் கவிதை என்பது எனக்கும் என் உணர்வுகளுக்கும் நிகழும் புணர்ச்சி. இதன் சுகானுபவங்களை நான் மட்டுமே உய்த்து உணருகின்றேனே தவிர, மற்றவர்களிடம் பகிர்ந்து கொண்டு, ஒரு பட்டி மண்டபம் நடத்த வேண்டிய அவசியம் இதில் என்ன இருக்கிறது...?

கவிஞர் வாலி.

# தமது இலக்கியப் படைப்புக்கள் பற்றி
# பார்த்தசாரதி

"குறிஞ்சிமலர் தமிழ் நாட்டில் பெற்ற வரவேற்பைவிட தமிழ்மக்கள் வாழும் இடங்களான இலங்கை, மலேஷியா. பர்மா போன்ற இடங்களில்தான் அதிக வரவேற்பைப் பெற்றது.

"இதிகாசங்களில் வரும் பெயர்களைத் தமது குழந்தைகளுக்கு அர்ச்சுனன். தருமன் என்று வைத்திருப்பது போல அரவிந்தன, பூரணி என்ற பெயர்கள் இலங்கையில் தான் அதிகம்."

மக்கள் மனங்களில்நிறைந்த பிரபல நாவலாசிரியர் நா. பார்த்தசாரதி 'புகழேணி'யில் அளித்த சிறப்புப் பேட்டியில் இப்படிக் குறிப்பிட்டுள்ளார். பேட்டியில் இடம்பெற்ற சில கேள்விகளும் அவற்றுக்கு திரு. பார்த்தசாரதி அளித்த பதில்களும் வருமாறு:

"தங்களுடைய எழுத்துப் பணி எப்போது ஆரம்பமானது என்று அறியலாமா?"

"என்னுடைய எழுத்துப் பணி சரியாக ஆரம்பமான காலத்தை குறிப்பிட வேண்டுமென்றால், மிகவிரிந்த அளவில் இல்லையென்றாலும் நான் உயர் நிலைப் பள்ளியில் படிக்கும் போதே இப்பணிதொடங்கியதைக் கூற வேண்டும். அப்போது மாணவர்கள் கையெழுத்துப் பத்திரிகையை நடத்த வேண்டும் என்ற ஒரு நடைமுறையிருந்தது. ஆனால் எங்களுடைய வகுப்பு ஆசிரியர் 'கலைவாணி' என்ற பெயரில் பத்திரிகையை ஆரம்பித்து அதற்கு என்னை ஆசிரியராக நியமித்தார். அது எனது எழுத்துலகுக்கு ஆரம்ப அத்திவாரமாக அமைந்தது. அப்போதே நான் ஓரளவு எழுத ஆரம்பித்து விட்டேன்."

"உங்கள் இலக்கிய வாழ்க்கைக்கு முன்னோடியாக யாரை யாவது தேர்ந்தெடுத்துக் கொண்டு பின்பற்றினீர்களா?"

"பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த நாவலாசிரியர்கள், கவிஞர்கள் எல்லோருமே என்னை எழுதத் தூண்டினார்கள். எனக்கு முன்னோடியாக அமைந்தார்கள் என்று கூற வேண்டும். குறிப்பிட்டு ஒருவரைச்சுட்டிக்காட்ட முடியாது. பல்வேறு வகையான எழுத்தாளர்களின் ஆர்வம்தான் என்னையும் எழுதத் தூண்டியமைக்குக் காரணம்."

"இப்பொழுது பல சிறு கதைகள், நாவல்கள் எல்லாம் படைத்துள்ளீர்கள். நீங்கள் எப்பொழுது எழுதுகிறீர்கள்? அதற்கென நேரம் காலம் ஏதேனும் வரையறுத்துள்ளீர்களா?"

"எழுதுவதற்கு ஒருநேரம் தேவையென்று வரும் சந்தர்ப்பத்தில் நான் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் நேரம் இளங்காலை நேரமாக விருக்கும். அதாவது வைகறை என்ற இளங்காலை நேரத்தில் நான்கு மணியிலிருந்து எட்டுமணி வரை."

"சிலர் வரலாற்று நாவல்களைப் படைப்பதிலே சிறந்து விளங்குகிறார்கள். சிலர் சமூக நாவல்களைப் படைப்பதில் சிறந்து விளங்குகிறார்கள். ஆனால் தாங்கள் இரு துறைகளிலுமே சிறந்து விளங்குகிறீர்கள். இந்த ஆற்றலை எப்படி வளர்த்துக்கொண்டீர்கள்?"

"நான் பண்டிதர், வித்துவான் பட்டங்களுக்காகப் படிக்கும் பொழுது அந்தப் படிப்புக்காக சேரர், சோழர், பாண்டியர் வரலாறு, தமிழர் பண்பாட்டுப் பழக்க வழக்கங்கள, வரலாற்றுக்கால நிகழ்ச்சிகள், வரலாற்றுக் காலத்தைச் சித்திரிக்கக்கூடிய பத்துப்பாட்டு, எட்டுத் தொகை போன்ற இலக்கியங்கள் இவையெல்லாவற்றையும் மீண்டும் மீண்டும் படிக்க நேர்ந்தபோது வரலாற்று நாவல் எழுதுவது ஒரு பெரும் பிரச்னையாக எனக்குத் தோன்றவில்லை. மனித வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டே சமூக நாவல் வரைகிறேன்."

"தங்களுடைய 'குறிஞ்சி மலர்' வாசகர் மத்தியிலே நிறைந்த தாக்கங்களை ஏற்படுத்தியது அந்த அரவிந்தனையும், பூரணியையும் நெஞ்சில் பதித்து வைத்துக்கொண்டவர்கள் நிறையப் பேர். அந்தக் 'குறிஞ்சிமல'ரின் அநுபவங்களை விவரித்துக் கூறினால் நல்லது.

"அத்கைய கதைநடையில் ஒருவரலாற்று நாவல்தான்அக் காலத்தில் எதிர்பார்க்கப்பட்டது. ஒரு சமூக நாவல் பக்குவமான தமிழ் நடையில், எதிர்பாராத தமிழ் தொடர்புள்ள தலைப்போடு வெளி வந்தமையால் நிறையப் பேர் அதைப்படித்தார்கள் அது கவனத்தை ஈர்த்தது. இன்றும்

## எழுதுவதற்கென்றொரு நேரம் தேவையில்லை

கூட என்னுடைய எழுபதுக்கும் மேற்பட்டப் புத்தகங்களில் பன்னிரண்டு பதிப்புகள் வரை விற்பனையாகியிருப்பது, இந்தக் 'குறிஞ்சி மலர்' தான். குறிஞ்சி மலர் தமிழ் நாட்டில் பெற்ற வரவேற்பிலும் பார்க்க இலங்கை மலேசியா, பர்மா போன்ற தமிழ் மக்கள் வாழும் இடங்களில்தான் அதிக வரவேற்பு பெற்றது. இதிகாசங்களில் வரும் பெயர்களை தமது குழந்தைகளுக்கு அர்சுனன், தருமன் என்று வைத்திருப்பது போல இலங்கையில் அரவிந்தன் பூரணி என்ற பெயர்களை பரவலாக வைத்துள்ளார்கள்.

"நாவல்களிலே இலட்சிய கதாபாத்திரங்கள் நடைமுறைக் கதாபாத்திரங்கள் என்று எழுதுகிறார்கள் உங்களுக்கு எதில ஈடுபாடு?

"கதாபாத்திரங்களாக அமைக்கும் பொழுது: நல்லவர்கள் கெட்டவர்கள் என்று ஏற்படுத்திக் கொள்வது காப்பியகாலத்திலிருந்து வழக்கமாயுள்ளது. சதையை வாசிப்பவர்கள் ரசிக்கத் தகுந்த, பின் பற்றத்தகுந்த கதாபாத்திரங்களும் அதே போல பின் பற்றக் கூடாத கதாபாத்திரங்களும் இருக்க வேண்டும் என்ற ஒருநடைமுறையுள்ளது. இது வாசகர்களின் மனதைப் பொறுத்தது.

"இலக்கியத்துறையில் உங்களை உற்சாகப் படுத்தும் வகையில் பரிசுகளும் பாராட்டுகளும் கிடைத்திருக்குமே?"

பரிசுகள் என்னும் பொழுது நான் வாங்கிய முதற் பரிசு; பள்ளி மாணவனாக நான் இருந்த பொழுது கல்கத்தாவில் பாரதி கமிஷன் அகில இந்திய பாரத் கட்டுரைப் போட்டி நடத்திய பொழுது அந்த கட்டுரைப் போட்டியில் பெற்ற பதக்கமே எனது முதற் பரிசாகும். அதன் பின் மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் பால பண்டிதர், பண்டிதர் தேர்வுகளில் பரிசு பெற்றேன். அதன் பின் நான் எழுதிய 'சமுதாய வீதி' என்ற நாவலுக்காக மத்திய அரசின் சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தது, 1982 ம் ஆண்டில் நான் எழுதிய 'துளசி மாடம்' என்ற நாவலுக்காக அண்ணாமலைச் செட்டியார் பரிசு கிடைத்தது, 'சாயங்கால மேகங்கள்' என்ற நாவலுக்கு தமிழ் வளர்ச்சித் துறையில் முதற் பரிசு கிடைத்தது.

"தங்களுடைய படைப்புகள் பிற மொழிகள் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றனவா?"

"நிறைய மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன. சிறு கதைகள் இந்திய மொழிகள் பல வற்றிலும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. நாவல்கள் என்று வரும் பொழுது 'சமுதாய வீதி' நாவல் குஜராத்தி மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு புத்தகமாக வெளி வந்துள்ளது. மற்றும் கர்நாடக, ஹிந்தி மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு புத்தகம் தயாராகிக் கொண்டிருகிறது. பொதுவாக சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற நாவல்கள் இருபத்திரண்டு இந்திய மொழிகளிலும் மொழி பெயர்க்கப் படவேண்டும் என்பது நடைமுறை"

"தாங்கள் பல வெளி நாடுகள் சென்று வந்துள்ளீர்கள் அந்த அனுபவம் பற்றிக் கூற முடியுமா?"

"முதல் முறையாக நான் வெளிநாடுகளுக்கு சென்றதென்பது; இலங்கை, மலேஷியாபோன்ற தென்கிழக்காசிய நாடுகளுக்கு. பாரதி விழா, ஆண்டுவிழா என்பவற்றுக்கு சொற்பொழிவாளராக அழைக்கப்பட்டுச் சென்றது தான் இங்கிலாந்து, பிரான்ஸ்' இத்தாலி, சோவியத் யூனியன் போன்ற பல்வேறு நாடுகளுக்கும் சென்று பல இலக்கியப் பரிமாற்றங்கள் செய்து திரும்பியுள்ளேன். சமீபத்தில் மேற்கு ஜெர்மன் அரசின் அழைப்பின் பேரில் அங்கும் சென்று வந்தேன்''.

**தொகுப்பு: 'பிரபா'**

## விமரிசனங்கள்

இனசனத்தவரின்
விமரிசனங்களிவை?
சுற்றி இருப்பவரின்
சுடு சரங்களிவை?

குடும்பநலன்களைக்
கவனித்துக் கொண்டேன்
'சுயநலவாதி' என்றார்கள்
பொதுப்பணி செய்ய
முனைந்த என்னிடம்
'பணமுடை போலும்'
என்பது ஏன்?

நாளைக்காகவும்
சேமித்த என்னைக்
'கஞ்சப் பேர்வழி'
என்றார்கள்
எனதுழைப்பனைத்தையும்
செலவு செய்கையில்
'ஊதாரி' என்றவர்
முனகுவதேன்?

தேவைக்கு அளவாக
உழைத்த என்னைச்
'சோம்பேறி' என்று
பழித்தனர் அன்று
ஓடி ஓடி நான் இன்று
உழைப்பதைக் கண்டு
'அவனுக்கும் இப்போது
ஆசைகள் அதிகம்'
என்று நகைக்கிறார்!

நாடிவந்தவர்க்கே
உதவிகள் செய்தேன்
'உதவாக்கரையிவன்'
என்றார் — அதனால்
தேடித்தேடி நான்
உதவிகள் செய்கிறேன்
'தேர்தலுக்கோ' என
வினவுகின்றனரேன்?

மதுவைத் தொடாது
வாழ்ந்த என்னைப்
பட்டிக்காடெனச்
சுட்டார்கள்
மதுவுடன் பழகத்
தொடங்கிய வுடனெனைக்
'குடிகாரன்' எனவே
குமைகின்றனரேன்?

கார் இருந்தும் நான்
நடக்கும் தொலைவை
நடந்தே கடந்தேன்
'கால் நடையிது' எனச்
சுட்டினர் — அதனால்
நடக்கும் தொலைவையும்
காரில் கடந்தேன்
'வீண்பகட்டிது' என
விம்முகின்றரே?

சட்டத்தை மதித்து
வாழ்ந்த எனக்குப்
'பயந்தவன்' என்று
பட்டம் சூட்டினர்
சட்டத்தை மிதிக்கத்
தொடங்கிய என்னை
'முரடன்' என்றவர்
ஒதுக்குகின்றார்கள்!
ஒதுங்குகின்றார்கள்.

அநீதிச் செயல்களை
அநியாயங்களைக்
கண்டும் கேட்டும்
'நடப்பது எதுவும்
நன்மைக்கு' என்றே
பேசாதிருந்தேன்?
'ஊமையனிவன்' என
உதைத்தனர் என்னை!
நீதி நியாயத்தைக்
தட்டிக் கேட்டேன்?
'சட்டமேதை' யெனச்
சொட்டை சொல்கிறார்?

சுற்றி இருப்பவரின்
சுடுசரம் இவைகள்
விமரிசனம் இவைகள்
எரிசரம் இவைகள்?

— முருகு

## அரசமரத்தைச் சுற்றினால் மகப்பேறு கிட்டுமா?

தாம்பத்திய உறவில் பிறக்காத குழந்தை அரச மரத்தைச் சுற்றினால் அடி வயிறு கனக்குமா? என்கிற வதாப் பிரதி வாதங்களும் இருந்த காலம் ஒன்று இருந்தது இப்போதும் இருக்கிறது. ஆனால் குறைவு. எனவே இதில் நம்பிக்கை தளர்ந்தவர்கள் சிலர். நம்பிக்கை வைத்திருப்பவர்கள் பலர். தம்பதிகளுக்கு புத்திரதோஷம் பல வகையில் ஏற்படுகிறது. மூதாதைகள் சாபத்தால் சிலருக்கும் பலருக்கு நாக தோஷத்தாலும், வேறு சிலருக்கு சத்துரு சாபத்தாலும் இன்னுஞ் சிலருக்கு முன் ஜென்ம வினைப்படியும் இத் தோஷம் ஏற்படுகின்றது.

மருத்துவ முறையில் பார்க்கும் போது ஆண், பெண் இருவருக்கும் கரு உற்பத்திக் குரிய ஹார்மோன் இருந்தால்தான் குழந்தை பிறக்குமென்று சொல்லப்படுகிறது. இந்த ஹார்மோன் ஆணுக்கிருந்து பெண்ணுக்கில்லையென்றாலும், பெண்ணுக்கிருந்து ஆணுக்கில்லை யென்றாலும் குழந்தை பிறப்பதில்லை. குழந்தை பிறக்க ஒரு பெண்ணுக்கு இருக்க வேண்டிய ஹார்மோன் நான்கு வகை என்று மருத்துவ விதி கூறுகிறது. அவை;

[1] ஒஸ்ற்றோஜின், [2] புறகெஸ்ரோன், [3] F. S. H, 4. L. H இவை சாதாரணமாக ஒரு பெண்ணுக்குருவானதுடன் எப்போதும் தன்னுடலில் சுரந்து வரும். மாதவிலக்கு நிற்கும் வயது வந்தவுடன் குறைந்து வந்து இல்லாமலே போகும். இது போலவே ஆணுக்கும் வேறு வித ஹார்மோன் சுரக்கும். ஆனால் பெண்களுக்குச் சொல்ப்பட்ட ஹார்மோன் அதிகமாக இருந்து ஆணுக்குரிய ஹார்மோன் குறைந்திருந்தால் குழந்தை பிறக்கவே பிறக்காது.

நான்கு விதமான ஹார்மோன் என்னும் குழந்தை உற்பத்திக்குரிய தாது பெண்ணிடம் இல்லையானால்குழந்தை பிறக்காது. இவை அரச மரத்தை வலம் வருவதால் சுரக்கும் என்ற விஞ்ஞான உண்மை வியப்பைத்தருகிறது. எப்படி? அரச மரமானது பூவாது காய்க்கும் மரமாகும். அரசும் பூவாது காய்க்கும்

**- வி. ஏ. சிவராசா -**

தன்மை கொண்டதால் குழந்தை உற்பத்திக்குத் தேவையான ஹார்மோன் சக்தி இல்லாத பெண்களும் அரசை வலம் வந்தால் கரு உற்பத்திக்குரிய ஹார்மோன் உடலில் இல்லையெனினும் அது உண்டாகிக் குழந்தை பிறகும் என்பது சோதிட உண்மை.

பிரம்மச்சாரியம் பூரணமாக அனுஷ்டித்த சத்துருவினால் ஏற்படும் சாபத்தால் குழந்தை பிறச்காத தம்பதிகளுக்கு மட்டும் அரச மரப் பிரதட்சணம் சொல்லப்பட்டிருக்கிறது. பரிபூரணமாக வேத விதிகளைக் கையாண்ட பிரமச்சாரியானவன் தான் அரச மரமாகப் பிறப்பான் என்று சொல்லப்படுவதால் அரசைவலம் வருவது அவனை வலம் வருவதாகும். இந்தச் சாபம் எந்த ஜென்மத்திலோ ஏற்பட்டதாகக் கூட இருக்கலாம். அதனால் இப்போது குழந்தை பிறக்காமல் போகலாம் என்பதற்கு ஒரு காரணமாகக் கூறுகிறது. சோதிடம் புராணக் கதைகளின் படியும் அரச மரத்தின் அடிப்பாகத்தில் பிரமனும், நடுப்பாகத்தில் விஷ்ணுவும், முனைப் பாகத்தில் சிவனும் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது படைத்து, காத்து, இரட்சிக்கும் இம் மூவரும் அரச மரத்தில் இருப்பதால் தெய்வ சாபமானாலுந்திரும் என்ற நம்பிக்கைக்கு விஞ்ஞான ஆதாரங்கள் கை கொடுக்கின்றன.

மின்சாரம் அதிவேகமாகப் பாயும் உலோகம், செம்பு. இதில் தாமிர சக்தியுண்டு, வயிற்றிலுள்ள பல தேவையற்ற ஆனல். கரு உற்பத்தியை நாசஞ்செய்யும் கிருமிகளை அழிக்கும் சக்தி இந்த செம்புக்கு உண்டு இந்த சக்தி அரச இலைகளின் நுனியிலிருந்து ஒழுகும். எப்போதுமல்ல. வசந்த ருது என்று சொல்லும் சித்திரை, வைகாசி மாதங்களில் இம்மரத்தின் பழைய இலைகள் உதிர்ந்து புதிய இலைகள் துளிர்விடும். இவ்விதம் ஒழுகும். தாமிர சக்தி ஈதரில் கலந்து விடும்.

ஈரமான வஸ்துக்களில் உடனே பாயும் காந்த சக்தி இதற்கு உண்டானதால் கர்ப்பக் கோளாறு உள்ள பெண்கள் சித்திரை, வைகாசி மாதங்களில் மட்டும் காலையில் எழுந்தவுடன் ஸ்நானஞ் செய்து ஈரத்துணியுடன் அரச மரத்தை வலம் வந்தால் ஈதருடன் கலந்து வியாபிக்கும் தாமிரம், பெண் கட்டியிருக்கும் ஈரத்துணியில் பாய்ந்து உடலெங்கும் பரவுகிறதாம்.

காலைக்கதிரவனின் வெப்பம் இதை வயிற்றினுள் கொண்டு சென்று கர்ப்பம் தரிக்க ஒட்டாமல் செய்யும் கிருமிகளை அழித்து அந்தப் பெண்ணுக்

(10-ம் பக்கம் பார்க்க)

# நாடோடிக் கதைகள்

✶ தமிழில்: நீர்வை பொன்னையன்

## கோழைகள்

எனது நாட்டிற்குச் செய்ய வேண்டிய சிறந்த சேவைகள் அனைத்தையும் நான் செய்துள்ளேன்'' என்று தற்பெருமையுடன் ஒரு இளவரசன் மென்சியஸ் என்ற தத்துவ ஞானிக்குக் கூறினன்.

''நதியின் மேற்குப் புறத்திலுள்ள இடங்களில் பயிர்கள் அழிந்த பொழுது அங்குள்ள மக்களைக் கிழக்குப்புறத்திற்கு அனுப்புவேன் அல்லது மேற்கிலுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்குக் கிழக்குப்புறத்திலிருந்து தானியங்களைக் கொண்டு வருவேன். கிழக்குப்புறத்தில் பயிர்கள் சேதமடைந்த பொழுது மேற்குப்புறத்திலுள்ள மக்களுக்குச் செய்த அதே சேவையைச் செய்தேன்''.

''அப்படியா?'' — மென்சியஸ் கேட்டார்.

''ஆனல், ஏனைய நாடுகளிலுள்ள ஆட்சியாளர்களை நான் நோக்கும்போது, நான் செய்த சேவைகளைப் போலத் தனது மக்களுக்கு அவர்களில் ஒருவன் தானும் அப்படிச் செய்யவில்லை. அப்படியிருந்தும் அவர்களுடைய நாடுகளின் ஜனத்தொகை குறையவில்லை; அதேவேளை எனது நாட்டின் ஜனத்தொகையும் அதிகரிக்கவில்லை. ஏன் என்று உங்களால் கூறமுடியுமா?''

இளவரசன் மென்சியஸ்சை விசனத்துடன் கேட்டான்.

''மாட்சிமை தங்கிய நீங்கள் போரை நேசிப்பதால் தான் உங்கள் நாட்டின் ஜனத்தொகை அதிகரிக்கவில்லை. நான் அதற்கு ஒரு உதாரணத்தைக் கூறுகின்றேன்.''

ஆவலுடன் மென்சியஸ்சை நோக்கினன் இளவரசன்.

''போர்முரசுகள் முழங்கத்தொடங்கியவுடனே படை வீரர்கள் எதிரியுடன் மோதத் தொடங்குகின்றார்கள். உமது போர் வீரர்கள் தோல்வியுற்ற பொழுது தமது போர்க் கவசங்களைக் கைவிட்டு விட்டு, ஆயுதங்களையும் வீசி எறிந்து விட்டு, தம்மைக் காப்பாற்றிக்கொள்வதற்குப் பின்வாங்கித் தலை தெறிக்க ஓடுகின்றார்கள். இந்தக் கூலிப்படைவீரர்களில் உதாரணத்திற்கு ஒருவன் நூறுயார்கள் பின்வாங்கி ஓடுகின்றன்; மற்றொரு படைவீரன் ஐம்பது யார்கள் பின்வாங்கி ஓடுகின்றன். ஐம்பது யார்களை மாத்திரம் பின்வாங்கி ஓடியவன் நூறுயார்கள் ஓடியவனைப் பார்த்துக் கேலி செய்து சிரிப்பதற்கு உரிமையுண்டா?''

''நிச்சயமாக இல்லை'' — இளவரசன் கூறினன். ''அவன் நூறுயார் தூரம் ஓடவில்லைத்தான். ஆனல் அவனும் அதே வழியில் பின்வாங்கி ஓடியவன் தானே''.

''மாட்சிமை தங்கிய தாங்கள் இதைப்புரிந்து கொள்வீர்களானல். எந்தவொரு அயல் நாட்டிலும் பார்க்க உங்களது நாட்டின் ஜனத்தொகை அதிகரிப்பை நீங்கள் எதிர் பார்க்க முடியாது'' என்று மென்சியஸ் கூறினர்.

யுத்த வெறிகொண்டவனுக்கு இது எப்படிப் புரியும்?

அவனல் கோழைகளை எப்படி இனம்காண முடியும்?

## இடிந்த சுவர்

ஒரு செல்வந்தன். ஒரு பெருமழையின் பின் அவனது வீட்டுச் சுவர் இடிந்து விழத் தொடங்கியது.

''இந்தச் சுவரைப் பழுது பார்த்து அடைக்காவிட்டால் திருடர்கள் வீட்டிற்குள் புகுந்து பொருள்களைத் திருடுவார்கள்'' — செல்வந்தனின் மகன் தந்தையை எச்சரித்தான்.

அதே புத்திமதியை அயலிலுள்ள ஒரு முதியவனும் அவனுக்குக் கூறினன்.

அன்று இரவு உண்மையில் அந்தச் செல்வந்தனின் பெருந்தொகைப் பணம் திருட்டுப்போயிற்று

செல்வந்தன் அவனது விவேகபுத்திக்காகத் தனது மகனை மெச்சிப்பாராட்டினன்.

அதேவேளை அயலிலுள்ள அந்த முதியவனைத் திருடன் என்று சந்தேகித்தான்.

## கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு

கவசங்களையும் ஈட்டிகளையும் விற்றுவந்தான் ஒருவன்.

''எனது கவசங்கள் உறுதியானவை, அவற்றை எந்தக் கூரான ஈட்டியாலும் துளைக்கமுடியாது''

''அதுமாத்திரமல்ல எனது ஈட்டிகள் மிகக் கூர்மையானவை. அவை துளைக்க முடியாத கவசம் எதுவுமில்லை.''

அவன் புளுகித்திரிந்தான்.

அவனுடைய கவசங்களும் ஈட்டிகளும் அதிக கிராக்கியுடன் விலைப்பட்டுக்கொண்டிருந்தன.

''உனது கவசங்களில் ஒன்றின்மீது உனது ஈட்டிகளில் ஒன்று அடித்தால் என்ன நடக்கும்?''

-யாரோ ஒருவன் அந்தப் புளுகனைக் கேட்டான்

அதற்கு அந்த அண்டப் புளுகனல் எப்படிப் பதில் கூறமுடியும்?

அவனது குட்டு அம்பலமானது.

# பனையும் பண்டைத்தமிழ் இலக்கியமும் -4

பதிற்றுப் பத்து விறலியர் வருகின்ற விருந்தினருக்குக் கள்ளும் சோறும் அளித்து உபசரிப்பதைக் காட்டுகின்றது. சேரலாதனது கொடைச்சிறப்புப் பாடும் புலவர் உணவு நிலையிலே கள் முக்கியத்துவம் பெற்றதைக் குறிப்பிடுகின்றர்.

'உண்மின் கள்ளே யடுமின் சோறே
எறிக திற்றி யேற்றுமின் புழுக்கே
வருநர்க்கு வரையாது பொலங்கலந் தெளிர்ப்ப
இருள்வண ரொலிவரும் புரியவிழைம்பால்
ஏந்து கோட்டல் குன் முகிழ்நகை மடவரல்
கூந்தல் விறலியர் வழங்குக வடுப்பே''
[பதிற்றுப்பத்து : 8]

சோறு, ஊன, புழுக்கல் என்பவற்றுடன் கள்ளும் முக்கியமாக இடம் பெறுகின்றது. உண்டாட்டின் போது தமிழர் கள் அருந்தினர். அரசனை நாடிச்செல்வோரை விறலியர் உபசரிப்பர் அப்போது பருகுவதற்குக் கள்ளையும் வழங்குவர்.

பருகும் கள்ளுக்கு விலையாக வரகும் கொள்ளும் கொடுத்த செய்தியும் பதிற்றுப்பத்திலுண்டு கள்ளை அளவுக்கதிகமாகப் பருகினல் ஒருவகையான மயக்கம் ஏற்படும். அதனல் கள் அருந்தல் காலகதியில் தவிர்க்கப்பட வேண்டிய ஒன்றாகவும் கருதப்பட்டது பனையின் பயன்கள் இயற்கை நிலையிலேயே ஒருகுறிப்பிட்ட காலப்பகுதியிலே கிடைப்பனவாய் இருந்தமையால் அவற்றால் ஏற்படும் தீமைகளும் குறைவாகவேயுள்ளன. உணவு நிலையிலே பனையின் பயன்பாடுகள் பெருவளங்களாக இருந்ததைப் பழந்தமிழர் அறிந்திருந்தனர். பனைமரம் இன்றுவரையும் அந்நிலையில் மாற்றமில்லாமலே மதிக்கப்படுகின்றது.

பனைமரத்தின் ஓலை உண்கலமாகப் பயன்பட்ட நிலையைக் கபிலர் தமது பாடலிலே குறிப்பிட்டுள்ளார். நற்றிணை 243-ம் பாடலில்'' பல்குடைக் கள்ளின்'' என்னும் தொடர் இதனை நன்கு விளக்குகின்றது. கள்ளினை பனங்குடையிலே இட்டு உண்ணும் வழக்கம் இருந்துள்ளது இவ்வழக்கம் யாழ்ப்பாணத்திலே இன்றும் நடைமுறையில் இருப்பதைக் காணலாம் 'பிழா' என அது வழங்கப்படுகின்றது. கள் மட்டும் அன்றி உணவுப் பண்டங்களை உண்பதற்கும் பனங்குடை பயன்படுத்தப்பட்டதைப் புறநானூற்றுப் பாடலொன்று விளக்குகின்றது.

''கண்மாறு நீட்ட நணிநணி யிருந்த
குறும்பல் குறும்பிற் றதும்ப வைகிப்
புளிச்சுவை வேட்ட செங்கணுடை வர்
தீம்புளிக் களாவொடு துடரி முனையின்
மட்டற னல்யாற் றெக்க ரேறிக்
கருங்கனி நாவலிருந்து கொய்துண்ணும்
பெரும்பெய ராதி பிணங்கரிற் குடநாட்
டெயினர் தந்த வெய்ம்மா னெறிதசைப்
பைஞ்ஞணம் பெருத்த பசு வெள்ளமலை
வருநர்க்கு வரையாது தருவனர் சொரிய
இரும்பனங் குடையின் மிசையும்''
[புறம்: 177]

கள் உண்பவர்கள் அதை உண்ணும்போது ஒருவர்க்கொருவர் மாறி நீட்டுகின்றனர். கள்ளைநிரம்பஉண்டதால் விடாய் மிக்கு அவர்கள் புளிச்சுவையை விரும்புகின்றனர். கண்கள் சிவந்த அந்த ஆண்மக்கள், இனிய புளிப்பையுடைய களாப்பழத்துடனே துடரிப்பழத்தையுண்கின்றனர். அப்போது சுவை தீரவில்லை. பின்னர் மணற்குன்றுகளிலே ஏறி கரிய நாவற்பழத்தைப் பறித்து உண்கின்றனர். ஒருவாறு வாய்ப்புளிப்புத் தீர்கிறது. அதன்பின்னர் பன்றி இறைச்சியோடு நிணமிக்க புதிய வெண்சோற்றுக் கட்டியை வருவோர்க்கெல்லாம் கொடுத்து உண்கின்றனர். சோற்றைப் பனங்குடையிலே வைத்தே உண்கின்றனர். தமிழர் உண்டாட்டின் கோலத்தை ஆலூர் மூலங்கிழார் அழகாகவே வர்ணித்துள்ளார். பனங்குடையிலே வைத்தே சோறுண்ணும் வழக்கம் யாழ்ப்பாணத்திலும் உண்டு. சிறியபனையோலையிலே பண்ணிய உண்கலங்கள் தூய்மையானவையாய் இருந்தன. அதனைத் 'தட்டுவம்' என்றும் சிலர் குறிப்பிடுவர். உண்கலமும் உணவும் தந்துதவும் பனையைக் கற்பகதருவென்று அழைப்பதும் மிகப்பொருத்தமேயாகும்.

பனையின் இன்னெரு பகுதியாகிய பன்னுடையின் சிறந்த உபயோகம் பற்றிப் புறநானூற்றின் 170 ஆம் செய்யுள் கூறுகின்றது. பனையிடத்துப் பெறுங் கள்ளினைச் சங்ககாலத்து மக்கள் பலர் விரும்பியுண்டனர். கள்ளிலே உள்ள தூசு, வீழ்ந்திறந்த வண்டு முதலாயினவற்றை அகற்றுதற்காக அதைவடித்தெடுக்க வேண்டியதாயிற்று. வடித்தெடுத்த தெளிந்த கள்ளினைப் பிட்டங்கொற்றன் என்னும் மன்னன் அருந்தினன் எனப் புறநானூற்றுப் பாடல் கூறுகின்றது தெளிந்த கள்ளினைப் பெறுவதற்குப் பன்னுடை பெரிது உதவி ''நார்பிழிக் கொண்ட வெங் கட்டேறல்'' எனப்பாடல் கூறுகின்றது. இதே செய்தியினைப் புறநானூறு 232 ஆம் பாடலும் ''நாரரி சிறுகலத்து குப்பவும்'' என்று கூறுகின்றது. '(நாரால் பன்னுடையால்) அரிக்கப்பட்ட தேறலைச் சிறு கலத்தானுகுப்பவும்'' என்று அப்பாடலடிக்குப் பொருள் கூறப்படுகின்றது.

### அழகுணர்வு நிலையில்

சேரநாட்டு மன்னனுக்குரிய அடையாளப் பூ பனம்பூவாகும். போர்க்காலங்களிலே மன்னனும் சேரநாட்டு வீரரும் பனம்பூவினை அணிந்து செல்வார்கள். அடையாள இலச்சினையாக அன்றி, அலங்காரப் பொருளாகவும் பனம்பூ உபயோகப்பட்ட செய்தியினைப் புறநானூறு 265 ஆம் செய்யுள் கூறுகின்றது.

ஊர்நனி யிறந்த பார்முதிர் பறந்தலை
ஓங்குநிலை வேங்கை ஒள்ளிணர் நறுவீப்
போந்தையந் தோட்டிற் புனைந்தனர்.

ஊர்களுக்கு அப்பாலே வறண்ட நிலமுடைய பரந்தலை என்னுமிடத்திலே போரிலே வீழ்ந்த வீரமன்னனுக்கு நடுகல அமைக்கப்படுகின்றது.

அவ்வேளையில், பல ஆநிரைகளையுடைய கோவலர் அவ்வீரக் கல்லுக்கு மலர் மாலை அணிவிக்கின்றனர். அம்மாலை உயர்ந்த நிலையை உடைய வேங்கை மரத்தினது ஒள்ளிய கொத்தாகிய மணம் வீசும பூவினைப் பனையோலையால் அலங்கரித்து அமைக்கப்படுகின்றது. பனங்குருத்துடன் குவளை, கொன்றை, தும்பை, வாகை, வெட்சி ஆகிய பூக்களைத் தொடுத்து அலங்காரமான மாலைகள் புனைந்தமைபற்றிப் பதிற்றுப் பத்து, புறநானூறு ஆகிய சங்க இலக்கியங்கள் கூறுகின்றன,

### மக்கள் மொழிநிலையில்

தமிழ்மொழி இலக்கணகாரர் பனை பற்றிய சொற்களுக்கு இலக்கண அமைப்பைக் கண்டுள்ளனர். பழந்தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திலே பனை பற்றிய சூத்திரங்கள் உள்ளன.

''பனையும் அரையும் ஆவிரைக் கிளவியும்
நினையுங் காலை அம்மொடு சிவணும்
ஐயென் இறுதி யரைவரைந்து கெடுமே
மெய் அவண் ஒழிய என்மனர் புலவர்.''
[தொல் I : 284]

''பனை முன்னர் அட்டுவரு காலை
நிலையின் ருகம் ஐயென் உயிரே
ஆகாரம் வருதல் ஆவயினை''
தொல் I : 285

''கொடிமுன்வரினே ஐயவண்நிறபக்
கடிநிலையின்றே வல்லெழுத்து மிகுதி''.
[தொல் I : 286]

மேற்காட்டிய சூத்திரங்கள் பனைக்கென்றே சிறப்பாயமைந்த சூத்திரங்கள் என்றால் மிகையாகாது மக்கள் வாழ்க்கையிலே நெருங்கியதொடர்பு கொண்டபனை மொழிவழக்கு நிலையிலும் சிறப்பிடம்பெற்றதால் பிற்காலத்திலே பனை பற்றிய பல மொழிகளும் தோன்றியுள்ளன. அவை பனையின் தோற்றம், வளர்ச்சி, பயன்பாடு என்பவற்றின் அடிப்படையாகத் தோன்றியுள்ளன. பனை மனிதனுக்கு உணவும், உறையுளும் தந்துதவுவது. அதனல் அவன் மொழியிலும் உலாவுவது. முற்றத்தில் நிற்கும் ஒற்றைப் பனையே துணையாக வாழ்ந்தவரும் உளர் மன்னரும், புலவரும் மக்களும் மதித்துப் போற்றும் பனையினைப் பற்றி பல ஆய்வுகள் செய்யவேண்டியுள்ளன. அந்த ஆய்வுக்குப் பனை பற்றிய சொற்களும், சொற்றொடர்களும், பழமொழிகளும், பாடல்களும், விடுகதைகளுமே தரவுகளாக சிதறிக் கிடக்கின்றன. அவற்றை ஒருங்குசேர்த்துத் தொகுத்து ஆராய்ந்து பனையின் சிறப்பைப் பிறரும் அறியவைக்க வேண்டும். மரங்களிலே மனித வாழ்விலே மிக நெருங்கிய தொடர்புகொண்டதுபனையே. அதன புகழ் பாமரெங்கு பரவ

(12-ம் பக்கம் பார்க்க)

## அலங்காரப் பொருளாகவும் அடையாளச் சின்னமாகவும் மன்னர் பாவனையில் பனம்பூ

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
மனோன்மணி சண்முகதாஸ்

## தட்சரின் உத்தியோகபூர்வ இல்லம்

ஒரு காலத்தில் பணியாட்களுக்கென ஒதுக்கப்பட்ட இடம் தான் பிரிட்டிஷ் பிரதமர் மார்கிரெட் தட்சர் வசிக்கும் இல்லமாகும். இக்கட்டிடம் 250 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது. இங்கு 1735 ஆண்டிலிருந்து 40 பிரதமர்கள் குடியிருந்துள்ளார்கள். முக்கிய முடிவுகள் பல இங்கு எடுக்கப்படுகின்றன.

— ஸச்சி

# குறுநாவல்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

யோடு உள்வாங்கிக் கொண்டனர்.

''கொழும்பிலை கலவரமாம்'' நடுக்கத்துடன் சொன்ன காந்தியின் கரத்தை அழுத்தினாள் நீரஜா. சமய சந்தர்ப்பம் தெரியாமல் ஜானகியைக் குழப்பத்தில் ஆழ்த்துவதை அவள் விரும்பவில்லை. ஆனால், நிலைமை தவிர்க்க முடியாதது, மெல்ல விஷயத்தை விளக்கினாள் நீரஜா.

ஐம்பத்தெட்டும், எழுபத்தேழும் பழங்கதைகளல்ல. மீண்டும் ஒரு இனக்கலவரம் நாடெங்கிலும் புகையத் தொடங்கி விட்டது. பல்லாயிரம் அனுமார்களின் வாலில் இலங்கையரசன் கொளுத்திவிட்ட நெருப்பு லங்கா தகனத்தை 'ஒழுங்காக' நடத்தியது. மீண்டும் இலங்கை மக்கள் பலர் இலங்கையிலேயே அகதிகளாகி...

மெல்ல மெல்ல ஏற்கனவே புகைந்து கொண்டிருந்த பிரச்னைகள் இவர்களுக்கு முதலே தெரிந்திருந்ததுதான். ஆனால், இப்படி மீண்டும் ஒரு எழுபத்தேழாக இது உருமாறும் என இவர்கள் நினைத்திருக்கவில்லை இப்போது. வெளியே போய் வந்த மூன்று தோழிகளும் நிறையக் 'கதை' களைக் கொண்டுவந்திருந்தனர், 'கதை'களா அவைகள்?

அங்கே அப்படி நடந்ததாம் இங்கே இப்படி நடந்ததாம். எத்தனைபேர் கொல்லப்பட்டனர், எத்தனை வாகனங்கள் எரிக்கப்பட்டன, எத்தனை கட்டடங்கள் நொறுக்கப்பட்டன, எத்தனை பெண்கள் கற்பழிக்கப்பட்டார்கள் என்று.. நீண்டு கொண்டு போன செய்திகள்...

தான் தனக்குள்ளே மூழ்கி தனது துயரங்களையே நினைத்து இங்கே அடைந்து கிடந்த வேளையில் வெளியில் எத்தனை சம்பவங்கள் நடந்து விட்டன. ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொருவர் சொன்னவைகள் என விதவிதமான வேதனைச் சம்பவங்களை நீரஜா சொன்னாள்

தமிழனுக்கென்று நடந்த அநியாயத்தைப்பற்றி பேசிய கையோடு ஒவ்வொருவரும் தனக்குத் தனக்கென்று நேரக் கூடிய கஷ்டங்கள், தங்கள் உறவினர்களைப் பற்றிய கவலைகள் பற்றியும் பேசிக் கொண்டனர்.

காந்தி தன் சிறிய தகப்பனார் கொழும்பிலும் மாமா குடும்பத்தினர் பண்டாரவளையிலும் என்ன கஷ்டப்படுகிறார்களோ என்று கவலைப்பட்டாள். நீரஜா தனது காதலனை நினைத்துக்கொண்டாள். ''ஜெகனுடைய தமயனும் பெண்சாதியும் வெள்ளவத்தையிலைதான் இருக்கிறவை..'' என்று அவள் இழுத்தபோது, சுதா,

''இந்தமுறை வெள்ளவத்தையும் சரியான மோசமென்டெல்லே கதைக்கினம்'' என்றாள் தொடர்ந்து,

''எங்கடை அண்ணியின்ரை தேப்பன் எஸ்ரேற் பக்கத்திலை தான் எங்கையோ...... ஆள் சரியான சுகமில்லாதாள். நல்ல காசு பணத்தோடை இருக்கிறார். படுபாவியள் என்ன பண்ணினாங்களோ'' என்றும் வேதனைப்பட்டாள்.

மௌனமாக இருந்த ஜானகி ''கொட்டாஞ்சேனைப் பக்கம் என்ன மாதிரியெண்டு தெரியாது என்ன?'' என்று கரகரத்த குரலில் கேட்டாள். அவள் விழிகள் கலங்கத் தொடங்கினயிருந்தன. அப்போதுதான் திடீரென முரளி பற்றி நினைத்துக் கொண்ட மூவரும் அவளை அனுதாபத்துடன் பார்த்தனர்.

அப்போது முகுந்தன் பரபரப்போடு அங்குவந்தான் பரபரப்போடும் களைப்போடும் வந்த அவன் ''கலவரம்பற்றிக் கேள்விப் பட்டனியளே?'' என்று பொதுவாகக் கேட்டான். அவனை ஒரு தடவை நிமிர்ந்து பார்த்துவிட்டு மௌனமாகத் தலை குனிந்தாள் ஜானகி. நீரஜாதான் அவனுக்கு விடை சொன்னாள்.

''இப்ப அதைப் பற்றித்தான் கதைச்சுக் கொண்டிருந்தநாங்கள். ...''

''ஜானகி முரளியின்ரை அட்ரஸ், ரெலிபோன் நம்பர் ஏதேன் இருக்கே?'' என்று நேரடியாக விஷயதுக்கு வந்தான் முகுந்தன்.

எழுந்து மேசையருகில் சென்ற ஜானகி கொப்பியொன்றிலிருந்து முரளின்ரை விலாசம் முகவியவற்றை எழுதிக் கொண்டுவந்து கொடுத்தாள். கலங்கியிருந்த அவளது கண்களைப்பார்க்க அவனுக்கு வேதனையாக இருந்தது

எந்த அளவுக்கு அவள் தன்னைக் காதலித்திருந்தாலும் கணவன் என்று சட்டப்படி வந்து விட்ட முரளிக்காக அவள் துடிப்பதை அவனால் உணர முடிந்தது. இதைத் தேயப் பண்பாட்டிற்கே உரிய அந்தப் பெருமையை வியந்து கொண்டு சிறிது நேர உரையாடலின் பின் அங்கிருந்து புறப்பட்டான்.

(வளரும்)

# அலங்காரப் பொருளாகவும்

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

நாம் வழிசெய்தல்வேண்டும்.

பழந் தமிழர்களது மொழி நிலையிலே பனை பற்றிய சொற்களும், சொற்றொடர்களும் உருவாகியுள்ளன. சங்கப் பாடல்களிலே பனை பற்றி வருகின்ற சொற்கள் இன்றும் தமிழிலே வழங்கப்பட்டுவருகின்றன. அவற்றுட் சிலவற்றைப் பின்வருமாறு தொகுக்கலாம்:

| பழந்தமிழ் வடிவம் | இன்றைய தமிழ் வடிவம் |
|---|---|
| 1. இரும்பனை | கரும்பனை |
| 2. மன்றப்பனை | தலைப்பனை |
| 3. நெடும்பனை | நெட்டைப்பனை, நெடும்பனை |
| 4. நுங்கு | நுங்கு |
| 5. பனைமடல் | பனைமடல் |
| 6. முடப்பனை | முடப்பனை, சொத்திப் பனை |
| 7. பனம்பாளை | பனம்பாளை |
| 8. பனங்குடை | பனம் பிழா |
| 9. பனந்தோடு | பனங்குருந்து, பனங்குருத்து |
| 10. பனை இளநீர் | பதநீர் |
| 11. பனஞ்சோறு | பனஞ்சோத்தி |
| 12. இனைத்தடி | பனங்கொட்டு |
| 13. பதக்கை | சீக்காய் |
| 14. பனங்கருக்கு | பனங்கருங்கு, பனங்கருக்கு |
| 15. பனங்குலை | பனங்குலை |
| 16. பனஞ்செறும்பு | பனஞ்சிரும்பு |
| 17. பனங்குரும்பை | பனங்குரும்பை |
| 18. பனம்பழம் | பனம்பழம், பனங்காய் |
| 19. பனங்கிழங்கு | பனங்கிழங்கு |
| 20. பனம்பிசிறு | பனம்பிசான் |
| 21. பனங்கள் | பனங்கள்ளு |

பண்டைத் தமிழர் வாழ்வுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட பனை தற்போது குண்டடிபட்டும் யாழ்ப்பாணத் தமிழ்மக்களுக்குப் பயனளிப்பதைக் காண்கிறோம். இக் கற்பகதருவினைப் பெருமளவிலே வளர்த்திட மில்க்வைற் நிறுவன அதிபர் சிவதரும வள்ளல் திரு. க. கனகராசாவும், பனம்பொருளபிவிருத்திச்சபையும் மேற்கொள்ளும் முயற்சியினை நாம் பாராட்டுவதுடன் அம் முயற்சிக்கு ஊக்கமும் அளிக்கவேண்டும். [முற்றும்]

# பண்டைய போர் முறையும் படையெடுப்பும்

இக்காலத்தில் நடைபெறும் போர் முறை விஞ்ஞான பூர்வமானது. உலக மகா யுத்த காலத்தில் அணுகுண்டால் நாசமடைந்த ஜப்பான் நாடு பற்றிப் படிக்கும்போது மெய் சிலிர்க்கிறது. எமதுமக்களுக்கு இன்றைய ஆயுதப்படையினர் செய்யும் உயிர்ப்பறிப்பு; வீடுகள் தகர்ப்பு, சிறுவர் சிறுமியர், குடுகுடுகிழவர், கன்னிப் பெண்கள், திருமணம் செய்து குடியும் குடித்தனமுமாகஇருப்போர், ஆடு, மாடுகள் படுகொலை செய்யப்ப வதையும், ஆகாயத்திலிருந்து குண்டுமாரி பொழிவதையும் நேரில் கண்டோம். அனுபவித்தோம். குடிமக்களைச் குலை நடுங்க வைத்து நிலைகுலையச் செய்து கூண்டோடு லாசம் அனுப்பும் அநியாயத்தை உலகநாடுகளே கண்டித்து வருகின்றன.

இன்றைய இன்னல்நிறைந்த வாழ்வில், நெருநல் உளனொருவன் இன்றில்லை என்ற வள்ளுவன் வாய்மொழி மெய்யாகி வரும் வாழ்வில் அக்காலப் போர்முறை, படைஎடுப்பு எப்படி இருந்தன என்பதை அறிவது மிசப்பொருத்தமாகும்.

அக்காலப் போர் ஆசையை அடிப்படையாகக் கொண்டதாக இருந்தது. அப்படியிருந்தும் ஓர் அரசன் படை மற்றொருஅரசன் படையை துவம்சம் செய்து வீர வரலாறு படைக்குமேயன்றி, குடிமக்களை அழித்தொழித்து நாட்டைச் சுடுகாடாக்குகின்ற கொடுமை நிகழ்ந்ததில்லை. வீடுகளைத் தகர்த்துநிர்மூலமாக்கியதில்லை. பகைவர் நாட்டின் மீது படை எடுக்கும் மன்னர் போருக்கு எதிர்கொள்ள முடியாதவர்களை ஒதுக்கி விடுவார்கள். போர்க் களத்தில் பச்சிளம் பாலகர்களை எக்காரணம் கொண்டும் கொல்ல மாட்டார்கள். வயோதிபர் மீதும் படைக்கலங்களைச் செலுத்த மாட்டார்கள். பசுக்களை, பெண்களை. அந்தணர்களை அழிக்க முற்படமாட்டார்கள். அவர்களின் ஒரே நோக்கம் பகைவரைப் பூண்டோடு ஒழிப்பதாகவே இருக்கும்.

மதுரை மாநகரில் கணவனை இழந்த கற்புக்கரசி கண்ணகி அந்நகரைப் பழிவாங்க முற்பட்டாள். அப்போது அவ்வீர பத்தினியின்முன் அக்கினி தேவன் தோன்றி, யார்யாரை அழிக்க வேண்டும். என்று வினு எழுப்பினன். ''பார்ப்பார், அறவோர், பசு, பத்தினிப் பெண்டிர், மூத்தோர், குழவி எனும் இத்திறத்தோரைக் கைவிட்டு தீத்திறத்தார் பக்கமே சேர்க' என்று ஏவினுள்

நேருக்கு நேர் சந்தித்துப் போர் செய்யும் பண்பாளர் பண்டைய அரசர்கள். வில், வாள், வேல் ஏந்தி வெம்போர் புரிவார்கள். போர்க்களத்தில் முகத்திலும், மார்பிலும் படுகின்ற வடுக்களைப் பொன்னினும், மணியினும் பெருமையாகப் போற்றுவார்கள். போரில்லாத நாள் எல்லாம் பயனற்ற நாளாகக் கருதுவார்கள், இத்தகைய வீரர்கள் கொற்றவை என்னும் தெய்வத்தை வணங்கினார்கள், வெற்றி தரும் தெய்வமே கொற்றவையாகும். இத்தெய்வ அருள் பெற்று மறப்போர் புரிந்தார்கள்.

போர் செய்யப் புறப்படும்போது நல்லநாள் நட்சத்திரம் பார்ப்பது வழக்கம். அது பற்றிய அறிவு நிறைந்தோர் அரசவையில் காணப்படுவர். சோழநாட்டை ஆண்ட கரிகால் வளவன் வடநாட்டின் மீது படைபெருக்கு முன்னமே நல்லநாளும் பொழுதும் பார்த்து வாளும் குடையும் வடதிசையில் பெயர்த்து வைத்தான் என்று சிலப்பதிகாரம் உரைக்கின்றது.

போருக்கு புறப்படும்போது மன்னர் மாலைகளே அணிந்து செல்வர். மாலைகள் மூலம் எத்தேசத்து அரசர் என்பதைத் தெரிந்துகொள்வர். சேரனுக்கு பனந்தோட்டு மாலையும், பாண்டியனுக்கு வேப்பம் பூ மாலையும், சோழமன்னனுக்குஆத்தி மாலையும் அடையாள மாலைகளாக அமைந்தன.

பகைவர் நாட்டின்மீதுபோர் தொடுக்கக் கருதும்அரசன் அதற்கு அறிகுறியாக அந்நாட்டிலுள்ள பசுக்களைக் கவர்ந்து தன் நாட்டிற்குக் கொண்டு வருவான். அதற்கு 'ஆநிரை கவர்தல்' என்று பெயர். அப் பசுக்களுக்கு உரிய அரசன் அவற்றை மீட்பதற்கு படையெடுத்து வரும்போது இருபக்கத்தாருக்கும் போர் நிகழும். போர் நடக்கும் போது அந்த இடத்திலிருந்து தப்பி ஓடக்கூடியவர்கள் ஓடிவிடுவார்கள். இவ்வாறுஉயிரைக் காப்பாற்றி உறைவிடம் தேடி ஓடும்போது பசுக்களை எவர் பாதுகாப்பர். பசுக்கள் போர்க்களத்தில் சிக்கி மாண்டு விடுமே என்பதற்காக மாற்றரசர் தம்நாட்டில் வைத்திருப்பரென்பதே உண்மை நிலையாகும்.

பண்டைக் காலத்தில் போர் செய்வோர் படை எப்படித் திரட்டப்பட்டதென்பதைக் காண்போம். அரசன் போர் செய்யக்கருதியவுடன் அவனது போர்ப் பறை முழங்கும். அவ்வோசை கேட்டு வீரர்கள் போக்களம் விரைவார்கள். வீரத்தாய்மார் தம் பிள்ளைகளை மனதார வாழ்த்திப் போர்க்களம் அனுப்பி வைப்பர். அன்புமனைவியர் தம் கணவருக்குக்கனிவுடன் விடை கொடுப்பர் அக் காலத்தில் தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை ஆகிய நான்கும்திரண்டெழும். அரசனேபடைத் தளபதியுடன் சென்று பார்த்து மகிழ்வான்.

பண்டைய அரசர் படை எடுத்த வரலாற்றைச் சிலப்பதிகாரம் விபரமாகக் கூறுகின்றது.

வடநாட்டு அரசர் இருவர், தமிழ்நாட்ரசரைப் பழித்துப் பேசினார்கள் என்று சேர மன்னன் கேள்விப்பட்டான். அடங்காச் சினம்கொண்டான். 'தமி

(12ம் பக்கம் பார்க்க)

## அரச மரத்தை

[8-ம் பக்கத் தொடர்ச்சி]

குத் தேவையான நான்கு வித ஹார்மோனையும் விருத்தி செய்வதால் கர்ப்பம் தரித்துக் குழந்தை பிறக்கும் என்பதை மருத்துவ!. விஞ்ஞான, சோதிட மேதைகளும் கண்டு அறிந்த உண்மை.

## - புத்தொளி -

# குண்டாட்டம்!

குண்டாட்டம்! 'டம் — டம் — டம்!'
கொண்டாட்டம் கொண்டாட்டம்!
வண்டாட்டம் வானில்
வருகிறதே கொண்டாட்டம்!
'குண் — டாட் — டம்' என்று
கொளுத்தி எறிகிறதே!
தீவாளி தானே
தினமும் நடக்கிறது,
பூவாளி யாலே
புகைத்தீ அணைந்திடுமா?
''தேடுதலின் போது
தவிர்க்க முடியாமல்
[மாடுகளைப் போல]
மனிசர் கொலையுண்டார்
ஆனாலும் நாங்கள்
வளைத்துப் பிடித்ததினால்
பானு வா வன்னு
பலபேர் அகப்பட்டார்!''
வானொலிக்கும் வாகினிக்கும்
வாய் நிறைந்த பொய்யாட்டம்,
ஈனர் இவர் 'வான
இரதத்தின்' பேயாட்டம்,
'குண் — டாட் — டம்' என்று
கொளுத்தி எறிகையிலே
பெண்டாட்டம் தம்பர்
பயந்து கத்திச் சாகின்றார்.
மூண்டுபேர் நின்ற
இடத்தில், ஒருமனிதன்
யாண்டு போய் மாண்டான்?
தசைகள் தமைத் தேடிக்
காவோலை கொண்டு
கவனமாய் மூடுகிறார்]
''ஆவாழி அந்தணர்கள்
வாழி ...'' இல்லை, இல்லையண்ணே
தேவாரம் இல்லை திருவாசகம் அண்ணே
பாவம் மனையாள், பொற்
சுண்ணம் இடிக்கின்றாள்!
யாவும் முடித்துச்
சுடலைக்குப் போகையிலே
'செல்' ஒன்று வந்து
கணக்காய் விழுகிறதே!
எல்லோர்க்கும் அந்தச்
சுடலையிலே 'கொண்டாட்டம்!
உண்டை போல் ஒன்றங்கு
வந்து விழுந்ததினால்
வண்டி லுடனே
விறகும் எரிகிறதே.
கூட இந்த நாட்டில்
பிறந்து விட்ட குற்றமடா!
மாடுகளும் கூட
மரணிக்க நேர்கிறதே!
பாடுங்கள் இங்கு அப்
பலஸ்தீனம் தேவையில்லை.
பண்ணை ஒன்றே போதும் அண்ணே
பலஸ்தீனம் தேவை இல்லை.
நாலுகட்டை என்றால்
நறுக்காக 'செல்' அடிப்பார்
காலடியில் என்றால்
'கணேசு வெடி' சுடுவார்!
பாடு சபா[ஸ்] அண்ணே!
பலஸதீனம் தேவையில்லை.

— சத்தியசீலன்

## எமது சிறுகதை

# தியாகமெனும் தீ




நேரம் அதிகாலை நாலு மணி. கொழும்பின் ஒதுக்குப்புறமான இந்தப்பகுதி விழித்து விட்டது. தெருக்குழாய்களைச் சுற்றி ஆங்காங்கே குளிக்கும் பெண்களின் கூட்டம். நீரிலூறிய அவர்களின் ஆடைகள் கண்ணாடிகளாகி மின்னொளியில் அவ்வுடல்களை விளங்கப்படுத்த முயன்றன ஆதவனோ வழக்கமான மனநிலையிலில்லை. அவன் எதையும் கவனியாமல் வேகமாக நடந்து கொண்டிருந்தான்.

வேகமாக வந்து சந்தியின் நட்டநடுவே நின்றான். 'அந்தப் பக்கம் 173 ம் இலக்க பஸ்ஸும் தெரியும். இந்தப் பக்கம் 195 வந்தாலும் தெரியும் எது வருதோ ஓடிப்போய் ஏறியிடலாம். ஆனால் பத்மாவை இன்னும் காணேல்லை' என்று முணுமுணுத்தபடி இரண்டு பஸ் தரிப்பிலும் நில்லாமல் இடை நடுவில் நின்றான். வாழ்க்கைப் பயணத்தில் கூட அவனுடைய மனநிலைமை அதுதான்.

பஸ்விரைவில் வர வேண்டும் என்ற நினைப்பைவிட பத்மா வரவேணும் என்ற நினைப்பு அவனுடைய மனத்தை வேகப்படுத்தியது. அவள் சிலகாலமாகஅவனுடைய காரியாலயத்தில்வேலை பார்க்கிறாள். இங்கே பக்கத்தில் ஜம்பட்டா வீதியில் தானிருக்கிறாள். ஒரே பஸ் பிடித்து பதினைந்து மைல் தூரம் அவனுடன் பயணம் செய்து மறுபடி அவனுடன் பஸ்ஸில் வந்து ஒரேயிடத்தில் இறங்கி... என்று அவனுடன் பகல் வேளை முழுவதும் செலவிடுகின்ற போது அவனுடைய சுயவிவகாரத்தை அறிந்து, அவளும் மனம்நெகிழ்ந்து விட்டதால் அவர்களுக்கிடையில் ஒரு உறவு வளர்ந்து விட்டது.

''எனக்கு வதனியிலை விருப்பமில்லை'' என்றொரு நாள் அவன் சொன்ன போது பத்மா இடைமறித்தாள்'' ஏன்? அவளுக்கென்ன குறை?'' என்று கேட்டாள்.

''உண்மையிலை வதனியிலை ஒரு குறையுமில்லை. என்ரை. அத்தான்ரை தங்கச்சியெண்டதைத்தவிர'' என்றான் அவன்.

''நான் சீரியசாகத்தான் கேட்கிறன்... நீங்க உண்மையைச் சொல்லுங்கோ...ஏன் உங்களுக்கு வதனியைப் பிடிக்கயில்லை. நீங்க ஒரு ஸயன்ஸ் கிறாயுவற். வதனியொரு ஹோம் ஸயன்ஸ் டிப்ளோமா அதோடை அவள் அழகியெண்டும் சொல்லிறீங்க பிறகேன் அவளை வெறுக்கிறீங்க'' என்று பத்மா கேட்டாள்.

''அவளைக் குறை சொல்லேலாது எண்டாலும் அவளின்ரை குடும்பம் ஒரு கேடுகெட்ட குடும்பம். முதலிலை எங்கடை அக்காவைப் பெண் கேட்ட வேளையிலை அதுகள் சீதனமும் கேட்கயில்லை. வேறையொண்ணும் கேட்கயில்லை ஆனால் கலியாணம் முடிச்சுக் கொஞ்சநாள் போக முதலே அத்தானைச் சீதனம் கேட்கச் சொல்லித்தூண்டத் தொடங்கியிட்டினம்.

அத்தான்ரை தங்கச்சியெண்டாலும் முந்திப் பிந்திக் கதைச்சுப் பேசிப் பரிச்சயப்பட்டது கூடஇல்லை. எந்த விதப்பந்தபாசமுமில்லாதவளை அதுவும் கலியாணத்தைப் பற்றி நான் கனவிலும் நினைக்காத வேளையில, பெண்சாதியெண்டுகொண்டரப் பார்த்தால் எனக்கு ஆத்திரம் வாராதா? என்று ஆத்திரமாகச் சொன்னான் ஆதவன்.

''ஆனால் என்ன செய்யிறது உங்கடை அக்காவிற்காகஅதை செய்யாமல் விட ஏலாதே? அதோடை வதனியும். .'' என்று சொல்லிக் கொண்டு போனவளை மேலும் பேசவிடாமல் இடைமறித்தான் ஆதவன்''செய்து தான் என்ன பிரயோசனம் அக்காவை அடிச்சுதைச்சு அந்தப்பாவியை பைத்தியமாக்கிட்டானே!'' என்றான் அவன் அந்த உரையாடலின் தொடர்ச்சியை நினைவில் இரைமீட்ட ஆதவன் அக்காவை நினைத்து விட்டான். ''ஐயோ! அக்கா உனக்காக நான் இவ்வளவு செய்தும் நீ விசர் வைத்தியசாலையிலே வாழுகிற நிலையாச்சே! என்று எண்ணிய போது அவன் கண்கள் கலங்கின.

அக்காவைச் சாட்டாக வைத்து மிரட்டி வதனியை மனைவியாகக் கொண்டு வந்து நிறுத்திய போது அவனுக்கு வயது இருபத்து மூன்று மட்டும்தான் அவன் அதற்கு முன் யாரையும் மனதில் நினைத்து வைத்திருக்கவில்லை. என்றாலும் தனக்கு வரவேண்டியவளின் குணநலன் தகுதிகளைப்பற்றிக் கற்பனை செய்து வைத்திருந்தான்! அப்படிப்பட்ட ஒருத்தியைக் கண்டதும் கல்யாணம் செய்யாமல் ஓடி ஆடிக் காதல் கொண்டாடிப் பின் கல்யாணம் செய்யக் கனவு கண்டான் - கல்யாண வாழ்வும் குடும்பப் பொறுப்பும் பயங்கரம் - ஆனால் காதல் இனிமையும் மகிழ்ச்சியுமுள்ளது. என்கின்றகற்பனை அவன் மனதிலிருந்து. இளமைஎன்பது வாழ்க்கையின் வசந்தம் அதை அழகு படுத்துபவை கனவுப் பூக்கள். அவற்றுக்குச் சுகந்த வாசனை தருபவை காதல் நினைவுகள் என்ற அவனுடைய மனதின் கோட்டை திடீர்க் கல்யாணத்தால் சிதறித் போயிற்று.

நல்ல உறைப்புப் புளிப்பான கறிசோறுகளுடன் மதிய போசனத்தைக் கற்பனை செய்து வைத்திருந்தவனுக்கு பசிவர முன்பே மதியபோசனமாக அளவு மீறிய இனிப்புப் பண்டங்களை வாயுள் திணித்தால் எப்படிக்குமட்டல் நிலை வருமோ அப்படியான உணர்வினையே அவனுடைய கல்யாணம் அவனுக்கு உண்டாக்கியது. இப்படித்தான் கடந்த காலத்தைப்பற்றிய சிந்தனை விசாரணைகளில் ஊர்ந்து கொண்டிருந்தவன் அதை சற்று நிறுத்திக்கொண்டு ''ஏன் இன்னும் பத்மாவைக் காணவில்லை? என்று தன்னைத் தானே கேட்டான்,

''கடவுளே! என்வாழ்க்கையை நீ மிகவும் அலங்கோலப்படுத்தி விட்டாய். நான் ஏன் இப்படியிருக்கிறேன்? என்மேலும் என் பிள்ளை மேலும் அன்பைச் சொரிந்தபடி, குடும்பப் பாங்கான அழகியாக வதனி வீட்டிலே தவமிருக்கிறாள். ஆனால் நான்?'' என்று அவன் தன்னுள் தன்னை விமர்சிக்க முயன்றான்.

''என்ன பெரிய யோசனை?'' என்று பக்கத்தில் பத்மாவின் குரல் கேட்டது, அவன் கனவை விட்டு நிஜத்துக்கு வந்தான்.

''ஏன் லேற்?'' என்று உஷாரான குரலில் அவன் கேட்டான்.

''நித்திரையாலெழும்பப் பிந்திவிட்டது''.

''இப்ப நேரம் ஐந்தே கால்''.

''நாலே முக்கால் பஸ் வரேல்லையா?''

''இண்டைக்கு நாலேமுக்காலும் வரேல்லை. ஐந்து மணியான்கூட வரேல்லை.''

''இனி ஐந்தரையானிலை போனால் ஒபீசுக்கு லேற்றாயிடும் என்றாள் பத்மா. இருவரும் போய்விட்ட நேரத்தைப்பற்றி மனதுள் அங்கலாய்த்தனர்.

வீட்டிலிருந்து பஸ்ராண்ட் வரை துணையாகப் பத்மாவைக் கூட்டிவந்த தம்பி, ''அக்கா! இவர் நிற்கிறார். உனக்குப் பயமில்லைத்தானே! நீ இவரோடை நின்று பஸ் எடுத்துப்போ. நான் வீட்டுக்குப் போகிறேன்'' என்று விடைபெற்றான். அவன் எப்போதுமே அப்படித்தான் செய்வான்.

தம்பி போன பின்னரும் பத்மா சற்றுநேரம் மௌனமாக நின்றாள். நேற்று ஒபீசில் கேலியாக ஆதவன் சொன்ன வார்த்தைசள் இன்னும் அவள் நெஞ்சை அறுத்துக்கொண்டு நின்றன. அவன் வழக்கமாகவே பத்மாவிடம் மனம் திறந்து கேலி பேசுவான்.

''கண்ட கிணத்துத் தண்ணியளையும் குடிச்சு வாயைப் பழுதாக்கக்கூடாது சில தண்ணியள் வாயிலே பட்டால் தாகம் போகாமல் நாக்கு வரண்டுபோறதும் உண்டு. எண்டாலும் ஒரே கிணத்துத் தண்ணியையே குடிச்சுக்கொண்டிருக்கிறதும் ஏலாத காரியம்தான் என்று அவன் ஒரே பெண்ணிடம் திருப்தியடையமுடியாது என்கிற அர்த்தத்தில் காரியாலயத்தில் கேலியாக அவன் சொல்லும்போது மற்றவர்களுடன் சேர்ந்து பத்மாவும் சிரிப்பாள். ஆனால் நேற்று அவன் அதேவிடயத்தை அவன் வேறு கோணத்தில் சொன்னபோது அது அவளுடைய மனதை வேறுவிதமாகப் பாதித்தது ''நானென்ரை பெண்சாதியைக் கட்டுப்படுத்துகிறதேயில்லை. அவள் எங்கை போனாலும் யாரோடை போனாலும் எனக்கு கவலையில்லை. ஆனால் அவளெண்டால் என்னை விட்டிட்டு வேறையாரையெண்டாலும் நிமிர்ந்து பார்க்கவும் தயாராயில்லை எண்டு நிக்கிறாள். நான்தான் உப்பிடி அப்பிடி வாய்ச்சதுகளோடை போய்வருவன் என்று ஆதவன் சொன்னபோது அவன் தன் மனைவியை வெறுத்தாலும் மதிப்பதைக் கண்ட பத்மாவுக்குப் பொறாமையாயிருந்தது. அதேவேளை விரும்பித் தன்னுடன் திரியும் பெண்களை அவன் தரக்குறைவாக நினைப்பதையும் அவள் கண்டாள்.

''அப்பிடியெண்டால் இவரோடை எத்தினையோ சிறுக்கியள் திரியுதுகளோ? அதுகளிலை நானுமொண்டோ? அப்ப இவ்வளவு நாளுமிவர் ''நீயில்லாமல் நானில்லை. உன் காதல் இல்லாவிட்டால் நான் இத்தறுதிக்குச் செத்திருப்பன் எண்டு சொன்னதெல்லாம் பொய்யா? என்று நேற்றுத்தொடக்கம் நெஞ்சில் நெருப்பைக் கொட்டும் அந்தச் சிந்தனையைச் சற்றுக் கட்டுப்படுத்திக்கொண்டு ஆதவனைப் பார்த்தாள். அவனும் ஏதோ யோசனையிலிருப்பது தெரிந்தது.

''என்ன அப்பிடியோசனை?'' என்று கேட்டாள் பத்மா.

''ஒண்ணுமில்லை... விடியக் காலைமையே அவளோடை சண்டையாய்ப் போச்சு'' என்று அவன் தன் சொண்டைக் கடித்தான்.

''ஏன் என்ன விஷயம்?'' கேட்டாள் பத்மா.

''விடிய எழும்பினவுடனேயே அழுதாள் அதுதான்'' என்றான் ஆதவன்.

''என்னத்துக்காகவாம் அழுகை?''

''கனவு கண்டாளாம்''.

''என்ன கனவு?''

''நான் எங்கோ பாதை தவறிப் போகிறேனும். தான் பின்னாலேயே வருகிறாளாம். இடையில் வந்த ஒருத்தி தன்னை வேறுவழியில் துரத்த தான் இருட்டு வழியிலே பாதை தெரியாமல் கல்லிலும் முள்ளிலும் ஓடுகிறாளாம்.''

இதுவா கனவு? இதற்கா அழுதா? என்று கேட்டுச் சிரித்தாள் பத்மா.

அந்தக் கனவின்படி யாரும் சாகவேண்டி வருமாம் எண்டு அழுகிறாள்'' என்றான் ஆதவன். பத்மாவுக்கு ஒருமாதிரியாகிவிட்டது. ''சிலவேளை உண்மையாகவும்கூடும்'' என்று முனகினாள். ''ஆனால் இடையில் வாற ஒருத்தி நானாயிருக்கக்கூடாது... காதலின் கௌரவம் தெரியாதவனுடைய பொழுதுபோக்குக்கு உதவியாயிருந்து அநியாயமாக அப்பாவிப் பெண் சாவதற்கு உடைந்தையாக நானிருக்கத் தேவையில்லை'' என்று அவள் மனம் குழறியது

''எனக்கும் இன்டைக்கு மூட் சரியில்லை. இனி ஒபீசுக்குப் போனாலும் பேச்சுவிழும். நான் வீட்டை போகப் போறன்'' என்றாள் பத்மா.

நானும் அப்பிடித்தான் லீவு போட யோசிக்கிறன். அப்ப இண்டைக்கு ரெண்டுபேரும் எங்காவது ஹோட்டலிலை காலமையும் மத்தியானமும் சாப்பிட்டு ஒருபகல் படமும் பாத்தாப்போச்சு என்றான் ஆதவன்.

''குறை நினைக்காதையுங்கோ ஆதவன் பிழையெண்டு தெரிஞ்சால் திருந்துறது மனுஷத்தனம் நான் உங்களோடை திரியிறதை அதுகும் உங்களோடை அலையுற குப்பையளுக்குள்ளை ஒண்டாக அலையுறதைப்பிழையெண்டு நேற்றுடை விளங்கியிட்டன் என்றாள் பத்மா...

''ஐயோ! பத்மா நான் பகிடிக்கு...''

அவனை மேலும் சொல்லப் பத்மாவிடவில்லை.

''பகிடியோ வெற்றியோ அதுதான் உண்மை. அந்த அபிப்பிராயம் உங்கடை மனதிலுமிருக்கு. அதைப் பிழையெண்டு நான் சொல்லேல்லை. என்ரைபிழையும் எனக்கு விளங்கியிட்டது. உங்கடை நன்மை தீமையைப் பார்க்க உங்க மிஸிஸ் இருக்கிறா. உங்களுக்காக பரிதாபப்படவும் கூடித்திரியவும் நான் யார்? எனக்கென்ன உரிமை? உதாரணமாக இண்டைக்கு நீங்க இறந்து போனால் கூடுற சபையிலே உங்க நெஞ்சிலை. தாலி கழட்டிப்போட்டு. தன் பிரிவுத்துயரை சுதந்திரமாகக் கொட்டிதீர்க்கிற உரிமைஉங்க மனைவிக்குத்தான் எனக்கில்லை. அடுத்தவன் பொருளை இரவலாக அனுபவிக்கிறதும் பிழைதான். அதை நான் முந்தி உணரேல்லை. இப்ப உணர்ந்திட்டன் என்ரைபிழையாலை வதனியின்ரை வாழ்க்கையும் பாழ்... என்ரை வாழ்க்கையும் முற்றாய் அழியப்போகுது தயவுசெய்து இனி என்னோடை நீங்கபழக வேண்டாம்'' சொல்லிவிட்டு தன் வீட்டை நோக்கி நடந்தாள் பத்மா.

ஏமாற்றமும் ஆவேசமும் துரத்த ஓட்டமும் நடையுமாகத் தன்வீட்டை நோக்கிப் போன ஆதவன் வழக்கத்துக்கு மாறாக வாயிற்கதவுகள் பூட்டாமல் சும்மா சாத்தப்பட்டிருப்பதைக்கண்டு திகைத்தான். வீடு முழுதும் தேடியும் வதனியும் பிள்ளையுமில்லை. அவனது மேசையில் ஒருகடிதம் இருந்தது.

அன்புள்ள அத்தான்

நீங்களோ இருதலைக் கொள்ளி எறும்பாக நிற்கிறீர்கள் இந்த மனைவியென்ற பாரத்தை எப்படி விட்டொழிப்பது? காதலி பத்மாவை என்ன செய்வது? என்று கலங்குகிறீர்கள். எனக்கு ஒரு அதிர்ஷ்டம் ஆண்டவன் தந்தார். அதுதான் எப்போதும் சலனமில்லாத என்மனது இதநாள்வரை உங்களை நினைத்துவாழ்ந்தேன். இனியும் நான் அதைச் செய்தால் இருண்டு பாழான என்வாழ்வு மட்டுமல்லாமல் ஒன்றுமறியாப் பாலனான என்பிள்ளையின் வாழ்வும் சூனியமாயிடும். பெற்றோர் துருவங்களாகிவிட்ட சூழ்நிலையில் எப்

(12ம் பக்கம் பார்க்க)

# பணம்

வேதனையைக் கொட்டுதற்கோ வார்த்தையில்லை
விழிதனிலே கண்ணீரா சிறி மில்லை
பாசத்தில் அணைப்பதற்கோ யாருமில்லை
பந்துக்கள் நினைப்பதற்கோ பணமுமில்லை.

காலத்தால் கெட்டழிந்த இந்த நிலை
கவலைகளோ அடுத்தடுத்துத் துன்ப மலை
வாழ்வென்றால் இத்தனையும் நிறைந்த கலை
வருவதுதான் வரட்டுமினி என்ற நிலை.

★

பணமிருந்தால் பலதும் வரும்
பகைவனுக்கும் உறவு வரும்
பாராட்டுக் குவிந்து வரும்
பதவிகளோ தேடி வரும்
பாசமது நாடி வரும்
பந்தமெல்லாம் கூடி வரும்
பணம் படுத்தும் பாடு இது
பலர் கண்ட உண்மை இது.

— வ. யோகானந்தசிவம்.

# இவ்வாரம் எப்படி?

### மேடம்

சிலர் வாழ்க்கையில் பிரிவு வேதனையைத் தரும். பணம் பறி போவதற்கு இடம் ஏற்படலாம். முகமன் பேசுவோர் விடயத்தில் முன் எச்சரிக்கையுடன் இருக்கவும். சகோதரர் ஒருவரின் விடயமாகச் சஞ்சலப்படக் கூடும்.

### இடபம்

சுற்றுடலில் புதிய உற்சாகம் ஏற்படும். உள்ளத்தில் உறுதி தோன்றும். தாய் வழியால் பெருமைகள் சேரும். சுகத்துடன் வாழ்வும் கிடைக்கும். எதிரிகள் வரவேற்பார்கள். மருத்துவத் துறையில் ஈடுபடுவோருக்கு மகத்தான வாரம்.

### மிதுனம்

கடமையாற்றுமிடத்தில் புதிய நண்பர்களைத் தேடிக் கொள்வீர்கள். பொறியியலாளர்களுக்குப் பொன்னான வாரம் வேண்டிய ஒருவரிடமிருந்து வரவேற்கத்தக்க செய்தி கிடைக்கும். பெண்களுக்குப்பொறுமை அவசியம்.

### கடகம்

ஆசை அலைகளால் அவப்பெயருக்கு இடமுண்டு. குறுக்கு வழிகளில் இறங்குவதால் பிணக்குகள் தோன்றும் வீட்டில் சிறுபிணி தலைதூக்கும். சிறிய விடயத்திற்குப் கூடப் கோபம் தோன்றக்கூடும். வாகனச் சாரதிகள் இவ்வாரம் அவதானம் வேண்டும்.

### சிங்கம்

சுவையான சம்பவங்கள் மனதுக்கு மகிழ்ச்சியைத் தரும். காதலர்களுக்கு கனிவான வாரம். சந்திப்பின் மூலம் பயனுள்ள தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள். காத்திருந்த கண்களுக்குச் களிப்பூட்டும் விருந்தொன்று கிடைக்கும்.

### கன்னி

கடமைகளில் தடை ஏற்படும். பிறர் நம்பிக்கையைத் தவிர்த்துக் கொள்ளவும். தீர்க்கமான சிந்தனையால் சிறப்புண்டு. சிறு பிணி வாட்டும்.

> **இன்று**
>
> மாதம் — மாசி
> திகதி - 25[1986 -03-9]
> கிழமை - ஞாயிறு
> திதி - சதுர்த்தசி முன் இரவு வரை
> நக்ஷத்திரம் - அவிட்டம் காலை 9-25 ன் மேல் சதயம்

ஆதரவு தருபவர்களுடன் பகைத்துக் கொள்ள வேண்டாம்.

### துலாம்

ஏக்கத்தின் சாயல் நிழல் போலத் தொடரும். சிலர் வாழ்க்கையில் பிரிவுத் துயர் வேதனையைத் தரும் ஆத்திர உணர்ச்சியை அடக்கவும். முதியவர் ஒருவர் முன்னேற்றத்திற்கு வழிகாட்டுவார். பெண்களுக்கு மத்திமமான வாரம். வணிகர்களுக்கு வரவில் திருப்தியுண்டு. காதல் ஜோடிகளுக்கு கனிவான சம்பவங்கள் இடம் பெறும்.

### விருச்சிகம்

எதிலும் விரக்தி மனப்பான்மை உருவாகும். வேண்டாத நடவடிக்கையின் மூலம் நண்பர்களைப் பகைத்துக் கொள்ள நேரிடலாம். வணிகர்களுக்கு இவ்வாரம் எதிலும் அவதானம் வேண்டும். காதலர் மத்தியில் மனத்தளர்ச்சி ஏற்படும் பொறுமை வேண்டும். முருகப்பெருமானை வழிபடவும்.

### தனுசு

கொள்கையில் அதிக பற்று ஏற்படும். இனசனக் கொண்டாட்டங்களுக்கிடமுண்டு. களஸ்திரயவழியால் பொருள் பொருள் வரவிற்கும் இடமுண்டு. பெண்களுக்குக் கடமையில் அதிகம் கவனம் வேண்டும். வணிகர்கள் அதிக முதலீட்டைத்தவிர்க்கவும். அர்த்த நாரீஸ்வரரை வழிபடவும்.

### மகரம்

வாய்வுக் கோளாறு உடல் நலத்தைப் பாதிக்கலாம். அவசரப் போக்கினுல் அருமையான சந்தர்ப்பத்தை இழக்க நேரிடும். வணிகர்கள் அதிக முதலீட்டைத் தவிர்த்துக் கொள்ளவும் குடும்பத்தில் அமைதி குன்றும்.

### கும்பம்

எந்த விடயத்திலும் அவசர முடிவைத் தவிர்த்துக் கொள்ளவும். உடல் நிலையிலும் அதிக கவனம் செலுத்தவும். பொதுவாக இவ்வாரம் உடற் சோர்வுக்கும் தொழிலில் மந்த நிலைக்கும் இடமுண்டு.

### மீனம்

குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிரச்னைகள் பல நல்ல முடிவைத் தரும். பேச்சில் நிதானம் பெருமையைத்தரும் தொழில் விடயங்களில் திருப்திக் குறைவான சம்பவங்கள் இடம் பெறும். சிநேகித வழியால் நன்மைகள் உண்டு.

★ தவக்காலம் 4-வது ஞாயிறு

# இறை பிரசன்னத்தை உணர்க

இஸ்ராயேல் மக்கள் பாரவோனின் அதர்ம ஆட்சியில் அனுபவித்த கொடுமைகளைக் கண்ணுற்ருர் இறைவன் மனம் நொந்து எழுப்பிய அவலக் குரலைச் செவியுற்ருர். தன் விடுதலை பிரசன்னத்தை மோயீசனுக்கு வெளிப்படுத்தினுர் பாலும் தேனும் பொழியும் பரந்த நாட்டிற்கு மக்களை அன்போடு அழைத்துச் சென்ருர். இறைபிரசன்னம் எப்போதும் மீட்புப் பிரசன்னமே. இவ் இறைபிரசன்னத்தை இனம் கண்டு கொள்வதும் அவர் விடுக்கும் அழைப்பிற்குப் பதில் அளிப்பதும், கொடுக்கப்படும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்துவதும் ஒவ்வொருமனிதனதும்பொறுப்பு. இறை பிரசன்னத்தை உணருவதற்கும், அதை அனுபவிப்பதற்கும் தடைக்கற்களாக சிற்றின்ப ஆசைகளும், சுயநல நாட்டங்களும் போலி மதிப்பீடுகளும் மனிதன் உள்ளத்தில் குடிகொண்டு விடுகின்றன. இறை - மனித உறவில் என்றும் பிரமாணிக்கமாக இருப்பவர் இறைவனே. ஆதலால் காலம் தாழ்த்தும் இறைவன் தொடர்ந்தும் சந்தர்ப்பங்களைத் தருகிருர்.

திராட்சைத் தோட்டத்தில் [நல்ல நிலத்தில்] அத்தி மரத்தை நட்ட ஒருவன், தனக்கு மூன்று ஆண்டுகள் பழம் கிடைக்கவில்லையே என்று ஏமாந்தான். இருந்தாலும் மேலும் ஓராண்டைக் கொடுப்பது அவனது தாராள சிந்தையே. ஆனுல் பழம் கொடுக்காத மரம் தன் அழிவையேசேர்த்துநிற்கிறது. இது போல சுயநலத்தாலும், ஆணவத்திமிராலும், உடைந்த இறவுகளைச் சரிப்படுத்தக் கிடைக்கும் சந்தர்ப்பங்களைத் தள்ளி விடுவதும், ஒருவன் உளமாற்றமடைய மறுப்பதும் அவன் தன்வாழ்வில் அழிவுக்கு வித்திடும் செயலாகும். அவன் தனக்குத் தானே விலங்கிடுகிருன்.

புனித சின்னப்பர் கொரிந்து வாழ் மக்களுக்கு எழுதிய திருமுகத்தில் கூறுவது போல இஸ்ராயேல் மக்களின் வரலாற்றிலிருந்து கற்றுக் கொள்வோம், அவர்களில் பலர் இறைபிரசன்னத்தை வெறுத்து இறைவன் விரும்பிய உறவை துண்டித்ததால் அவர்களது பிணங்கள் பாலை நிலமெங்கும் சிதறுண்டு போயின ஆயினும் இது தண்டனையின் காலமல்ல: இரக்கத்தின் காலமே. காலம் தாழ்த்தும் இறைவனுடன் ஒப்புரவாக அவர் பிரசன்னத்தை உணர்ந்து அவர் பக்கம் திரும்பினுல் நம் வாழ்வு வளமடையும் இவ்வுலகிலும் எமது பிரசன்னம் பயனுள்ள தாகவும் எம்வாழ்வு பலன் தரும் அத்திமரம் போலவும் அமையும்,

சுவாமி ஜீவா போல்

(அ. ம. தி.)

# மன நிறைவு பெற...

மனநிறைவுபெற தர்ம நெறிக்குட்பட்டு வாழவேண்டும். பக்தியோடு, எமது உணர்வுகளை ஒருங்கிணைத்து இறைவனைத் தியானிக்கவேண்டும். ஒழுங்கான கட்டுப்பாட்டுடன் இதயத்தைத் தூய்மையான நிலையில் காத்து, சிந்தனு சக்தியைப் பெருக்குவதற்கு, தெய்வீகச் சுடரொளியைக் காண்பதற்கு ஆத்மிகத்தில் சிறிது பயிற்சி செய்துவரல் வேண்டும். காலையில் பிரம முகூர்த்தத்தில் நித்திரை விட்டெழுந்து நீராடி அமர்ந்து கண்ணை மூடிக் கொண்டு, வெளிப்புறப் பார்வைகளைப் பாராது உள்ளுணர்வுகளின் செயல்பாடுகளை, இறைவனில் செலுத்தி, காதுகளினுல் சத்த அலைவரிசைகளைக் கேளாது, ஐந்து நிமிடங்கள்வரை இறைவனை தியானித்தால் அத்தியானத்தின் மூலம் உட்கலந்த சூக்கும அலைகளைக் கொண்ட ஒரு ஒளியைக் காணலாம். இப்படிக் காண்பதற்கு காலையும் மாலையும் தியானிக்கவேண்டும். இத் தியானப் பயிற்சியின்மூலம் பேரின்பநிலை காணமுடியும்.

ஒருவன் பரிசுத்தமான நல் வாழ்வு வாழ்வதாக இருந்தால். அவன் பிரமச்சாரிய விரதத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். பஞ்சமாபாதகங்களைகன விலும்நினைத்தல்கூடாதுஇறைவன்என்பவன்எல்லா உயிரினங்கள்பாலும் அன்புள்ளவராக இருக்கின்ருர். எல்லா உயிரினங்களுக்கும் அப்பாற்பட்டும் உள்நின்றும் இயங்கிக் கொண்டிருக்கின்ருர். ஆகையினுல் ஓர் உயிரையும் கொல்லாது அறச்சார்புடையவராக வாழ்ந்து புலால் உண்ணுமையாகிய மேலான அறவிரதத்தைக் கடைப்பிடித்து உண்மையான அறச்சார்புடைய உழைப்பால் உழைத்து வாழ்ந்து உடலையும், உள்ளத்தையும் தூய்மையான நிலையில் பேணிக்காத்து ஆத்மாவைப் பரிபக்குவநிலைக் குட்படுத்தி மேலான இன்பம் பெறுவதற்கான முழு முயற்சியில் ஈடுபடுதல் வேண்டும்.

உடலுக்கும் உள்ளத்துக்கும் ஊறுவிளைவிக்கக்கூடிய உணவு வகைகளையும் பானவகைகளையும் தவிர்த்தல்வேண்டும். மேலும் யோகாசனப் பயிற்சிகளை மேற்கொண்டால் தன்னைத்தானே கட்டுப்படுத்துவதற்குரிய பக்குவநிலைவரும். ஒருவனுடைய உள்ளுறுப்புகளின் ஒழுங்கான செயல்பாடுகளைச் செயல்படுத்த வேண்டுமானுல் யோகப் பயிற்சி இன்றியமையாத சாதனமாகும். இவ் யோகாசனப் பயிற்சியின் மூலமும் ஒழுங்கான கட்டுக்கோப்பான வாழ்க்கையின் மூலமும் மன நிறைவுபெற்று மகிழ்ந்திடலாம்.

வாழ்க்கைத் தேவைக்கு ஒழுங்கான தொழிலின் மூலம் கிடைக்கும் வருமானத்தை சிக்கனமாகச் செலவுசெய்து தெய்வம்காட்டும் தெய்வீகப் பாதையில் வாழவேண்டியது நமது கடமையாகும்.

உடலுறுப்புக்களின் சீரான இயக்கத்தினுல்தான் ஒருவனுடைய ஆரோக்கியமான வாழ்வு அமைந்திடும். அவன் பழகும் நல்ல டண்புகள் மனிதனை மேல்நிலைக்குக் கொண்டு சென்று அவனது வளமான வாழ்வுக்கு வழிவகுக்கும். மனிதனுக்கு உயிர்கள் மீது இரக்ககுணம் ஏற்பட்டு ஓர் உயிரையும் கொலைசெய்யான் ஊன் உண்ணுன். உயர்ந்த பண்பாடுமேம் ட அசுரகுணம் அழிந்து அன்பும் அருளும் அமைதியும் பெற்று மன நிறைவோடு இனிது வாழலாம். சைவசமயத்தின் கிரியை முறைகளிலும் அனுஷ்டானங்களிலும் தினசரி தனது செயல்முறைத் திட்டத்தை அனுசரித்துவருவதால் ஒவ்வொரு செயல்முறைகளிலும் அவனது வாழ்வு செம்மையுறும்.

அ. சி. அமிர்தநாதன்.

திருமலை
க.வே.ரவீந்திரன்

### பண்டைய

[10-ம் பக்கத் தொடர்ச்சி]

ழரசனின் ஆற்றலை அறியாது இகழ்ந்துபேசிய அரசரை அடக்கிவிடுவேன்' என்றவீரசபதம் செய்தான். அறிவுரை பகர்வதற்காக அவையில் அமர்ந்திருந்த அறிஞன் எழுந்தான். ''வடநாட்டின் மீது படையெடுக்க இதுவே நல்ல நேரம். மாற்ருர் புறங்காட்டி ஓட இப்பொழுதே புறப்படுக'' எனப் பகர்ந்தான்.

''சேரன் தலைநகராகிய வஞ்சிமா நகரில் போர்முரசு ஒலித்தது. வீரர்கள் வீறுகொண்டெழுந்தார்கள். வஞ்சிமாலைஅணிந்த அசரன் பட்டத்து யானை மீது அமர்ந்து போருக்குப்புறப்பட்டான். மலையும், நதியும் கடந்து பகைவர் நாட்டை அடைந்தான். பகையரசர் படைகளைச் சின்னு பின்னப் படுத்தினுன். வெற்றி வாகை மாலைசூடி மகிழ்ந்தான். தமிழரசரைப் பழித்த சிற்றரசர் இருவரையும் சிறை பிடித்துச் சினம் தணிந்தான்'' என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது.

''விண்ணை இடிக்கும்
தலைஇமயம் எனும்
வெற்பை யிடிக்கும் திறலுடையார் - சமர்
பண்ணிக் கலிங்கத்
திருள்கெடுத்த தமிழ்ப்
பார்த்திபர் நின்ற தமிழ்
நாடு'' என்று தமிழரது தளரா வீரத்தைப் பாடினுர் பாரதியார்.

### சிறுகதை

[11ம் பக்கத் தொடர்ச்சி]

போதும் வறண்டு புயல்வீசும் பாலைவனமான குடும்பத்திலே நல்லதொரு குழந்தைப் பயிரை வளர்த்தெடுக்க முடியாது. எனவே நான் இங்கிருந்து என்பிள்ளையுடன் போகிறேன். ஆனுல் என் பெற்ருரிடம் போ மாட்டேன். என் வாழ்வு பறிபோனதற்கு சரி அரைப்பங்கு பொறுப்பானவர்கள் அவர்கள் நான் எங்கள் கல்யாணத்தின் முன்பு உங்களுக்கு இந்தக்கல்யாணத்துக்கு சம்மதமா? என்று அறியச் சொல்லி எவ்வளவு வற்புறுத்தியும் அவர்கள் அதைச் செய்யவில்லை. அதேவேளை என்வாழ்க்கையை அழித்ததில் சரி அரைப்பங்கு பொறுப்பு நீங்கள். ஏதோ உங்கள் அக்காவுக்காக தியாகம் செய்வதாக நினைத்து என்னைச் சுமையாக ஏற்றுக் கொண்டீர்கள். தியாக சிந்தனை மனதோடு வளர்வது தெய்வீகமானது. தன்னுடையதென்ற எல்லாவற்றையும் இழக்கத் தயாரானது அதுபற்றிஎதுவுமறியாத நீங்கள்இந்தக்கல்யாணத்தைச் சுமையாக உங்கள் தலையில் தூக்கிவைத்துக்கொண்டு உங்களையும் என்னையும் அழித்துவிட்டீர்கள் உங்கள் தியாகத் தீ என்னையும் உங்களையும் அழித்தது போதும் இனி என் பிள்ளையை அழிக்க முதலே நாங்கள் போகிறேம் தேட வேண்டாம்''

இப்படிக்கு
வதனி.

(யாவும் கற்பனை)

### விருந்தோ பெரு விருந்து

புதிய சேலைகள் உடுத்து
அதற்குப் பொருந்த
காப்பும் கைக்கடிகாரமும்
உயர்த்திப் போட்ட
கொண்டையுமாக
நாங்கள் வைப்போம்
விருந்தோ பெரு விருந்து
தாயின் குருதியில் கறியே
சமைப்பினும்!

சென்ற ஊர்வலம்
சொல்லிய கோஷங்கள்
முழுதாய்-மதம் முடிவதன்
முன்னர் மறந்து போயிற்று!

கல்வியும் காலனல்
கருச் சிதைவுற்றதெனக்
கூறிய வார்த்தை
காற்றிடை எங்கோ
அர்த்தம் இழந்தது
நாங்கள் இங்கே
இலை விரித்துள்ளோம்
இல்லை முள்ளும் காண்டியும்
பரப்பி உள்ளோம்
யாவரும் வருக
விருந்தே உண்க!

தலையிழந்த பாலகனின்
தலைவிதியில் தலை பின்னி-
பூச்சூடி தைலம் போடு
வோம்

அகதிகள் முகாம்களின்
அவலக் குரல்களைக்
கேட்டும்
கேளாக் கேளிராய்
கொழும்பில் கூடும் -
கிரிக்கெட் ரசிகராய்

அக்கரைப் பற்றில்
எஞ்சிப் போன
எலும்புத் துண்டில்
விறகே எரியினும்

யாவரும் வருக - நாளை
நாம் வைக்கும்
விருந்தே உண்க

புதிய சேலைகள் உடுத்து
அதற்குப் பொருந்த
காப்பும் கைக்கடிகாரமும்
உயர்த்திப் போட்ட
கொண்டையுமாக
தாயின் குருதியில்
கறிகள் வேகினும்
யாவரும் வருக - நாளை
நறுமணமாக நாங்கள்
கொடுக்கும்
விருந்தே உண்க!

— உஷை.

இக்கால கட்டத்தில் நடத்தப்படும் அர்த்தமில்லாத விருந்துகள் பற்றிய ஒரு அபிப்பிராயம்.

### ஊர்வலம்

காரிருண்டு மழை பொழிந்து
கலைந்திடாத ஊர்வலம்
ஊர்திகள் தடம் புரண்டு
ஓய்ந்திடாத ஊர்வலம்
போர் விமானக் குண்டு வீச்சால்
பொலி விழந்து போனதே.

— யோகி

## கடைசிநேர வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

தி. ஜெயதேவநேசன் ஆகிய எனது அடையாள அட்டை இலக்கம் 603274016 V மானிப்பாய் - யாழ்ப்பாணம் வீதியில் பிரயாணத்தின் போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும் இல. 4 கொழும்புத்துறை வீதி, இரத்தின பவனம் சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்
(C 1150)

### மணப்பந்தல்

யாழ்ப்பாண இந்து வேளாள மணப்பெண்ணுக்கு T. A. அல்லது அதனோடு ஒத்துவரக் கூடிய மணமகள் தேவை. சீதனம் நன்குதரப்படும். மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம்.
[C 1138]

### விற்பனைக்கு

புங்குடுதீவு பெருங்காடு குறிச்சியில் பிரதான வீதியில் குடியிருப்பிற்கும், விவசாயத்திற்கும் ஏற்ற 22பரப்புக்காணி உடனடி விற்பனவுக்குண்டு. இக்காணி புங்குடுதீவு இந்து, கிறிஸ்தவ ஆலயங்களுக்கும், தபாலகம், வங்கி, கிராமசபை மகாவித்தியாலயம் முதலிய பொது நிலையங்களை சூழப் பெற்றுள்ளது. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி; சங்கரப்பிள்ளை ஆறுமுகம் (வையாபுரி) 11ம் வட்டாரம் நெடுந்தீவு, சங்கரப்பிள்ளை ஏரம்பு, 12ம் வட்டாரம், புங்குடுதீவு. (C 1143)

**எம்பயர் திரையில்**
10-30, 2-30 6-30
ரஜனிகாந் - ஸ்ரீதேவி
**நான் அடிமை இல்லை**

LIDO Jaffna
THE STORY OF THE DOLLS
Colour
(Strictly for Adults)

**வெலிங்டன்**
10-30, 2-30. 6-15
சிவகுமார், மோகன்
அம்பிகா கவுண்டமணி
நடித்த
**நான் பாடும் பாடல்**
(கலர்)

**உஷா மினி**
COMMANDO—5
நவீன ஆயுதங்கள் கொண்ட பயங்கரவாதக் குழுவினருடன்- தேர்ச்சி பெற்ற கொமாண்டோக்கள் மோதும் தாக்குதல்கள் கொண்ட சண்டைப் படம்.


## இலங்கை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]


விவாதிக்கப்பட்டுவருகின்றன. உலகின் பல்வேறு பகுதிகளிலுள்ள நாடுகளின் பிரதிநிதிகளும், மனித உரிமை ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் இப் பிரச்னை சம்பந்தமாக குரலெழுப்பியுள்ளனர்.

இங்கிலாந்து கனடா, அவுஸ்திரேலியா, தென் அமெரிக்க நாடுகளின் அரசபிரதிநிதிகளும், உலகின் பல்வேறு பகுதிகளில் இயங்கும் மனித உரிமை ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் இலங்கை இனப்பிரச்னை பற்றி குரலெழுப்பியதாக அறிவிக்கப்பட்டது.

இக்கமிஷனின் 1ம், 2ம் கூட்டத்தொடர்களில் இலங்கைத் தமிழர் பிரச்னை முக்கிய இடம் வகித்தமை இங்கு குறிப்பிடத் தக்கது. (ய-செ)


உ

**45-ம் நாள் நினைவஞ்சலி**



**வீரசுந்தரம் விஜயகுமார் (குமார்)**
சுன்னாகம்.
தோற்றம்: 1961-03-21
மறைவு: 1986-01-24

அரசகூலிப்படை குண்டர்கள் 24ம் திகதி பலி எடுத்த எம் அருமை மகனே! உம்மை எம்மால் என்றும் மறக்கமுடியாது. தாய், தந்தைக்கு அன்புத் தெய்வமாய், கூடிப்பிறந்த சகோதரர்களுக்கு, இமயத்தின் சிகரமாய் உற்றார், உறவினருக்கு தவப்புதல்வனாகவும், நண்பர்களுக்கு அருமைசகோதரனாகவும், தமிழ்த் தாயின் வயிற்றில்பிறந்து தனது ஒருதுளி இரத்தத்தையும் தமிழ்தாய் பூமாதேவிக்கு நீராகஇறைத்து விட்டு எம்மையெல்லாம் ஆறுத்துயரில் ஆழ்த்தி விட்டு இறைவனடி சேர்ந்தாயோ!

உன் பிரிவால் வாடும்
தாய், தந்தை, சகோதரர்கள், சகோதரிகள்,
மற்றும் உறவினர்.
(C 1149)


## நாட்டைவிட்டு...

[1 ம் பக்கத் தொடர்ச்சி]

பங்களாக்களிலிருந்து சென்று தோட்டங்களைப் பார்வையிட ஹெலிகொப்டர் வசதியைக்கூட அளிக்க அரசாங்கம் உறுதியளித்தபோதிலும பல தோட்டத் துரைமார் இதையும் நிராகரித்துள்ளனராம்.

தங்களால் தோட்டங்களை நிர்வகிக்க முடியாதிருப்பதுடன் தொடர்ந்தும் அங்கிருக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகவும் அவர்கள் அச்சம் தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

மலைநாட்டிலுள்ள தோட்டங்களில் பலவற்றைப் பறங்கி இனத்தவர்களும், உயர்மட்ட சிங்கள சமூகத்தைச் சேர்ந்தவர்களுமே தொடர்ந்து நிர்வகித்து வருகின்றனர்.

அண்மைக்காலங்களில் சில தோட்டப்பகுதிகளில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களைத்தொடர்ந்து தோட்டத் துரைமார் இதுவரை காலமும் நடத்தி வந்த சொகுசான வாழ்க்கையை இப்பொழுது அனுபவிக்கமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டதுடன் நிம்மதியாகக் கடமையாற்றமுடியாமலிருப்பதாகவும் தெரியவருகிறது.

தொடர்ந்து தோட்டங்களை நிர்வகிக்க மறுக்கும் துரைமார் வெளிநாடுகளுக்குச் செல்லும் நடவடிக்கைகளில் துரிதமாகச் செயல்பட்டு வருவதாகவும் ஒருதகவல் தெரிவக்கிறது.

தோட்டத் துரைமாரின் இந்த விலகல் நடவடிக்கை அரசாங்கத்துக்கு பெரும் தலையிடியைக் கொடுப்பது மட்டுமன்றி நாட்டின் பொருளாதாரத்துக்குப் பெரும் நட்டத்தை ஏற்படுத்தலாம். [மா]

## மீண்டும்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் போராளிகளுக்கும் ஆயுதபபடைகளுக்குமிடையில தொடர்ந்து நடைபெறும் சமரை இடைநிறுத்த மீண்டுமொரு போர்நிறுத்த உடன்பாட்டினைச் செய்துகொள்ள இலங்கைத் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. அத்துலத் முதலி விரும்புவதாக லண்டன் பி. பி. ஸி. செய்திவெளியிட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ய-செ)

## கடல் வலயச்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

டது.

யாழ். நகரில் 19-ம்திகதிகாலை பேராலயத்திலிருந்து ஆர்ப்பாட்ட ஊர்வலம் புறப்பட்டு. நகர் வீதி வழியாக கச்சேரிக்குச் சென்று, ஜனாதிபதியிடம் சமர்ப்பிப்பதற்காக அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றினைக் கையளிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

பருத்தித்துறை, நெடுந்தீவு, ஊர்காவற்றுறை மயிலிட்டி கடற்றொழில் சங்கங்கள் தவிர்க்கமுடியாத காரணங்களினால், நேற்று சமூகமளிக்காதபோதிலும் கூட்டத்தில் எடுக்கப்பட்டமுடிவுகளை ஏற்றுக்கொள்வார்கள் என நம்பப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது (க)


## சவூதி அரேபியாவுக்கான பிரயாண ஒழுங்குகள்

பிரயாணத்தை மேற்கொள்பவர்கள் உடனடியாக பாஸ்போட் உட்பட 6 படங்களுடன் கீழ்கண்ட விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

**என். பாலா,**
**திருச்செல்வம் வீதி,**
**கோண்டாவில் கிழக்கு,**
**கோண்டாவில்.**
[பலாலி வீதி கோண்டாவில் சந்திக்கு அருகாமையில்]
C 1147


## இராணுவ நடமாட்டம்

# 2800 வழக்குகள் முடக்கம்!

## நீதிமன்ற இயக்கம் ஸ்தம்பிதம்!!

[யாழ்ப்பாணம்]

பருத்தித்துறை நீதிமன்றக் கட்டிடக் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருக்கும் 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட முக்கிய வழக்கைக் கோவைகளை அங்கிருந்துஎடுக்கமுடியாத ஒருசூழ்நிலை நிலவுவதாக நீதிமன்ற உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறையில் அண்மைக் காலங்களில் இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்தும் நீதிமன்றக் கட்டிடங்களுக்கு அண்மையில் இராணுவத்தினர் நடமாடிக் கொண்டிருப்பதாலும் நீதிமன்றப்பக்கம்செல்வதற்குச் சகல ஊழியர்களும் அஞ்சுகின்றனராம். இப்பொழுது நீதிமன்றம் அங்கு இயங்காமல் இருப்பது குறிப்பிடத் தக்கது. (மா)

## பறையனாலங்குளத்தில் நிரந்தர இராணுவ முகாம்!

[பசிலைப்பள்ளி]

பறையனாலங்குளத்தில் தற்போது இராணுவம் நிலை கொண்டிருக்கும் இடம் நிரந்தர இராணுவ முகாமாக தொடர்ந்து இயங்கலாமென சந்தேகிக்கப்படுகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை இராணுவம் சென்றடைந்த பின்னர் அப்பகுதியில் பந்தோஸ்து பலப்படுத்தப்பட்டு வருகிறது.

வவனியா-மன்னார் வீதியும், மதவாச்சி - மன்னார் வீதியும் சந்திக்கும் இடத்திலேயே பறையனாலங்குளம் அமைந்துள்ளது.

## திக்கம்கடற்பகுதி..

(1ம் பக்கத்தொடர்ச்சி)

தேடுவதில் ஈடுபட்டிருந்ததாகத் தெரியவருகிறது.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து பருத்தித்துறை முகாமிலிருந்து பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. கடற்படை பீரங்கிப்படகுகளிலிருந்தும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. நேற்று நண்பகல்வரை இத்தாக்குதல் நீடித்தது

இத்தாக்குதல்களால் கடற்கரையில் கட்டப்பட்டிருந்த மீனவர்களுக்குச் சொந்தமான படகுகள் பல சேதமடைந்துள்ளன. (மா)

## மட்டுநகர்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கப்படுகிறது

சமாதான வலயம் சம்பந்தமாக மட்டக்களப்பு பிரஜைகள் குழு அப்பகுதி இணைப்பதிகாரியைச் சந்தித்து வேண்டுகோள் விடுத்திருந்தது

இவ்வலயத்துக்குள் ஆயுதப்படையினர் பிரவேசிக்கக்கூடாதென்றும் அதேசமயம்போராளிகள் ஆயுதங்களுடன் நடமாடுவது தவிர்க்கப்படவேண்டுமென்றும் சுடத்தல் கொள்ளையடித்தல் போன்ற சம்பவங்கள்நிறுத்தப்படவேண்டுமென்றும் இச்சந்திப்பின்போது உரையாடப்பட்டது. [ய-மா]

## வட இந்தியா...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

இணைந்து இலங்கை அரசாங்கத்தின்மீது தாக்குதல்ஒன்றை நடத்துவதே இவர்களதுதிட்டமெனவும் இந்த வட்டாரங்களின் மூலம் அரசாங்கம் அறிந்துள்ளதாம்.

## பலாலி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

நோக்கி ஹெலிகொப்டர் தொடர்ச்சியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. அந்த வானிலிருந்த ஒருவர் பீதியடைந்து வானை நிறுத்திவிட்டு பாதுகாப்பான இடத்துக்கு ஓடினார் தொடர்ந்தும் ஹெலிகொப்டரிலிருந்து அந்தநபரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது படுகாயமடைந்த அந்தநபர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டதும் அங்கு மரணமானார்.

இதனால் புன்னாலைக்கட்டுவன், ஊரெழு போன்ற கிராமங்கள் பதற்றநிலை அடைந்தன. (மா)

## 1000 மீட்டர் வலயம், குண்டுவீச்சு: சட்டத்தரணிகள் போர்கொடி

[யாழ்ப்பாணம்]

ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயம், விமானக் குண்டு வீச்சு, ஆகியவற்றுக்கு எவ்விதம் எதிர்ப்புத் தெரிவிப்பதென்பது பற்றி ஆலோசிப்பதற்காக யாழ் மாவட்டத்தைச்சேர்ந்த சட்டத்தரணிகள் அடுத்தவாரம் கூடவிருக்கின்றனர்.

சட்டத்தரணிகள் சங்கக்கூட்டத்தை உடனடியாகக் கூட்டுமாறு 33 சட்டத்தரணிகள் மகஜரொன்றினைச் சமர்ப்பித்ததைத் தொடர்ந்து பேற்படி சங்கத்தின் அவசரக் கூட்டம் அநேகமாக இம்மாதம் 12 ம் திகதி சட்டத்தரணிகளால் யாழ்ப்பணத்தில் கூட்டப்படுமென கூறப்படுகிறது. (க)

## விவசாய பூமியில் சட்டத்தரணிகள்

[புலோலி]

பருத்தித்துறை நீதிமன்றங்களில் வழக்குகளை நடத்தி வந்த பல **சட்டத்தரணிகள்** விவசாயத்தில் ஈடுபட்டுவருவதைக் காணக்கூடியதாகவுள்ளது

இன்றைய சீரற்ற நிலையினாலும், வழக்கு விடயங்கள் ஸ்தம்பித்துள்ளமையினாலுமே சட்டத்தரணிகள் விவசாய முயற்சியில ஈடுபட்டுள்ளனர்

சில சட்டத்தரணிகள்வெளி நாடுகளுக்கும் சென்றுள்ளனர். விவசாயத்திலீடுபட்டுள்ள சட்டத்தரணி ஒருவர் நமது நிருபரைச் சந்தித்தபோது விவசாயம் தனக்கு சிறப்பாக கைகொடுத்துள்ளதாக மகிழ்ச்சி தெரிவித்தாராம்.

## தகர விளக்கு வீழ்ந்து தாயார் தீக்கிரை

[யாழ்ப்பாணம்]

ஐந்து வயது மகன் அலுமாரியைத் தள்ளி வீழ்த்தியபோது அதற்குமேல் வைக்கப்பட்டிருந்த தகரவிளக்கு அருகில் நின்ற தாயாரின நைலோன் சேலையில் வீழ்ந்து தீப்பற்றியதால் தாயார் தீக்கிரையானார்.

அரியாலையைச் சேர்ந்த த. சியாமளாதேவியின்பரணவிசாரணையில் இத்தகவல் தெரிய வந்தது.

யாழ். மரணவிசாரணை அதிகாரி க சேசவன் மரணவிசாரணை நடத்தினார்.

சம்பவதினம், தாயாரும்இரு பிள்ளைகளும் அறைக்குள் இருந்தபோதே இச்சம்பவம் நடந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

விசாரணையின்பின் விபத்து மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. [க]

## மலிவு விற்பனை

**இலங்கை மட்பாண்ட கூட்டுஸ்தாபனம்**
**ஓர் செங்கல் தொழிற்சாலை**
**ஒட்டுசுட்டான**

முதலாம்தர துவாரச் செங்கற்களும் முதலாம் தர தட்டை ஓடுகளும் 10-03-1986 தொடக்கம் 09-04-1986 வரை விநியோகம் செய்யப்படும்.

| | | தற்போதையவிலை | புதியவிலை |
|---|---|---|---|
| | | ரூ. ச. | ரூ. ச. |
| ஓடு | 1000 | 2.875-00 | 2,515-65 |
| துவாரக்கற்கள் | 1000 | 2,610-00 | 2,283-75 |

மிகுதி விபரங்களுக்கு தொழிற்சாலை காரியாலய நேரங்களில் தொடர்பு கொள்ளவும்.

**முகாமையாளர்.**
செங்கல் ஓட்டுத் தொழிற்சாலை,
இலங்கை மட்பாண்ட கூட்டுஸ்தாபனம்,
ஒட்டுசுட்டான்.

C 1099


## வவனியாவிலிருந்து 20 பேர் 'பூஸா'வுக்கு!

வவனியா)

வவனியாவில் உள்ள வன்னி ஆயுதபடை முகாமில் விசாரணைக்கென தடுத்துவைக்கப் பட்டவர்களில் 20க்கு மேற்பட்டவர்கள் 'பூஸா' முகாமிற்கு கடந்த வாரம் அனுப்பி வைக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

## சட்டத்தரணி கார் கடத்தப்பட்டது

(மட்டக்களப்பு)

கல்லடியைச் சேர்ந்த சட்டத்தரணி நாகராசா நேற்று முன் தினம் காலை காரில் நீதிமன்றம் சென்று கொண்டிருந்த பொழுது இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டு காத்தான்குடிவரை கொண்டு செல்லப்பட்டு அங்கு அவர் இறக்கிவிடப்பட்ட பின்னர் கரை மாத்திரம் அந்தநபர்கள் கடத்திச் சென்றுவிட்டார்களாம். (மா)

## சடலம் பெற்றோரிடம் ஒப்படைப்பு

(மட்டக்களப்பு)

மட்டுநகர் தாமரைக்கேணியில் விசேட பொலிஸ் பிரிவினரின் துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியான வே. மேகராசா (லிங்கன்) என்பவரின் சடலம் அவரது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம், பிற்பகல் தொலைப்சித்திணைக்களத்தில் 'லைன்ஸ்மென்'ஆக கடமையாற்றும் மேகராசா, தனது காதலியுடன் உரையாடிக் கொண்டிருந்த பொழுது பொலிசாரால் ஓட விட்டு சுட்டுக்கொல்லப்பட்டது தெரிந்ததே.

பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த இவரின் சடலத்தைப்பெற்றோரிடம்ஒப்படைக்குமாறு, மட்டக்களப்பு பிரஜைகள்குழு செயலாளர் திரு. சாம் தம்பிமுத்து இணைப்பதிகாரியிடம் கேட்டிருந்தார். இதனைத்தொடர்ந்து சடலம் ஒப்படைக்கப்பட்டது. (மா)


யாழ். மக்களுக்கு

**ஓர் நற்செய்தி**

வெளிநாட்டுப் பயணத்திற்கான விமான டிக்கட்டுகள், பாஸ்போட், விசா, பிரயாணிகள் காசோலைகள் மற்றும் பிரயாணங்களுக்குத் தேவையான சகல ஒழுங்குகளும் செய்துதரப்படும்.

தொடர்பு கொள்ளுங்கள்:

**விஜயமாலா ரவல்ஸ்,**
213, 215, செட்டியார் தெரு, கொழும்பு - 11.
தொலைபேசி: 547205


நேரில் தொடர்புகொள்ள முடியாதவர்கள் யாழ்ப்பாணத்தில் தொடர்புகொள்ளவேண்டிய விலாசம்:

திருமதி சி. கஜமுகலிங்கம்,
ரஜனி நிலையம், ஊரியாட்டி, சுன்னுகம்.

9315



**BRITE SOAP WASHES BRIGHT**




Net Weight 130 Grams Price: Rs. 2-25

கைதேர்ந்த தொழிலாளர்களால்
விஞ்ஞான முறைப்படி தயாரிப்பவர்கள்
TURBOW COMMERCIAL - ALAVEDDY

★ ★ ★ ★

பிரகாசமான சலவைக்கு
**பிறைற் சோப்**

[A 239]



இந்த இக்கட்டான சூழ்நிலையில்
உங்கள் T. V.யை திருத்துவதற்காக
கொழும்புக்குக் கொண்டுபோகவேண்டிய
அவசியமே இல்லை.

**நெஷனல்** T. V. றேடியோ றேடியோ கசற்

எதுவானுலும் தரம்குன்ருத நெஷனல் உதிரிப் பாகங்கள்கொண்டு திறமைமிக்க தொழில்நுட்ப வல்லுனரால் திருத்திக்கொடுக்கப்படும்.

நெஷனல் பிரதம விற்பனையாளர்:

**V. K. இராசரத்தினம்**
95, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 23447

A-335



# யானை மார்க்
## ஒவ்வொரு போத்தலிலும் மேலதிகமாகக் கிடைக்கிறது




சிலோன் கோல்ட் ஸ்ரோஸ் லிமிட்டெட் ரூ: 2/10 முதல்

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற கொக்குவில் மேற்கைச் சேர்ந்த நல்லதம்பி சின்னத்துரையின் மரணசாதனமில்லாச் சொத்துக்களின் விடயத்தில்,

— மரணமெய்தியவர்.

மரணசாதன நியாயாதிக்கம் T/3937

நல்லதம்பி சின்னத்துரை கைம்பெண் பாக்கியம் கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

எதிராக

1. சின்னத்துரை துரைசிங்கம்
2. சின்னத்துரைசண்முகலிங்கம் கொக்குவில் மற்கு கொக்குவில்.
3. சின்னத்துரை இரத்தினசிங்கம்
4. சின்னத்துரை சிவராசா கொக்குவில் மேற்கு,கொக்குவில் தற்பொழுது டெயிமிலர் மேற்கு ஜேர்மனி
5. சின்னத்துரை சுந்தரம்
6. சின்னத்துரை மகள் ஜெயலட்சுமி கொக்குவில் மேற்கு, கொக்குவில்
7. சின்னத்துரை அன்னலிங்கம் கொக்குவில் மேற்கு, கொக்குவில் தற்பொழுது ஈர்லண் கொலண்ட்

— எதிர் மனுதாரர்கள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986-ம் ஆண்டு பங்குனி மாதம் 14 ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர்தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

இன்று 1986-ம் ஆண்டு தை மாதம் 07 ம் திகதி

நீதிமன்றக்கட்டளைப்படி,

கு. குலசிங்கம்.
பதிவாளர்.

தயாரித்தது:
பொ. நவரத்தினம்.
மனுதாரின் சட்டத்தரணி
[C 1118]

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த கந்தையா நித்தியரத்தினத்தின் மரணசாதனமில்லாத சொத்துக்களின் விடயத்தில்

மரணமெய்தியவர்:

மரணசாதன நியாயாதிக்கம் இல T/3954

கந்தையா நித்தியரத்தினம் கைம்பெண் மங்கையற்கரசி கொக்குவில் கிழக்கு, கொக்குவில்

— மனுதார்.

எதிராக

[பராயமற்றவர்]

1. நித்தியரத்தினம் நிரூ... கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

[சட்டப்பாதுகாவலர்]

2. கந்தையா ஆனந்தமணி, அம்மன்ரோட், சந்தர்மடம், யாழ்ப்பாணம்.

[2 ம் எதிர்வாதி 1 ம் எதிர்வாதியின் சட்டப் பாதுகாவலராக]

— எதிர்மனுதாரர்கள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனமில்லாத சொத்தை நிருவகிப்பதற்கு மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986-ம் ஆண்டு சித்திரை மாதம் 04 ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப் பட்டுள்ளீர்.

இன்று 1986 ம் ஆண்டு மாசி மாதம் 28 ம் திகதி.


நீதிமன்றக்கட்டளைப்படி.

கு. குலசிங்கம்.
பதிவாளர்

வரைதல்
பொ. நவரத்தினம்
மனுதாரின் சட்டத்தரணி.
[C 1097]

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## 'ஓட்டோஸ்' குமாரசுவாமி



வடபகுதியில் ஒரு சில தனியார் ஸ்தாபனங்களில் கொள்ளைகள் தலைதூக்கிய காலத்தில், உயிரை துச்சமென மதித்து கொள்ளையரை எதிர்த்துப் போராடி துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியான கொடிகாமம் 'ஓட்டோஸ்' குமாரசுவாமியின் நினைவு தினம் இன்றாகும்.

தனியார் ஸ்தாபனங்களில் தினமும் கொள்ளைகள் நடைபெற்றுவரும் இந் நேரத்தில் அதனை எதிர்த்து, மக்களும், ஸ்தாபனங்களும் இயக்கங்களும் குரல் எழுப்பும் இச்சமயத்தில், அமரர் குமாரசுவாமியின் துணிச்சலையும் வீரத்தையும், ஸ்தாபனத்தில் வைத்துள்ள பற்றையும், ஒவ்வொருவரும் நினைத்துப் பார்ப்பது பொருத்தமாகும்.

புடவைக் கட்டுப்பாட்டு பரிசோதராக தென்பகுதியில் ஆண்டுகள் பணியாற்றிய இவர் அரசாங்க உத்தியோகத்தை உதறித்தள்ளி விட்டு கால் நூற்றாண்டுக்கு முன்னரே தான் பிறந்த பூமிக்கு சேவையாற்ற புறப்பட்டார். யாழ். நகரில் 'ட்ரேட் அன்ட் ரான்ஸ் போட் கம்பெனியை உருவாக்க உழைத்து அதில் கணக்காளரானார்.

யாழ். ஓட்டோஸ் லிமிட்டட்டில் நீண்டகாலம் பணியாற்றினர். பின்னர் யாழ் ஐக்கிய வியாபார சங்கத்தின் இயக்குனர் சபையில் ஒருவராகி அங்கு உதவிப் பொது முகாமையாளரானர் அச் சமயமே துப்பாக்கிச் சூட்டுக்கு பலியானர்.

சச்சரவு இணக்கசபை தலைவராகவும் சமாதான நீதிவானாகவும் கொடிகாமம் மின் விநியோக சபை தலைவராகவும் பணியாற்றினர். இவர் சிறந்த சேவகர் மட்டுமன்றி சமயத்தொண்டருமாவார்.

-வி கே.

## மானிப்பாய் கோவில்பற்று ப. நோ. கூ. சங்கம் பகிரங்க ஏலவிற்பனை

சங்கத்தின் இசுசு லொறிக்கு பாவிக்கப்பட்ட உதிரிப்பாகங்களும், பழுதடைந்த தளபாடங்களும் 15-3-86 சனிக்கிழமை பி. ப. 1-00 மணிக்கு சங்க காரியாலயத்தில் வைத்து ஏலத்தில் விற்பனை செய்யப்படும். மேலதிக விபரங்களை சங்க வேலைநேரத்தில் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

பொது முகாமையாளர்,
மானிப்பாய் கோவில்பற்று ப. நோ. கூ. சங்கம் [A 346]

## உடன் மலிவு விற்பனை

நல்ல தண்ணீர், மின்சாரம், போக்குவரத்து வசதி சகல பிரையோசனங்களும் நிறைந்த வீடுவளவு 8 பரப்புகாணி தொழிற்சாலை அமைப்பதற்கு ஏற்ற இடம்.

வ. சி. இராசையா

C 1069 வடலி அடைப்பு, பண்டத்தருப்பு.

## வை. எம். சீ. ஏ. இயக்கச்சி வீடமைப்புத்திட்டம் சனசமூக நிலையக் கட்டிடம்

பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்தும் பதிவு செய்யப்பட்ட சங்கங்களிடமிருந்தும் இயக்கச்சி வை. எம். சீ. ஏ. வீடமைப்புத் திட்டத்தில் உள்ள 36-வது வீட்டுக்காணியில் சனசமூக நிலையத்திற்கான கட்டிடம் அமைப்பதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

1. கேள்விக்காரர்கள் கேள்விகளைச் சமர்ப்பிக்கு முன்னர் வேலைகள் தொடர்பான வரைபடங்கள் மற்றும் விபரங்களை மீளளிக்கமுடியாத வைப்புத் தொகை ரூபா 50-செலுத்தி இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.
2. கேள்விப்பட்டியல்கள் 21-3-86ம் திகதி நண்பகல் 12-00மணிக்கு முன் Y. M. C. A. அலுவலகத்தில் திரு. ஜே. என். பொன்னையா டம் கையளிக்கப்படல் வேண்டும். C-1115

## இன்று உதைபந்தாட்டம்

[யாழ்ப்பாணம்]

உரும்பிராய் திருக்குமரன் ஞாயிறு பி. ப. 4-30க்கு விளையாட்டுக்கழகத்தால் நடைபெறவுள்ளது. நடாத்தப்படும் 15 வது வருட ஊரெழு மருயல் வி. க. 7 பேர் கொண்ட உதைபந்து வும், கொக்குவில் பொற்பதி தாட்ட சுற்றுப்போட்டி ஐ. வி. கவும் இப்போட்டியில் யின் இறுதியாட்டம் இன்று மோதுகின்றன. (மா)


## CLASSES

INSTITUTE OF TECHNICAL STUDIES IN INDIA

The following Courses Commences in India for Girl Students.

(i) Diploma in Advanced Computer Programming. (12 Months)

(ii) Diploma in Telex Operating. (3 Months)

HARII HARAN ENTERPRISE

337, Palaly Road, (Campus Junction) Jaffna.

(C-1132)



புதிதாக ஆரம்பம்

உங்கள் நலனுக்கும் சௌகரியத்துக்கும்

## வைத்திய நிபுணர் ஆலோசனை நிலையம்

இரவு பகல் சேவை

SPECIALISTS CHANNELLING SERVICE AVAILABLE

## VICTORIYA POLYCLINIC

AND NURSING HOME

59, விக்டோரியா ரோட். யாழ்ப்பாணம்.

A 348 (Near Subhas Tourist Hotel)



## TOEFL

TEST of ENGLISH as a FOREIGN LANGUAGE

America, Canada, Norway போன்ற நாடுகளின் Colleges and Universitiesகளில் Higher Studiesஐத் தொடர விரும்புவோருக்கும் அந்த நாடுகளில் Employment Opportunitiesகளை எதிர்பார்ப்பவர்களுக்கும் இப்பரீட்சையில் திறமைச்சித்தி அவசியம்.

Weekend Classes are Commencing on: 15-3-86.

ஆசிரியர்: பிரபல ஆங்கில விரிவுரையாளர்
Mr கந்தையா நவரேந்திரன்

முழுப்பயிற்சிக்கும் கட்டணம்:

ரூபா 250/- மட்டுமே

## CANTABIA INSTITUTE

21, MAIN STREET, JAFFNA.

PHONE: 24201. A-340



## பிரயாண ஒழுங்கு

★ கனடா ★ ஜெர்மனி

★ பிரான்ஸ் ★ இத்தாலி

ஆகிய நாடுகளுக்கு

உடனடிப் பிரயாண ஒழுங்குகள்

செய்து எங்கள் முகவர் உங்களை அழைத்துச் செல்வார்

மத்திய கிழக்கு நாடுகளில் வருமான ஆதரவும் பிரயாண ஒழுங்குகளும் செய்து தரப்படும். தஸ்தாவேஜுகளுடை தொடர்பு கொள்ளவும்.

அத்துடன் பாஸ்போட், BOND சகல நாடுகளுக்கு மான விமான ரிக்கற்றுக்களும் துரிதகதியில் செய்து தருகிறோம்.

தொடர்பு:-

GROUP ATLANTIC TRAVELS

(சிங்கள மகாவித்தியாலயம் முன்பாக)

163, Hospital Road, Jaffna.

A-349

ஈழநாடு
வார மலர்
THE EELANADU VARAMALAR

# கூழாங்குளம், வடகாடு, கன்னாட்டி, கணேசபுரம் பகுதிகளில் சீருடையினர் கெடுபிடி தொடர்கிறது!

[பச்சிலைப்பள்ளி]

வவனியா - மன்னார் வீதியிலுள்ள கன்னாட்டி, கூழங்குளம், வடகாடு, கணேசபுரம் ஆகிய கிராமங்களில் சீருடையினரின் கெடுபிடியினால் தொடர்ந்து பதற்றம் நிலவியே வருகின்றது.

அங்கு இடம்பெற்ற சம்பவங்களினால் மலையகத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்து குடியிருந்த தமிழ் மக்களே பெருமளவு பாதிப்படைந்துள்ளார்கள்.

கடந்த புதன்கிழமையொறிகளில் கன்னாட்டிக் கிரமத்திற்கு வந்த சீருடையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் கோபாலபிள்ளை என்ற கடை உரிமையாளர் உட்பட இருவர் ஸ்தலத்திலேயே பலியாகி உள்ளன.

இன்னும் மூவர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை தொடக்கம் இப்பகுதியில் சீருடையினரால் கைது செய்யப்பட்ட பல மலையகத் தமிழ் மக்கள் பற்றிய எதுவித தகவலும் கிடைக்காததினால் அவர்களது மனைவிமார், பெற்றோர் ஆகியோர் வெள்ளிக்கிழமை (07 - 03 - 86) காலை வவனியா கச்சேரியில் உள்ள உயர் அதிகாரிகளைச் சந்தித்து முறைப்பாடு செய்தனர்.

கன்னாட்டி கிராமத்தில் சுமார் 9 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுப் உள்ளதாக தெரியவருகிறது மக்கள் அ பகுதிக்குச் செல்வதற்கு தயக்கம் காட்டுகிறார்கள்.

மேற்படி சம்பவங்களைத் தொடர்ந்து இடம்பெயர்ந்த ஏறத்தாழ 300 பேர் பெரியதம்பனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் தஞ்சம் புகுந்ததுடன் அப் பாடசாலையுய்ஸ்தபித்துளளது.

டறையனலங்குளம், கன்னாட்டி ஆகிய இடங்களிலுள்ள சில பாடசாலைகளும் இடப்பெயர்ந்தவர்களுக்குப் புகலிடம் அளிப்பதற்காக மூடப்பட்டுள்ளன.

## பிள்ளைகளைப்பெற அவசர உத்தரவு!

[தெஹ்ரான்]

ஈரானிலுள்ள சகல பெண்களும் உடனடியாகத் தய்மைப்பேறு பெறவேண்டுமென, ஈரானிய அரசு அவசர உத்தரவொன்றைப் பிறப்பித்துள்ளது என இந்திய வார சஞ்சிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது

ஈராக், ஈரான் யுத்தத்தில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கடந்த ஐந்தாண்டில் இறந்துவிட்டதால், உடனடியாக சனத்தொகை அதிகரிப்பு அவசியமென ஈரானிய அரசாங்கம், கருதுவதால் இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது இவ்வுத்தரவையடுத்து, ஈரானிய கன்னிப்பெண்கள் பலர் அயல் நாடுகளுக்குச் சென்றுவிட்டனர். (கெ)



# 'அடுப்போடு வாழ்ந்த நெருப்பு'களின் 10 மைல் ஆர்ப்பாட்டபேரணி!

[யாழ்ப்பாணம்]

சர்வதேச மாதர் தினத்தையொட்டி நேற்றுக் காலை நல்லூர் கந்தசாமி கோயிலடியிலிருந்து சுமார் ஆயிரத்திற்கு மேற்பட்ட மாதர்கள் கலந்துகொண்ட மாபெரும் ஊர்வலமொன்று சுமார் 10 மைல் தூரம் சென்று இறுதியாக இணுவில் கந்தசாமி கோவில் முன்றலில் முடிவடைந்தது.

'ஈழமாதர் முன்னணியினர் இந்த ஊர்வலத்தை நடத்தினர் கிராமியமுற்போக்கு மாதரணி, தமிழ் மகளிர் அவை, சுதந்திரப் பறவைகள் அணி. மக்கள் நற்பணி மன்றம் ஆகிய மாதர் ஸ்தாபனங்கள் இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டன.

காலை 10 30 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோவிலடியில் ஆரம்பித்த ஊர்வலம் கோவில் வீதி, சிவன்கோவில் வீதி, யாழ்பல்கலைக்கழக வீதி யாழ். தொழில் நுட்பக் கல்லூரி வீதி. பொற்பதி வீதி, கோண்டாவில்வீதி, கே. கே எஸ் வீதி ஆகியவற்றினூடாகப் பத்து மைல்கள் வரை சென்று இறுதியாக இணுவில் கந்தசாமி கோயிலடியல் பிற்பகல் 1.30 மணிக்கு முடிவடைந்தது.

'அடுப்போடு வாழ்ந்த நெருப்புக்கள் நாங்கள் எரிப்பதற்காக எழுந்து வருகிறோம்'. 'ஈழப்போரே எமக்கு வேண்டும் இயக்கப் போர் எமக்கு வேண்டாம்', பெண்கள் என்ன போகப் பொருளா?' போன்ற பல கோஷங்களை ஊர்வலத்தில்கலந்துகொண்ட பெண்கள் கோஷித்தவாறும் கோஷங்களையுடைய அட்டைகளை கையிலேந்தியவாறும் ஊர்வலத்தில் சென்றுகொண்டிருந்தனர்.

சிறீலங்கா அரசின் சிறைக் கூடத்தில் தமிழ் பெண்களுக்குச்செய்யப்படும் சித்திரவதைகளைச் சித்தரிக்கும் ஊர்தியொன்றும் ஊர்வலத்தில் சென்றுகொண்டிருந்தது.

முற்றுமுழுதாகப் பெண்களே கலந்துகொண்டு நடத்திய இந்நீண்ட ஊர்வலத்தின் போது சுமார் பத்துக்கு மேற்பட்ட பெண்கள் மயக்கமடைந்து உடனடி சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர். அவசர சிகிச்சைளிப்பதற்காக அம்புலன்ஸ் வண்டியொன்றும் இவ்வூர்வலத்தில் வந்துகொண்டிருந்தது.

யாழ்ப்பாணத்தின் நாலா பக்கங்களிலிருந்தும் வாகனத்தில் ஏராளமான பெண்கள் வந்து ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். ஊர்வலம் சென்ற பாதைகளிலும் புதிது புதிதாகப் பல பெண்கள் அணிகள் ஊர்வலத்துடன் இணைந்து சென்றன.

இணுவில் கந்தசாமி கோவிலடியில் ஊர்வலம் முற்றுப்பெற்றதும் பொதுக்கூட்டமொன்று ஈழப் பெண்கள் விடுதலை முன்னணியின் அமைப்பாளர் செல்வி எஸ். செந்நங்கை தலைமையில் நடைபெற்றது. [ஐ]

# ஈழப் பெண்கள் விடுதலை முன்னணி அறிக்கை

(யாழ்ப்பாணம்)

''சர்வதேச மகளிர் தினமானது, ஏகாதிபத்திய யுத்தம், இராணுவ வாதம் என்பனவற்றுக்கு எதிராக தேசியசுதந்திரம், பெண்கள் சமத்துவம் என்பனவற்றைப் பெறுவதற்காகப் பெண்கள் நடாத்துகின்ற போராட்டத்துக்குரிய தினமாகும்''.

இவ்வாறு, ''சர்வதேச மகளிர் தினம்'' என்ற தலைப்பில் ஈழப்பெண்கள் விடுதலை முன்னணி நேற்று வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் தெரிவித்துள்ளது. இப்பிரசுரத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

''உலகின் பல்வேறு நாடுகளிலும் சர்வதேச மகளிர் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. இது 1910ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் 1921ம் ஆண்டிலிருந்தே நடைமுறைக்குவந்தது.

''இன்றைய காலகட்டத்தில் ஈழப்பெண்களின் நிலையை நாம் நோக்க வேண்டும். பெண்கள் என்ற ரீதியில் எமக்கு வீடுகளில் சமத்துவம் கிடைக்கிறதா? இல்லை. பெண்கள் என்பதனால் பெற்றோர், ஆண்சகோதரர்கள், கணவன், மூத்தமகன் போன்றோரால் ஏமது சுதந்திரங்கள் நசுக்கப்பட்டு அடக்கப்பட்டு நாம் நாம் அடக்கி ஒடுக்கப்படுகிறோம்.

''எமது வீதிகளில் நாம் சுதந்திரமாக, தனியாக, பயமின்றி எமது வேலைகளுக்குச் சென்றுவர முடிவதில்லை. கழுகுப் பார்வைகள், கற்பழிப்புகள், தூஷணவார்த்தைப் பிரயோகங்கள் எனப்பல 'துகிலுரியும்' பிரச்னைகளை நாம் அன்றாடம் எதிர்நோக்குகிறோம்

''எமது எதிர்கால வாழ்க்கையை நாமே தீர்மானிக்க எமக்கு உரிமையில்லை. சீதனப் பிரச்னையோ விஸ்வரூபம் எடுத்து தலைவிரித்தாடுகிறது.

''குறிப்பாக மலையகப் பெண்களுக்கோ சரியான கல்வி வசதியில்லை. பசி, பட்டினி, வறுமை, வேலைநேரத்தில் காற்று. மழை, பனி, வெயில், போஷாக்கின்மை; இதனால் குறைப் பிரசவங்கள்; இதனால் இறப்புகள், குழந்தைகளைப் பராமரிக்கும் பிள்ளைப்பராமரிப்பு நிலையங்களின் சீர்கெடுதல், குடியிருப்பு வசதியீனங்கள் இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.

''இதே போலத்தான் முஸ்லிம் பெண்களுக்கும் கலாச்சாரம், பண்பாடு என்ற போர்வையில் மிகவும் மோசமான, பிற்போக்குத்தனமான கலாச்சாரக் கட்டுப்பாடுகள்.

இவை ஒருபுறம். மறுபுறமோ ஸ்ரீலங்கா அரசின் கூலிப்படைகளின் வெறியாட்டம் பெண்களின்மீது அதிகரித்து வருகிறது. பெண்களைக்கைது செய்தல், கற்பழித்தல், வதை முகங்களில் பாலியல் வதைகளைச்செய்தல், கூலிப்படைகளின் துப்பாக்கிச் சனியனுக்கும், விமானக் குண்டுத் தாக்குதல்களுக்கும் பலியாதல் இப்படிப் பல.

''ஈழப்பெண்கள் விடுதலை பெற வேண்டுமாயின் எமது வாழ்க்கை அமைப்பு முறையிலும், சிந்தனையிலும், புரட்சிகர மாற்றங்கள் ஏற்பட வேண்டும்'' [ஐ]

## பட்டப்பகலில் திருட்டு!

(யாழ்ப்பாணம்)

வீட்டுச்சொந்தக்காரர் இல்லாத நேரம் பார்த்து பட்டப்பகலில் அங்குஇருந்தரொக்கப் பணம் உட்பட பெறுமதியான பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன.

திருநெல்வேலியிலுள்ள பொன்னம்பலம் என்பவரது வீட்டிலேயே இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

உடுபிடவைகள். கசட் ரேடியோ, 600 ரூபா ரொக்கப்பணம் ஆகியனவே சூறையாடப்பட்டவையாகும். (மா)

# திருமலை அகதிகள் முகாமில் படையினர் அட்டகாசம்!

## வடக்கு வந்துசேரும் அகதிகள் தகவல்!

(திருகோணமலை)

திருகோணமலை நிலாவெளியிலுள்ள அகதிகள்முகாமுக்குள் இராணுவத்தினர் அடிக்கடி அத்துமீறிப்புகுந்து பயமுறுத்துவதால், அந்த முகாமிலிருந்து அகதிகள் வெளியேறி வடக்கு நோக்கி வந்துகொண்டிருக்கிறார்கள்.

அகதிகள் முகாமுக்குள் இதுவரை இருதடவைகள் பயமுறுத்தல் சம்பவம்இடம்பெற்றுள்ளதாம் அச்சமங்யகளில் அகதிகளில் பலர் தாக்குதலுக்குள்ளானதாகவும் தெரிவிக்க படுகிறது.

மேலும் இந்த முகாமுக்குள் இருந்தால் உயிராபத்து நேரிடும் என்ற அச்சத்தால் தாங்கள் வெளியேறி வந்ததாக அகதிகள் தெரிவிக்கிறார்கள். (மா)

## ரஜனீஷுக்கு கிரேக்கத்திலிருந்தும் 'கல்தா'!

(யாழ்ப்பாணம்)

இன்று பெரும் சர்ச்சைக்குரியவராகக் கருதப்படும் குருபகவான் ரஜனிகிரேக்கத்திலிருந்தும் வெளியேற்றப்பட்டுள்ளார்.

கிரேக்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட குருபகவன் ரஜனீஷுக்குப் புகலிடம் வழங்க பிரிட்டன் மறுத்ததைத் தொடர்ந்து இவர் பிரான்ஸுக்கு புறப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

பொது மக்களினது நலன்களை உத்தேசித்தே, ரஜனீஷை தாம் வெளியேற்றியதாகக் கிரேக்க அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

குருபகவான் ரஜனீஷ் முதலில் அமெரிக்காவிலிருந்து வெளியேற்றப்பட்டுஇந்தியா வந்த பின் நேபாளத்துக்குச் சென்று சில நாட்கள்தங்கிருந்தார்.

## சிங்களவரிலும் பயங்கரவாதிகளாம்! —'பிரேமா'

[கொழும்பு]

''சிங்கள இளைஞர்களிடையேயும் பயங்கரவாதம் தலைதூக்கியுள்ளது. சில சிங்கள இளைஞர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டபோது, இதனை ஒப்புக்கொண்டிருக்கின்றனர்'' என்று பிரதமர் திரு. ஆர் பிரேமதாஸ கூறியுள்ளார்.

நேற்று நடைபெற்ற பொது வைபவமொன்றில் உரையாற்றிய அவர் நாட்டின் ஜனநாயகத்தையும், இறைமையையும் பாதுகாக்க மக்கள் தம்முள் ஐக்கியப்பட்டு முன்வர வேண்டும் என்றும் கூறினார்.

## நால்வர் விடுதலை

[கொழும்பு]

வவனியாவில் இந்தமாதம் 4ம் திகதி ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்ட நால்வர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு பங்குனி மாதம் 9 -ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389, 24126,

## மரண அறிவித்தல்

### திரு. தம்பு அப்புத்துரை

திரு. தம்பு அப்புத்துரை 4- 3- 86 ல் காலமானார். இவர் இராசம்மாவின் அன்புக் கணவரும், மயில் வாகனம் (பம்பாய்), லோகேஸ்வரன், கருணேஸ்வரன், தவராசா (கனடா), லோகநாதன் (USA), மகாலட்சுமி, கமலாதேவி. விமலாதேவி, புஷ்பராணி, தயாளினி, சுபேந்திரா, டில்லிராணி ஆகியோரின் அன்புத்தந்தையும், சுந்தரலிங்கம், சண்முகானந்தம், லலிதா, ரஞ்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும். மேகலா, சசிகலா, விஜிதா, டுலீப்குமார், பிரிசாந்தன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 9- 03- 86 (இன்று) ஞாயிற்றுக்கிழமை உடுப்பிட்டி துவாலி வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று இமையாணன் குடும்ப மயானத்துக்கு இறுதிக்கிரியைக்களுக்காக எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

(C-1146) துவாலி வீதி, உடுப்பிட்டி.